இலவசம்
# அரங்கம்
செய்திகள்
கிழக்கு மண்ணில் இருந்து ஒரு தொடர்பூடகம்




வார இதழ்- மட்டுநகரிலிருந்து... www.arangamnews.com வெள்ளி, பங்குனி 30, 2018. இதழ் – 06 இலவசம்

## "கிழக்கு மாகாணத்துக்கான உள்ளூராட்சிச் சபைகளில் தலைவர்களைத் தெரிவு செய்வதில் இதுவரை பெரிய குழப்பமில்லை" -- மாகாண உள்ளூராட்சி ஆணையர் --

### 9 சபைகள் பூர்த்தி – இன்னும் 23 சபைகள் மீதமுள்ளன

காரைதீவு நிருபர்

கிழக்கு மாகாணத்தில் இதுவரை 9 உள்ளூாட்சி சபைகளுக்கான தலைவர் தேர்வுகள் பெரிய குழப்பமின்றி நடந்தேறியுள்ளதாகவும் இன்னமும் 23 சபைகள் மீதமுள்ளதாகவும் கிழக்கு மாகாண உளளூராட்சி ஆணையர் எம். வை. சலீம் கூறியுள்ளார்.

இதுவரையிலான ஏற்பாடுகளை தமது ஆணைக்குழுவின் அதிகாரிகளின் உதவியுடன் ஓரளவு சுமுகமாக நடந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

கலப்புத் தேர்தல் முறை காரணமாக நாட்டில் பல சபைகளில் அறுதிப் பெரும்பான்மை இல்லாத காரணத்தால் பல சபைகளில் தலைவர் தெரிவுகள் பெரும் குழப்பத்தால் பாதிக்கப்பட்டன. இந்த நிலையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கிழக்கில் உள்ள 45 உள்ளூராட்சிச் சபைகளில் அறுதிப் பெரும்பான்மை இல்லாத நிலையில் உள்ள 32 சபைகளை கூட்டி ஆட்சியை அமைக்க உதவும் பணி உள்ளூராட்சி ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

13 சபைகளில் இப்படியான பிரச்சினைகள் இல்லாததால் அங்கு கட்சிகளோ கூட்டணிகளோ நேரடியாக ஆட்சியமைக்கும் நிலைமை காணப்படுகின்றது. எஞ்சியுள்ள 32 சபைகளில்தான் ஆட்சியை அமைத்து, சபையைக் கூட்டுவது சிரமமானதாக இருக்கும்.

ஆகவே இந்த ஒவ்வொரு சபையாகக் கூட்டி அவற்றில் ஆட்சியை அமைக்கும் பணியை உள்ளூராட்சி ஆணையர் மேற்கொண்டு வருகின்றார்.

இதுவரை அம்பாறை மாவட்டத்தில் 9 சபைகள் அமைக்கப்பட்டு முடிந்திருக்கின்றன. ஏப்ரல் 2ஆம் திகதி கல்முனை மாநகர சபைக்கான முதல் அமர்வும் நாவிதன்வெளி பிரதேச சபைக்கான முதல் அமர்வும் நடைபெறும் என்று சலீம் அவர்கள் கூறியுள்ளார்.

மீதமுள்ள அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களுக்கான முதல் அமர்வுகள் ஏப்ரல் 16ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

தொடர்ச்சி... (பக்கம் -09 )


## மட்டக்களப்பு வலயத்தில் 101 பேருக்கு 9A

மட்டக்களப்பு வலயத்தில் இந்தத்தடவை 101 மாணவர்களுக்கு 9A சித்திகள் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் கிடைத்திருக்கின்றன.

கடந்த தடவை இவ்வாறு 9A பெற்றவர்களின் எண்ணிக்கை 59 மாத்திரமே. அதனுடன் ஒப்பிடுகையில் தற்போதைய பெறு பேறுகளுக்கு மனப்பாங்கில் ஏற்பட்ட மாற்றமும், மாணவர்களின் அர்ப்பணிப்புமே காரணம் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் க. பாஸ்கரன் தெரிவித்திருக்கிறார்.

இந்த வெற்றியில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் வலயக் கல்வி அதிகாரிகள், சேவைக்கால ஆலோசகர்கள் ஆகியோரின் ஊக்குவிப்பும் முக்கிய பங்கு வகித்ததாகவும் அவர் கூறினார்.








# அரசியல் கைதிகளின் நிபந்தனையற்ற விடுதலை : இப்போது இல்லையெனில் இனி எப்போதும் இல்லை

–திருநாவுக்கரசு கோபகன்–

தமிழர் தரப்பின் தாயக விடுதலைப் போராட்டத்தின் ஆயுதப்போராட்டம் முடிவுறுத்தப்பட்டு ஏறக்குறைய ஒன்பது வருடங்கள் பூர்த்தியான பின்பும், நல்லாட்சி அரசுக்கு தமிழர் தரப்பு முண்டு கொடுத்து மூன்று ஆண்டுகள் முடிந்த பின்பும், இனப்பிரச்சனைக்கான தீர்வாக நல்லெண்ணத்தை மீளக் கட்டியெழுப்புதல் என்று அரசு நாட்டிலும் சர்வதேசத்திலும் பிரச்சாரம் செய்த பின்பும் இன்னும் வடகிழக்கின் தமிழர் வாழ்வில் கண்ணீர் சிந்தாத கணங்களைக் காணமுடியவில்லை.

யுத்தம் தந்த வலிகளிலிருந்து மக்களை மீள எழ வைக்கும் முயற்சிகளை அரசு செய்யத் தவறியுள்ளதை



நாமெல்லோரும் அறிவோம். ஆனாலும் போராட்டத்தின் எதிர்த்தரப்பாக நின்ற சிங்களப் பேரினவாத அரசிடமிருந்து தமிழர் தரப்பு அதனை எதிர்பார்த்தல் பொருத்தமில்லைதான்.

ஆனால் தமிழரின் இறுதி நம்பிக்கை என்று மக்களால் நம்பப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு யுத்தத்தின் பின்பான மீளக்கட்டியெழுப்பும் முயற்சி பற்றி இதுவரை காத்திரமான முயற்சிகள் எதனையும் மேற்கொள்ளவில்லை என்கிற குற்றச்சாட்டை எவரும் மறுதலித்துவிட முடியாது.

அவ்வாறான வேலைத்திட்டங்களை முன்மொழியவும் அதனை நடைமுறைப்படுத்தவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கோ அன்றி தமிழரசுக் கட்சிக்கோ வக்கில்லை என்பது தான் கசப்பான உண்மை. இங்கே வக்கு என்பதனால் அதன் வலு தொடர்பான கேள்வியை முன்வைத்தே நாம் நகர்தல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தவிர்ந்த, சிந்தனைச் சமூகம் எதனையும் இக்கட்சிகள் உள்வாங்காமலிருப்பதே நாம் இவ்வாறு கூறுவதற்கான முதற் காரணமாகும்.

> கண்ணீரைச் சிந்தும் இளம் சமூகத்ததை விட புன்னகைக்கும் இளம் பராயமே இந்த நாட்டிற்குத் தேவை

இது இவ்விதமிருக்க மக்கள் திரள் போராட்டங்களை முன்னெடுத்த சக்திகள் கூட காலத்திற்குக் காலம் காணாமற் போகின்ற அரசியல் சூழலை தமிழர் தரப்பு இக்காலங்களில் அதிகம் கடந்து வருகிறது.

வலிந்து காணாமலாக்கப் பட்டோருக்கான போராட்ட அமைப்பு தனது போராட்டத்தை வருடங்கள் தாண்டிக் கொண்டு சென்றாலும், அது தனது ஆரம்ப வீரியத்தை இழந்து நிற்பதாகவே உணரக்கிடைக்கிறது. இவ்வரிசையில் சில காலத்திற்கு முன்பாக தீவிரமாகப் பேசப்பட்ட அரசியல் கைதிகளின் நிபந்தனையற்ற விடுதலைக் கோரிக்கையும் அதனை முன்னெடுத்த போராட்ட அமைப்புக்களும் காணாமற் போயிருந்தமையை உணரக்கூடியதாயிருந்தது.

அநாதரவான பெண் குழந்தை
--------------------------------------------

ஆனால் ஒரு சிறு பெண் குழந்தை தன் தாயின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள வந்த தண்டனை பெற்ற தந்தையுடன் சிறைச்சாலை வாகனத்தில் ஏறி இன்னுமொரு தடவை இப்போராட்டத்திற்கு வலுச் சேர்த்திருக்கிறாள். ஏராளமான மக்கள் அமைப்புக்களும் தனி நபர்களும் அக்குழந்தைகளின் கண்ணீரைத் துடைக்கவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவவும் என முன் வந்திருக்கின்றன. ஆனால் இவை தானா தற்போதைய தேவை அல்லது இவ்வாறான உதவிகளுடன் சேர்ந்து இன்னும் உழைக்க வேண்டிய தேவைப்பாடு எம்முன்னே விரிந்து கிடக்கிறதா என்பதனை நாம் சிந்தித்தாக வேண்டும்.

இன்று பேசு பொருளாகியிருக்கும் அரசியல் கைதிகளின் நிபந்தனையற்ற விடுதலை தொடர்பாக தமிழர் தரப்பு



> சிங்களத் தரப்பிலிருக்கும் முற்போக்குச் சக்திகளை இனங்கண்டு அவர்களையும் இப்போராட்டத்தின் பால் இணைத்துக் கொள்ளுதல் வேண்டும்

இனி ஆற்ற வேண்டிய கருமங்கள் எவை? தமிழர் அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமை என்ன? இலங்கை போன்ற சிக்கலான சட்டவாக்கங்கள் நிறைந்த நாட்டில் நீதிமன்றங்கள் ஊடாக மாத்திரம் அரசியல் கைதிகளின் பிரச்சனைக்கான தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது வெறும் பகற்கனவு மட்டுமே.

நல்லாட்சிக்காக முண்டு கொடுத்து வரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உடனடியாக இது விடயமாக ஜனாதிபதியைச் சந்திக்க வேண்டும். நீதிமன்றத் தீர்ப்பு





வழங்கப்பட்ட கைதிகளை பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்ய வலியுறுத்துதல் வேண்டும். தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஏனைய கைதிகளை

> பாராளுமன்றத்தின் முக்கியமான அத்தனை விவாதங்களிலும் அரசியல் கைதிகளின் நிபந்தனையற்ற விடுதலையைப் பேசு பொருளாக்கி அரசின் மீது அழுத்தம் பிரயோகிக்க வேண்டும்

நிபந்னையற்ற விதத்தில் விடுதலை செய்ய வலியுறுத்த வேண்டும்.

யுத்தத்திற்குப் பின்பான சமாதானத்தைக் கட்டியெழுப்புதலின் மிகப் பிரதான படியாக மேற்படி கோரிக்கைகளை நிபந்தனைகளாக தமிழர் பாராளுமன்ற அரசியல் தரப்பு முன் வைக்க வேண்டும். பாராளுமன்றத்தின் முக்கியமான அத்தனை விவாதங்களிலும் அரசியல் கைதிகளின் நிபந்தனையற்ற விடுதலையைப் பேசு பொருளாக்கி அரசின் மீது அழுத்தம் பிரயோகிக்க வேண்டும்.

மக்கள் திரள் போராட்டங்களை கட்டமைக்கின்ற தகுதி தமிழர் தரப்பு அரசியற் கட்சிகளிடம் இல்லையென்பதால் மக்கள் தளங்களில் நீண்ட காலமாகப் பணியாற்றிவரும் தமிழ் சிவில் சமூகங்களின் மீது இன்னுமொரு போராட்டம் இத்தால் சுமத்தப்படுகிறது. தமிழர் சிவில் தரப்பு இப்போராட்டத்தினை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குமான அழுத்தமாக வடகிழக்கெங்கும் கட்டியெழுப்ப வேண்டும்.

போராட்டக் குழுக்களை வலுப்படுத்துவதனூடாகவும் தந்திரோபாயங்களை முறையாக வடிவமைப்பதனூடாகவும் அடுத்தடுத்த தளங்களை நோக்கி இப்போராட்டத்தை நகர்த்த வேண்டிய பாரிய பொறுப்பு சிவில் சமூகங்களுக்கு இருக்கிறது.

சிங்களத் தரப்பிலிருக்கும் முற்போக்குச் சக்திகளை இனங்கண்டு அவர்களையும் இப்போராட்டத்தின் பால் இணைத்துக் கொள்ளுதல் வேண்டும். கொழும்பிலும் ஏனைய சிங்களவர்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் இருந்து ஜனாதிபதிக்கு அரசியல் கைதிகளின் நிபந்தனையற்ற விடுதலை பற்றி கோரிக்கைகள் முன்வைக்கப்படுமாகவிருந்தால் தடுத்து வைக்கப்பட்டடிருப்பவர்களது விடுதலை விரைந்து சாத்தியமாகும்.

சிங்கள முற்போக்கு சக்திகளுடன் தமிழர் பாராளுமன்ற அரசியல் தரப்பு இவ்விதமான உறவு முறையைப் பேணாமல் விட்ட இடைவெளிகளை தமிழர் தரப்பு முறையாகப் புரிந்து கொண்டு எதிர்கால திட்டமிடலை மேம்படுத்ததல் வேண்டும். வழமை போலவே கண்டும் காணாமல் கடந்து போகும் தமிழர் பொது புத்தி இவ்விடயத்திலாகினும் பாதிக்கப்பட்ட நம் மக்களின் பக்கமாக போராடத் துணிய வேண்டும்.

இப்போதும் போராடி கைதிகளை விடுதலை செய்ய முயற்சிக்கவில்லையாயின் இனி எப்போதுமே அவை சாத்தியமற்றுப் போய்விடும்.

ஒரு, தாயை இழந்த தந்தையை பேரினவாதத்தின் சிறைகளுக்குள் அடைக்கக் கொடுத்த குழந்தையின் ஏக்கம் நிறைந்த முகம் அத்தனை உள்ளங்களையும் நிச்சயம் உலுக்கும்.

ஒட்டுமொத்த மனச்சாட்சிகளும் ஒரு புள்ளியில் திரள்கிற பொழுது இந்த ஒரு சிறுமியினது மட்டுமன்றி தந்தையை இழந்து தவிக்கும் ஏராளமான தமிழ்ச் சிறார்களின் முகங்களில் புன்னகையை கண்டு கொள்ளலாம். கண்ணீரைச் சிந்தும் இளம் சமூகத்ததை விட புன்னகைக்கும் இளம் பராயமே இந்த நாட்டிற்குத் தேவை. இதனை ஆட்சியாளர்களும் நன்கு உணர்ந்திருக்கின்றனர்.



# மக்கள் உணர்வுகள் மலைக்கச் செய்கின்றன

அரங்கம் பத்திரிகை குறித்த மக்களின் எதிர்பார்ப்பு நாம் நினைத்ததைவிட அதிகமாகவே இருக்கின்றது. சில இடங்களில் மக்கள் காண்பித்த ஆதரவும் தந்த வரவேற்பும் எமக்கு மெய்சிலிர்க்கச் செய்தன.

இதற்கு காரணம் பத்திரிகை சிறப்பாக இருக்கின்றது என்பது அல்ல. அப்படி முழுதாக நம்பிவிட்டால், நாம் ஏமாந்து போவோம் என்பது எமக்குத் தெரியும்.

ஆனால், மக்களின் தேவைகள் அதிகமாக இருக்கின்றன. "அரங்கம்" பத்திரிகையின் விநியோகத்துக்காக எழுவான் கரையிலும், படுவான் கரையிலும் நாம் செய்யும் பயணங்கள் நிறையப் பாடத்தை எமக்கு கற்றுத் தருகின்றன. அம்பாறையும், திருகோணமலையின் தென்பகுதியும் கூட மிகவும் மோசமான பின்னடைவை சந்தித்த பகுதிகளாக இருப்பதை உணர்கிறோம்.

எங்கும் பலவிதமான நெருக்கு வாரத்தில் மக்கள் இருப்பதை உணரக் கூடியதாக இருக்கின்றது. விவசாயம், கல்வித் தேவை, ஏனைய பொருளாதார நிலவரங்கள் ஆகியவற்றோடு சேர்ந்து மக்கள் ஒருவித அழுத்தத்தில் இருக்கிறார்கள்.

தமது பிரச்சினை என்னவென்பதையே அறிய முடியாத நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். இந்த விடயம் தொடர்பில் நிறைய விழிப்புணர்வு மக்களுக்கு தேவைப்படுகின்றது.

உண்மையில் மக்களின் தேவைகளை ஓரளவாவது விளங்கிக்கொள்ள வேண்டியதுதான் தற்போதைய தேவையாக இருக்கிறது. அவர்கள் சொல்ல நினைக்கும் தேவைகளை எமது ஊடகமும் பிரதிபலிக்க அவர்கள் எம்மை தமது சகாக்களாக கருதுகிறார்கள். "தாம் பேச நினைப்பதை நாம் பேசுவதாக" அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால், அவர்கள் எம்மீது வைத்திருக்கும் எதிர்பார்ப்பு எம்மை மலைக்கச் செய்கிறது.

அவர்கள் நம்பும் அளவுக்கு நாம் அவர்களை முழுமையாக புரிந்துகொண்டிருக்கிறோமா என்ற அச்சம் என் மனதில் எழுகின்றது.
ஆனால், எம்மை தனியே சந்திக்கும் போது எம்மிடம் அனைத்தையும் அவர்கள் கொட்டிவிட நினைப்பதற்கு அவர்களின் கையறு நிலையே முக்கிய காரணமாகப் படுகின்றது.

கடந்த 30 வருடப் போரின் ரணங்களில் இருந்து அவர்கள் இன்னமும் விடுபடவில்லை. அதற்கிடையே வேறு வகையான பலவித ஆக்கிரமிப்புக்களை அவர்கள் எதிர்கொள்கிறார்கள். சில மதக்குழுக்கள் அல்லது இனக்குழுக்கள் தமக்கு எதிரான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை திட்டமிட்டுச் செய்வதாக அவர்கள் நம்புகிறார்கள்.

அவை குறித்து ஒவ்வொரு கிராமத்துக்கும் போகும் போது அவர்கள் நிறையக் கதைகளைக் கூறுகிறார்கள். அவர்களின் பயத்தை போக்கும் அளவுக்கு நிலைமைகள் பற்றிய புரிதலை ஏற்படுத்த எந்தத் தரப்பும் பெரிதாக முனைந்ததாகத் தெரியவில்லை. அவர்களின் நம்பிக்கையீனங்களை கையாளவும் எவரும் போதியளவுக்கு முனையவில்லை.

ஒட்டுமொத்தமாக எவரும் மக்கள் நலனில் கவனமற்று இருக்கிறாகள் என்று கூறிவிட முடியாது. ஆனால், அவர்களின் நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட்டதாக, பாரிய அளவில் திட்டமிடப்பட்டதாக இல்லை.

பல இடங்களில் மக்கள் நலக் குழுக்கள் மருத்துவ முகாம்கள் மற்றும் வேறு சில சேவைகளை செய்வதைக் காணக்கூடியதாக இருந்தது. சில விழிப்புணர்வு நடவடிக்கைகளும் நடந்தன. அரச அதிகாரிகள், அரச சார்பற்றோர் ஆகியோரும் அவற்றில் பங்கேற்றிருக்கிறார்கள். அவர்கள் பாராட்டுக்குரியவர்கள். இவை ஓரளவு நம்பிக்கையை ஏற்படுத்துவனவாக இருக்கின்றன.

ஆனால், மாவட்ட அல்லது மாகாண மட்டத்தில் இவை ஒருங்கிணைக்கப்பட நடவடிக்கைகள் தேவை. ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்பதற்காக பல நலவிரும்பிகளின் செயற்பாடுகளுக்கு அவை தடையாக அமைந்துவிடவும் கூடாது.

அரசியல் கட்சிகள் தொடர்பாக மக்கள் மத்தியில் கனத்த அதிருப்தி

தொடர்ச்சி... (பக்கம் - )

# பாடசாலை மாணவர்களுக்கான அரங்கத்தின் போட்டிகள்

## கட்டுரைப் போட்டி

முதல் பரிசு : ஐயாயிரம் ரூபாய்
இரண்டாம் பரிசு : மூவாயிரம் ரூபாய்
மூன்றாம் பரிசு : இரண்டாயிரம் ரூபாய்
பாடசாலை மாணவர்கள் தமது அதிபரின் அனுமதியுடன் கலந்து கொள்ளலாம்.
போட்டிகள் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தனித்தனியாக நடைபெறும். இரு பிரிவுக்கும் தனித்தனியே பரிசுகள் வழங்கப்படும்.

### போட்டி:
------------------

பின்வரும் விடயங்களில் ஏதாவது ஒன்று குறித்து 500 சொற்களுக்கு மேற்படாமல் கட்டுரை எழுத வேண்டும்.

1) ஏதாவது ஒரு நாடு (இலங்கை அல்லது வேறு ஒரு நாடு) எதிர்கொள்ளும் ஒரு சுகாதார பிரச்சினை அல்லது சுகாதாரச் சவாலின் தாக்கம் குறித்து விபரிக்கவும்.
2) ஒரு நாடு அல்லது ஒரு அமைப்பு பொதுமக்கள் சுகாதாரத்துறை எதிர்கொண்ட சவாலில் தலையிட்ட சம்பவம் குறித்து விபரிக்கவும். அந்த தலையீட்டின் வெற்றி அல்லது தோல்விக்கான காரணத்தை விபரிக்கவும்

### விதி
------------------

-- ஏனைய ஆதாரங்களில் இருந்து நீங்கள் சேகரித்த விடயங்களுக்கான மூலங்களை குறிப்பிடவும்.
-- கட்டுரையை நீங்களே எழுத வேண்டும்.
-- தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரையாளர் நேர்முகச் சோதனைச் செவ்விக்கு அழைக்கப்படுவார்.
-- போட்டியில் கலந்துகொள்வோர் பாடசாலை மாணவராக இருக்க வேண்டும். அதிபரின் கடிதம் இணைக்கப்பட வேண்டும்.
--பிரதி பண்ணப்பட்ட கட்டுரைகள் நிராகரிக்கப்படும்.

### ஆலோசனை
-----------------

பொதுமக்கள் சுகாதாரத்தை பாதிக்கும் ஒரு நோய் அல்லது சுற்றாடல் பிரச்சினையை தேர்ந்தெடுக்கவும்.
--உங்களுக்கு ஆர்வம் உள்ள விடயத்தை தேர்வு செய்யவும்
--இண்டர்நெட் மற்றும் புத்தகங்களை ஆய்வுக்கு பயன்படுத்தவும்
--ஒரு விடயத்தில் மாத்திரம் நிற்கவும்.
--தேர்ந்தெடுத்த விடயத்தை ஆக்கத்திறனுடன் முயற்சிக்கவும்
--இந்தக் கட்டுரை ஒரு விவாதமாக இருக்க வேண்டும். இருக்கக்கூடிய பல தரப்பட்ட பார்வைகளையும், உங்கள் கருத்தையும் அதில் குறிப்பிடவும்.

### உதாரணமான விடயங்கள் சில
------------------------------------------------------------------------

தென்னாபிரிக்காவில் மலேரியா ஒழிப்பு நடவடிக்கைகள் , உலகெங்கும் அல்ககோலால் வரும் ஈரல் நோய்கள்.
தெற்காசிய சமூகத்தில் நீரிழிவு நோய்.

விண்ணப்பங்களை அனுப்பும் போது, பெயர், பிறந்த திகதி, பாடசாலையின் பெயர், விலாசம் மற்றும் தொடர்பிலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடவும். தலைமை ஆசிரியரின் அங்கீகாரமும் தேவை.

## ஓவியப் போட்டி

**போட்டிகளுக்கான முடிவுத்திகதி 05 - ஏப்ரல் - 2018**

முதல் பரிசு : ஐயாயிரம் ரூபாய்
இரண்டாம் பரிசு : மூவாயிரம் ரூபாய்
மூன்றாம் பரிசு : இரண்டாயிரம் ரூபாய்

பாடசாலை மாணவர்களுக்கான இந்தப் போட்டியில் கலந்து கொள்வோர், உலக சுகாதாரம் எதிர்கொள்ளும் சவால்களைச் சித்தரிக்கும் வகையிலான ஓவியம் ஒன்றை வரைய வேண்டும்.

பொதுமக்களின் சுகாதாரத்தில் சுற்றாடல் ஏற்படுத்தும் தாக்கத்தை இந்த ஓவியங்கள் விபரித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்.

தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ அந்த ஓவியத்தை விபரிக்கும் விளக்கம் ஒன்றை 100 சொற்களுக்கு மேற்படாமல் எழுத வேண்டும்.

ஏ3 அல்லது ஏ4 காகிதத்தில் அது வரையப்பட்டிருக்க வேண்டும். பென்சில், மை கொண்டு அது வரையப்பட்டிருக்கலாம்.

மூன்று பிரிவாக போட்டி நடைபெறும்.
6-10 வயது
11-14 வயது
15- 18 வயது

மூன்று பிரிவுகளுக்கும் தனித்தனியாக
மூன்று பரிசுகள் 5000 ரூபாய், 3000 ரூபாய் மற்றும் 2000 ரூபாய் வழங்கப்படும்.
போட்டியில் கலந்துகொள்வோரின் வயதை ஆசிரியர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் போது, பெயர், பிறந்த திகதி, பாடசாலையின் பெயர், விலாசம் மற்றும் தொடர்பிலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடவும். தலைமை ஆசிரியரின் அங்கீகாரமும் தேவை.

**தொடர்புகளுக்கு :
அரங்கம் நிறுவனம்,
227, பார் வீதி, மட்டக்களப்பு**

# அரசியல் கோழைகள் எங்களுக்கு தேவையில்லை

--பூபாலரட்ணம் சீவகன்--

## வெளிப்படைத்தன்மையும், அரசியல் துணிபுமே மக்களுக்கு உதவும்

இங்கு தமிழர் வட்டாரங்களில் தற்போதைய பேச்சு தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடக்கில் பல சபைகளில் ஆட்சியமைக்க, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்(ஈபிடிபி) உதவியை பெற்றிருக்கிறது என்பதும், அதன் மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது கொள்கையை அடகு வைத்துவிட்டது, அல்லது கொள்கையில் இருந்து தவறிவிட்டது என்பதுந்தான்.



இது வடக்கு பிரச்சினையாக இருந்தாலும், கிழக்குக்கும் கொஞ்சம் பொருந்தும்.

இந்த நிலைமைக்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பை தள்ளியது தற்போதைய மிகவும் முன்னேற்றகரமான கலப்புத் தேர்தல் முறை.

இந்த விசயத்தை வடக்கு மாகாண முதலமைச்சர் கூட கையில் எடுத்து த.தே.கூவின் கொள்கையை கேள்விக்குள்ளாக்கியுள்ளார்.

இங்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு இப்படி ஆட்சியமைக்கலாமா, அதன் மூலம் அதன் கொள்கை தவறவிடப்பட்டதா என்று பார்க்க வேண்டியது முதல் விடயம். அப்படி கொள்கை தவறவிடப்பட்டதாக கூறுபவர்கள், சுட்டிக்காட்டுவது ஈபிடிபி ஒரு துரோகக் கட்சி, ஆகவே அதனோடு சேர்ந்தது தவறு என்பதாகும்.

இந்த "யார் துரோகி" என்ற விவாதம் ஒரு வகை "தூய்மை வாதம்". மறுபுறம் பார்த்தால் நாம் மட்டுமே புனிதர், எதிர்த்தரப்பு துரோகி என்று வர்ணிக்க புறப்படுவது, ஒருவகை "பாசிசம்".

ஈபிடிபியை பொறுத்தவரை அதனை குறைகூறுபவர்கள் சொல்வது அது கொலைகாரக் கட்சி மற்றும் அரசாங்கத்தோடு சேர்ந்திருந்தவர்கள் என்று.

தமது அரசியல் ரீதியான எதிரிகளுக்கு "இயற்கை மரணம் கிடையாது" என்று எழுதியும் பேசியும் வந்தவர்களின் வழி வந்ததுதான் தற்போதைய தமிழ் தேசியக் கூட்டமைப்பு.

ஆயுதம் தூக்கியவர்களை கொலைகாரர்கள் என்று விலக்க அவர்களுக்கு எந்தவிதமான அருகதையும் கிடையாது. அந்தக் கொலைகளுக்கு, வன்செயல்களுக்கு தூண்டியவர்கள் இவர்கள். இவர்களின் தூண்டுதலால்தான் இளைஞர்கள் வன்செயல் பாதையை ஒரு காலத்தில் தேர்ந்தெடுக்கவும், அது "அவர்கள் கூறுவது போல" லட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் பலியாகவும் காரணமானது. நான் இங்கு வன்செயலை ஆதரிக்கவில்லை. ஆனால் யாரும் உத்தமரில்லை என்பதையே கூறவிளைகிறேன்.

அடுத்தது, அரசாங்கத்தோடு சேர்ந்து ஈபிடிபி செயற்பட்டது என்ற கருத்து. இது குறித்து இனியும் கேலி பேசிக்கொண்டிருப்பது, எந்த தமிழ் கட்சிக்கும் முடியாத காரியம். யார் அரசோடு சேர்ந்து, என்ன செய்தார்கள் என்பதை ஆராய ஒரு நீண்ட கட்டுரைத் தொடரே தேவைப்படும்.

ஆனால், ஈபிடிபி பகிரங்கமாக தான் நினைத்ததை செய்திருக்கிறது. அதனால், அந்தக் கட்சியை பாராட்டலாம். அதன் மூலம் அந்தக் கட்சி ஆற்றிய பணிகள்தான், அந்தக் கட்சி மீதான பலதரப்பு குற்றச்சாட்டுக்களுக்கு மத்தியிலும் வடக்கில் அதற்கு கணிசமான ஆதரவுத் தளம் ஒன்றை தக்க வைக்க உதவியுள்ளன. அந்தக் கட்சிக்கு வாக்களித்த வடக்கு மக்களின் கருத்தை வெறுமனே புறக்கணிக்க முடியாது.

ஆகவே, இந்த தூய்மை வாதம் பேசுவது தவறு என்பது ஒருபுறம் இருக்க, அப்படியான வாதத்தை முன்வைக்க இனியும் இங்கு எவருக்கும் அருகதை இல்லை என்பதையும் சுட்டிக்காட்டியாக வேண்டும். அந்த வகையில் முதலமைச்சர் சி. வி. விக்னேஷ்வரனின் கருத்தும் கடுமையாக கண்டிக்கப்பட வேண்டியது. அவரும் அந்த அருகதையை எப்போதோ இழந்துவிட்டார்.

அடுத்தது தேர்தல் முறைமை குறித்த கருத்து. உண்மையில் இந்த தேர்தல் முறைமை மிகவும் நவீனமானது. ஒரு மிகமிகச் சிறிய சிறுபான்மை குழுவுக்கும், அல்லது சிறிய மக்கள் தொகைக்கும் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யக் கொண்டுவரப்பட்டது.

ஆனால், இங்கு அரசியல் கட்சிகளால் கூறப்படும் கருத்து, "இது ஆட்சியமைப்பதில் குழப்பத்தை ஏற்படுத்துகிறது" என்பதாகும். சிறிய மக்கள் குழுவுக்கும் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதால், நேரடி வாக்கெடுப்பின் மூலம் நிராகரிக்கப்படும் பெருந்தொகையான மக்களுக்கும் இது பிரதிநிதித்துவம் வழங்குகின்றது. ஆகவே ஒரு சிறிய வாக்கு வீதத்தால் மாத்திரம் வெற்றி கொண்ட கட்சி தாம் அனைவரையும் அடக்கி ஆளுவதை இது தடுக்கிறது. இது ஜனநாயகத்தின் உச்சக் கட்டம்.

அந்த ஜனநாயகத்தை புரிந்துகொண்டு அதற்கேற்ப, தமக்கு முரணாக இருந்தாலும் மாற்று கருத்து கொண்ட மக்கள் குழுவின் கருத்துக்கும் மதிப்பு கொடுத்து அனைவரும் சேர்ந்து ஆட்சியமைத்து செயற்படுவதுதான் இங்கு ஜனநாயக நாகரீகம். அதனை புரிந்துகொள்ளும் பக்குவம் இந்தக் கட்சிகளுக்கு இல்லை என்பதுதான் இங்கு பிரச்சினையே ஒழிய தேர்தல் முறையை குறை கூறுவது ஜனநாயக பாதையில் பின்னோக்கிச் செல்வதற்கு நிகரானது.

மக்கள் கருத்துக்கு மதிப்புக்கொடுக்காமல், மாற்றான கருத்துக்களை மதிக்காமல் போனதுதான் இந்த நாட்டில் சிறுபான்மை



மக்கள் இன்று படுகின்ற துன்பங்களுக்கு காரணம். அதனை உணர மறுக்கின்ற அரசியல் கட்சி எதுவாக இருந்தாலும் அதன் அரசியல் பக்குவத்தை கேள்விக்கு உள்ளாக்க வேண்டுமே ஒழிய தேர்தல் முறையை மாற்ற நினைப்பது ஒரு மடத்தனம்.

அடுத்து இன்னும் இங்கு எஞ்சி நிற்கும் ஒரு கேள்வி, "சரி, அப்படியானால், ஈபிடிபியோடு த, தே.கூ கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைக்கலாமா" என்பதுதான்.

ஆம், மக்களுக்கு தொண்டாற்றுவதானால், அதனை செய்யலாம். அதில் தவறில்லை. அது வரவேற்கப்பட வேண்டிய முன்னேற்றகரமான விடயம். ஆனால், இங்கு என்ன நடக்கிறது? நாங்கள் ஈபிடிபியுடன் பேரம் பேசவில்லை, ஆதரவு கேட்கவில்லை என்று கூறி, எம்.ஏ.சுமந்திரன் உட்பட தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர்கள் ஒழிந்து விளையாடுகிறார்கள். ஆனால், உண்மை நிலை அப்படியில்லை என்றே வரும் செய்திகள் கூறுகின்றன.

"ஆம், மக்கள் நலனுக்காக, நீடித்த ஆட்சியின் மூலம் அவர்களுக்கு பணி செய்வதற்காக எங்கள் எதிரிக்கட்சியாக இருந்தாலும் ஈபிடிபியிடம் ஆதரவு கேட்டோம்" என்று சொல்லும் அரசியல் துணிபு, வெளிப்படைத்தன்மை தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைவர்களுக்கு கிடையாது என்பதுதான் இங்கு பிசகு.

ஈபிடிபியும் இங்கு ஒரு தவறைச் செய்திருக்கிறது. தாம் வழங்கு ஆதரவை வெளிப்படையாக அறிவித்து அவர்கள் வழங்கியிருக்க வேண்டும். யாழ் மாநகர சபையின் மேயர் தெரிவின் போது அந்தக் கட்சியின் நடவடிக்கையில் தடுமாற்றம் தெரிந்தது.

ஆகவே இங்கு அனைத்து அரசியல் கட்சிகளிடம் மக்கள் எதிர்பார்ப்பது, இருக்கும் அரசியல் வாய்ப்புக்களை பயன்படுத்தி 30 வருட போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பதே ஒழிய "அந்த முறைமை பிழை, இந்த முறைமை பிழை" என்று ஜனநாயகத்துக்கு பொருந்தாத விடயங்களை கூறி, ஒடி ஒழிந்து விளையாடி, மக்கள் நிலைமை மேலும் மோசமாக்குவது அல்ல. இருக்கும் வாய்ப்புக்களை பயன்படுத்தி அடுத்த கட்டத்துக்கு முன்னேற முனையுங்கள். அரசியலில் புறமுதுகு காட்டாதீர்கள். அரசியல் கோழைகள் எங்களுக்கு தேவையில்லை.



யாரோ? யாரோடு இங்கு யாரோ?
யார் நெஞ்சில் இங்கு யாரோ?



# அழைக்கப்பட்டு அலைக்கழிக்கப்பட்டார்?

தமிழரசுக்கட்சியின் உத்தியோகபூர்வப் பத்திரிகையான "சுதந்திரன்" ஆரம்ப காலத்தில் அதன் ஆசிரியராக மட்/தாமரைக்கேணியைச் சேர்ந்த எஸ்.ரி.சிவநாயகத்தையும் உதவி ஆசிரியராக மோர்சாப்பிட்டியைச் சேர்ந்த செ.இராஜதுரையையும் கொண்டு செயற்படத் தொடங்கியது.

பின் இவர்களின் எழுத்தாற்றலினால் சுதந்திரன்மக்கள் மத்தியில் பிரபல்யமடையத் தொடங்கியது.

காலவோட்டத்தில் செ.இராஜதுரை பாராளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்புத் தொகுதியில் தமிழரசுக்கட்சியின் வேட்பாளராக நின்று வென்றதால் அவர் வகித்த உதவியாசிரியர் பதவியை



வாகரைவாணன் என்னும் அரியரெத்தினம் என்பவர் வகிக்க, இவர்களின் முயற்சியாலும் சுதந்திரன் ஓஹோ

என்ற நிலைக்கு உயர்ந்தது.

பின் செனட்டர் பதவிப் பிரச்சினையால் கட்சிக்கும் சிவநாயகத்துக்கும் முறுகல்நிலை ஏற்பட, பத்திரிகை

ஜாம்பவான் எஸ்.ரி.சிவநாயகம் சுதந்திரன் ஆசிரியர் பதவியைத் துறந்து வெளியேறி, தினபதி ஆசிரியரானார். இதன் பின் கோவை மகேசனும் வாகரைவாணனும் சுதந்திரனைக் கொண்டு நடாத்தினர்.

1977தாம் ஆண்டில் மட்டக்களப்பு பாராளுமன்றத் தேர்தலில் கட்சியின் கட்டுப்பாட்டை மீறி கோவை மகேசன் செயற்பட்டார் என்ற காரணத்தினாலும், அதேவேளை கட்சிக்கு ஒரு பத்திரிகை தேவையென்றும் அ.அமிர்தலிங்கமும், க.பொ.ரெத்தினமும் கருதி மேற்கொண்ட விடாமுயற்றியின் பலனாக வாகரைவாணனை ஆசிரியராகக் கொண்டு கட்சியின் உத்தியோகபூர்வப் பத்திரிகையான சுதந்திரன் உதறித்தள்ளப்பட்டு "உதயசூரியன்" உதயமாகியது.

1981இல் யாழ்ப்பாணம் தீக்கிரையாக்கப்பட்டதால் இப்பத்திரிகை முடங்கியது.

தமிழரசுக்கட்சியின் உத்தியோகப் பத்திரிகைகளான சுதந்திரன், உதயசூரியன் ஆகிய இரு பத்திரிகைகளிலும் முறையே உதவி ஆசிரியராகவும், ஆசிரியராகவும் செயல்பட்டுக் கட்சியையும்

பத்திரிகையையும் வளர்த்தவர் வாகரைவாணன்.

அண்மையில் தமிழரசுக்கட்சியின் உத்தியோகப் பத்திரிகையான புதிய சுதந்திரன் வெளியீட்டு விழா இனிதாக நடைபெற்றது.

தமிழரசுக்கட்சி சார்பிலான செய்தியாளர் ஒருவர் வாகரைவாணனைர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இவ்விழாவிற்கு வருகை தருமாறும், அவரே மங்கல விளக்கேற்ற வேண்டும் எனவும் அழைப்பு விடுத்திருந்தார்.

வாகரைவாணனும் தள்ளாத வயதில் காசு இல்லாத நிலையில் ஓட்டோவை பிடித்துக்கொண்டு விழாவிற்கு வந்து, மண்டபத்தில் ஒரு ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.
வாகரைவாணனை மங்கல விளக்கேற்ற யாரும் அழைக்கவில்லை, இவரை யாரும் கணக்கெடுக்கவுமில்லை.

பத்திரிகையையாவது பெற்றுச் செல்வோம் என தொடர்ந்து மண்டபத்திலிருந்தார். பத்திரிகையும் இவருக்கு வழங்கப்படவில்லை. அழைத்துவிட்டு அவமானப்படுத்திவிட்டார்களே என்ற வெப்புசாரத்தோடு மண்டபத்தை விட்டு வெளியேறினார், முன்னாள் பத்திரிகை ஆசிரியர் வாகரைவாணன். ஶ்ரீ எதிர்ப்பு போராட்டத்தில் வாகரைவாணன் எழுதிய கவிதைகளில் ஒன்றை இந்நேரத்தில் அவதானியார் ஆகிய நான் உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன்.




### ஶ்ரீ எழுத்தும் சிறைவாசமும்

இலங்கையை ஆளும் சாதி
இன வெறி பிடித்த சாதி;
விலங்குக்குப் பிறந்ததோ என்னும்
விஜயனின் கலப்புச்சாதி.
கலகமே தொழிலாய்க்கொண்ட
கைமுனு மன்னன் சாதி;
பல மிகு உள்ளதாலே
பாராளுமன்றந் தன்னில்,
நண்டது வடிவம் போலும்;
நட்டுவக் காலி போலும்;
கொண்டதோர் உருவெழுத்தை
குவலய மொழியை நீக்கி
வண்டியில் எழுத வென்றே
வரைந்தனர் சட்டமொன்று,
தண்டமிழ் மொழியைக் காக்கும்
தமிழர்கள் இதனைக் கண்டு
கொதித்தனர் கடலைப் போல்
குமுறினர் புயலைப் போல.
குதித்தனர் உரிமைப் போரில்;
கூடினர் வெள்ளம் போல!
பதித்தனர் உள்ளந் தன்னில்
பகந்தனர் வீரப்பேச்சு;
மிதித்தனர் காலில் போட்டு
மிருகங்கள் சட்டந்தன்னை.
"ஶ்ரீ"யினை ஏற்க மாட்டோம்
சிங்களம் கற்க மாட்டோம்
சிறையிலே அடைத்து வத்தால்
செந்தமிழ் குயில்களாவோம்
முறையிலா ஆட்சி செய்யும்
மூடர்கள் உணர வேண்டும்.
இறைவனே தடுத்த போதும்
எம்பணி தொடரும் நாளும்!
என்றவர் "தார்" எடுத்து
எட்டுக்கால் எழுத்துத்தன்னை
நன்றாக அழிக்கலானார்
நற்றமிழ் எழுதலானார்.
சென்றது அந்த நாளும்
செந்தமிழ் காக்கும் போரில்
நின்றது மணிமுடியாய்
நெஞ்சங்கள் மறக்குமாமோ?
உரிமைகள் காக்கும் போரின்
உயர்தர விருதுவாக
கரங்களில் விலங்கு பூட்டிக்
கைதிகளாக்கிச் சென்றார்.
ஒருவரும் கலங்கவில்லை
உண்மையில் மகிழ்ச்சி கொண்டார்
பெருமைகள் இதனைப் போல
பெறுவது சுலபமாமோ?




**விளம்பர முகவர்கள் தேவை**

---

**கிழக்கு மாகாணத்தின் அனைத்துப் பகுதிகளிலும் "அரங்கம்" பத்திரிகைக்கு விளம்பர முகவர்கள் தேவைப்படுகிறார்கள். ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். உரிய வசதிகள் செய்து தரப்படும்.**

**கவர்ச்சிகரமான முகவர் கமிஷன் வழங்கப்படும்.**

**தொடர்புகளுக்கு**

+94703009001 | +94652229112 | +94713999091

## இனவாதம் இல்லாமல் ஏறாவூரில் நாம் அமைத்த கிரிக்கட் பிட்ச்

தொடர்ச்சி...

புதுப் பிட்சில் டென்னிஸ் பந்தின் மூலம் ஓப் ஸ்பின், லெக் ஸ்பின் போடவும் பழக்கினார் சந்திரே அய்யா.

புதிதாய் பலர் எம்முடன் இணைந்து கொண்டனர். சந்திரே அய்யாவின் தலைமையில் அடுத்தடுத்து வந்த காலங்களில் மட்டக்களப்பு மாநகரசபை கிறிக்கற் ரீமையும் வென்று வந்தோம் (அக்காலத்தில் அவர்கள்தான் மட்டக்களப்பு மாவட்ட சாம்பியன்களாக இருந்தனர்). அதன்பின் பல சில காலங்கள் வாழைச்சேனையில் இருந்து மட்டக்களப்பு வரை பிரபல்யமாக இருந்தது ஏறாவூர் யுனைடட்..

1984 - 85 இல் நாட்டு நிலைமைகளால் பலரும் ஏறாவூரை விட்டு இடம் பெயர்ந்தனர். முக்கியமாய் சிங்கள நண்பர்கள்.

நான் 1985ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் ஏறாவூரில் இருந்து புறப்பட்டிருந்தேன். புகையிரதம் 'ஏறாவூர் யுனைடட்' மைதானத்தை கடந்தபோது மைதானம் வெறிச்சோடிக் கிடந்தது.

அன்று, சர்வதேசப் பெருஞ் சக்திகள் தங்களின் நலனுக்காக, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கையின் அமைதியை குலைத்து பிரித்தாள்வதற்கு காய் நகர்த்தல்களைத் தொடங்கியிருந்ததை அடிமட்டத்து மக்கள் உணர்ந்துகொள்ளவில்லை.

அனைத்தும் முடித்துவைக்கப்பட்ட பின்பாவது நாம் உணர்ந்து கொண்டிருக்கிறோமா? இழப்புகளின் அளவுகளும் வீரியமும் வேறுபடலாமே அன்றி மூன்றினங்களும் இழப்புக்களை சந்தித்திருக்கின்றன என்பது உண்மை. அதைவிட வேதனையானது எங்களுக்குள் அவர்கள் விதைத்துவிட்டிருக்கும் இனவெறுப்பு.

மூன்றினத்தினதும் அதிகார வர்க்கமும் சர்வதேச சக்திகளும் இப்போது அடுத்த 30 - 40 ஆண்டுகளுக்கான பிரித்தாளும் சக்தியாக இனவாதத்தை கையில் எடுத்திருக்கிறது என்பதையாவது நாம் இப்போது புரிந்துகொள்ளவேண்டும் அதற்கேற்ற நகர்வுகளுக்கு நீரூற்றவேண்டும்.

## வீதியில் நாடமாடுவதன் பின்னணியில் இவ்வளவு விளக்கமா?

-படுவான் பாலகன்-







# “வீதியல்ல மாட்டுக்காலைதான்“

“வீதியல்ல மாட்டுக்காலைதான்“ என்று “குளுவினமடு” வீதியில் மாடுகளுக்கு நடுவில் வீதியை கடக்க முடியாமல் தடுமாறி, புறுபுறுத்துக் கொண்டு நிற்கின்றார் தில்லையம்பலம்.
இரண்டு பக்கங்களும் வயல்வெளி நடுவே வீதி. வீதியும் குழியும், மேடுமாகதான் காட்சியளிக்கின்றது. அருகில் வயல் இருப்பதினால்தான் இதுதான் வீதி என்று சொல்லக் கூடியதாகவுள்ளது. வீதியிலே 50க்கு மேற்பட்ட மாடுகள் உறங்கியும், நின்றும் கொண்டிருக்கின்றன. மணற்பிட்டிப் பகுதியிலிருந்து துவிச்சக்கரவண்டியில் வருகைதந்த தில்லையம்பலம் குளுவினமடு பக்கமாக செல்லும் வீதியில் மாடுகள் மறித்து நின்றதினால் சத்தமிட்டு துரத்தி, பயணத்தை தொடர முயற்சி செய்து கொண்டிருந்தார்.

அப்போதுதான் நானும் அந்த வீதியால் சென்று கொண்டிருந்ததால், அவரின் புறுபுறுப்பு எனக்கும் கேட்டது.
என்ன அண்ணே புறுபுறுப்பெல்லாம் பலமா இருக்கின்றது? என்றேன்.
கூறத்தொடங்கினார் தில்லையம்பலம்.

“என்னத்த தம்பி சொல்லுற! வீதியால போகமுடியல்ல. வெயில் எறிப்பதற்கு முன்பு வயலுக்குள் போயிற்று வரலாம் என்று வீட்டில் இருந்து புறப்பட்டா கொக்கட்டிச்சோலை பிரதான வீதியிலிருந்து மணற்பிட்டி வரையும், வீதியில் மாடுகள்தான் நிற்கின்றன. மணற்பிட்டியோட மட்டுமல்ல வயல் போகும் வரைக்கும் மாடுகள்தான். அதேபோல மாலையில 5மணிக்கு பிறகு மண்முனை துறையிருந்து எல்லா பிரதான வீதியிலையும் மாடுகள்தான். வீதியில் சைக்கிள் ஓடுவதென்றால் மிகவும் கஸ்டமாகத்தான் இருக்கின்றது.

மாடுகள் என்ன செய்யும்? அதற்கு வசதியான இடங்களில்தான் நின்றும், நடந்தும் கொள்ளும்” மாடுகளின் உரிமையாளர்கள்தான் மாட்டினை பாதுகாக்க வேண்டும். அவர்கள் பாதுகாக்கவில்லையாயின் பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வேண்டும். பிரதேசசபைம் நடவடிக்கை எடுத்தாலும் திரும்பவும் மாடுகள் வீதியிலாதான் நடமாடுகிறதாம். என்று பிரதேசசபை உத்தியோகத்தர்கள் கூறுகின்றனர். அப்படியெண்டா அரசாங்க பண்ணைகளுக்கு மாடுகளை பிடித்து கொடுக்கிற வேலையை செய்ய வேண்டும் என்று அரசாங்க அதிபர் விவசாய ஆரம்ப



கூட்டத்தில் கூறினார்.”

மாடுகள் என்றால்? செல்வம் என்று அர்த்தம். அதனால்தான் அன்றிலிருந்து இன்றுவரைக்கும் படுவான்கரைப்பகுதியில் உள்ள பலர் மாடுகளை வைத்திருக்கின்றனர். இம்மாடுகளை எல்லா இடங்களிலும் விவசாய செய்கை காலங்களில் வளர்க்க முடியாதென்பதற்காகதான் மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் மணலேத்தம், வெட்டிபோட்டசேனை, கறுவாச்சோலை, புளுகுணாவை, காத்தமல்லியார்சேனை, பெருவட்டை போன்ற இடங்களை மாடுமேய்பதற்கான இடங்களாக தெரிவுசெய்திருக்கின்றனர். அப்பகுதியில் கொண்டுதான் மாடுகளை மேய்கின்றனர். இதன்போது யானைப்பிரச்சினைகளும் ஏற்படுவது வழமை. யானை தாக்கியும் சிலர் இறந்தும் இருக்கின்றனர்.

மாட்டுத்திருட்டும் அதிகம்
----------------------------------------
மாடுகளை உரிமையாளர்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் வளர்க்காவிட்டால், மாடுகளை களவாடி செல்லுகின்ற நிலையும் இருக்கின்றன. முன்னரெல்லாம் நினைத்தமாதிரி படுவான்கரைச்

மாடுகளை பதிவதில்லை
------------------------------------------
மாடுகள் களவாடப்படுகின்றன. என்று மாட்டு உரிமையாளர்கள் வார்த்தைகளால் சொல்லுகின்றனரே தவிர காவல்துறையினருடன், மாடுகள் களவாடப்படுவதாக முறைப்பாடுகள் செய்யப்படவில்லையென அவர்கள் கூறுகின்றனர். உண்மையில் காவல்துறையினர் கூறுவதுபோன்று, காவல் நிலையத்தில் மாடுகள் களவாடப்படுவதாக, கால்நடை உரிமையாளர்கள் பெரும்பாலானவர்கள் முறைப்பாட்டினை பதிவு செய்வதில்லை. இதற்கான காரணம் என்ன என ஆராய்கின்ற போது, மாடுகள் வைத்திருக்கின்ற பலர், தமது மாடுகளை பதிவு செய்து அதற்கான சான்றிதழை பெற்றுக்கொள்ளவில்லை. இதனால் பிரதேசத்தில் எத்தனை கால்நடைகள் உள்ளன. என்பது குறித்த தகவலை பெற்றுக்கொள்ள முடியாமையினால். உரிய அளவிலான மேய்ச்சல்தரைகளை பெற்றுக்கொள்வதிலும் சிக்கல்கள் உள்ளன. நமது மக்கள் உரிய பதிவுகளை மேற்கொண்டால், பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளலாம். என்றார் தில்லைநாயகம்.

## படுவான்கரையின் சொத்துக்கள் இந்த மாடுகள், அவற்றை பதிய வேண்டும்

சொத்துக்களை இலகுவாகக் களவாடிச் செல்ல முடியாது. படுவான்கரைக்கானப் போக்குவரத்துக்கள் பெரும்பாலும் நீரைக்கடக்கும் போக்குவரத்தாக அப்போது இருந்தன. இதற்காகப் படகுகள் பயன்படுத்தப்பட்டன. தற்போது பாலங்களாக மாறியமையினால் வீதிகளில் நிற்கும் மாடுகளை களவாடி செல்கின்ற நிலையும், இரவுவேளையில் மாடுகளைத் திருடிச் செல்லுகின்ற செயற்பாடுகளும் நடந்தேறுகின்றன. அண்மையில் கூட கொக்கட்டிச்சோலையில் வைத்து இளைஞர்களால் இரவுவேளையில் கொண்டுசெல்லப்பட்ட மாடுகளும், வாகனங்களும் பிடிக்கப்பட்டு காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

தில்லைநாயகமும் இந்த பிரதேசத்தின் மீது பற்றுக்கொண்டவர். எல்லா இடங்களுக்கும், எல்லா கூட்டங்களுக்கும் சென்று பல விடயங்களைத் தெரிந்து வைத்திருக்கின்றவர், இதனால்தான் மாடுகள் பற்றியும் பல விடயங்களை அறிந்திருக்கின்றார். உண்மையில், தில்லைநாயகம் கூறுவது போல், பல விடயங்களில் பண்ணையாளர்களும் விழிப்படைய வேண்டும். இல்லையேல் படுவான்கரைச் சொத்துக்கள் சூரையாடப்படுவது நிறுத்தப்படாமல் போகும் நிலையேற்படும்.



அரங்கம் திருமணமேடை
மணமகள் .மணமகள் தேவை
விளம்பர செய்ய தெடர்பு கொள்ளுங்கள்

அரங்கம்
உங்கள் விளம்பரங்களை அரங்கம்
இணைய வானொலி மற்றும் செய்தித்தாளில்
பதிவு செய்து கொள்ள
070 300 900 1 065 222 911 2



# “ஒரு குளத்தை கட்டும் போது நான் ஒரு அரசனாக உணர்ந்தேன்”



“ஒரு குளத்தைக் கட்டி முடித்தபோது நான் ஒரு அரசனாக உணர்ந்தேன்” என்று கூறியவர் விஜய் கண்ஸ்ரக்ஷன் நிறுவனத்தின் நிறுவனர், உரிமையாளர் வி. ரஞ்சிதமூர்த்தி. ஆனால், இது ஒப்பந்ததாரரான அவருக்கு மாத்திரமல்ல, அதற்கான பொறியியல் மதிப்பீடுகளை தேடி ஆராய்ந்த கமநல சேவைகள் உதவி ஆணையாளர் நடராஜா சிவலிங்கத்துக்கும் பொருந்தும்.

குளம் கட்டுவது அல்லது இருப்பதை திருத்துவது கிழக்கு மாகாணத்தை குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்தவரை மிகவும் அவசியமான ஒரு காரியம்.

இலங்கையின் ஏனைய மாவட்டங்களைப் போலவே மட்டக்களப்பும் அடிக்கடி வரட்சியை எதிர்கொண்டு வருகின்றது. ஆனால், உண்மையில் இங்கு இருக்கும் நீர்வளத்தை உரிய வகையில் சேமிக்க முடிந்தால், இந்த வரட்சியோ அல்லது அடிக்கடி ஏற்படும் வெள்ளப்பெருக்கோ ஏற்படாது என்பது சிவலிங்கத்தின் கருத்து.

குளங்களையே ஒரு நீர்மூல வளமாகக் கொண்டது மட்டக்களப்பு. ஏனைய மாவட்டங்களைப் போலல்லாது, இங்கு சிறிய குளங்கள் மிக அதிகம். ஆனால், பல காலமாக, பல காரணங்களால் அவையெல்லாம் தூர்ந்துபோய், அல்லது உடைந்துபோய்க் கிடக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்தவரை இது இலங்கையின் நெற்களஞ்சியம். ஆனால், இங்குள்ள வேளாண்மை செய்யக்கூடிய அனைத்து நிலமும் அதற்கு பயன்படுகின்றது என்று கூறமுடியாது. போதிய நீர் வரத்து (நீர் வளம் அல்ல) இல்லாமை அதற்கு முக்கிய காரணம்.

ஆனால், மட்டக்களப்பில் 1002 குளங்கள் வரை இருப்பதாக கூறும் சிவலிங்கம், அதில் 900 குளங்கள் சிறியவை என்கிறார். ஆனால், அவற்றில் பெரும்பாலானவை தூர்ந்து போய்க்கிடக்க, இதுவரை 412 குளங்கள் மாத்திரமே அடையாளம் காணப்பட்டுள்ளன. அடையாளம் காணப்பட்டவற்றில்கூட 165 வரையிலான குளங்கள் இன்னமும் திருத்தப்படவில்லை. இவை திருத்தப்பட்டால் மேலும் 50,000 ஏக்கர் வரை காணிகள் நீர்வளம் பெறும்.



ஆனால், போதிய நிதிவசதி இல்லாத காரணத்தால், அந்தப் பணிகள் இழுபடுகின்றன. ஆயினும் தற்போதைக்கு

## மட்டக்களப்பு மாவட்டம் சிறிய குளங்களை நம்பியே இருக்கிறது

ஓரளவு நிதியை பெரும் முயற்சியின் மூலம் தான் பெற்று, சில பணிகளை செய்வதாக கூறுகிறார் சிவலிங்கம்.

செங்கலடியில் இருந்து பதுளை வீதியில் செல்லும்போது வேப்பவெட்டுவான் பகுதியில் வலது புறமாக வண்டியை திருப்பி, பின்னர் சில வளைவுகளைக் கடந்து, கொஞ்சம் புதர் படர்ந்த இடத்தையும் கடந்து சென்றால் அங்கே ஒரு இடத்தில் மாத்திரம் ஆழமான பற்றை படர்ந்து காணப்படுகின்றது. ஆனால், அந்தப்பற்றைப் பகுதி ஒரு வளமான குளமாக ஒரு காலத்தில் இருந்திருக்கிறது. தூர்ந்துபோனதால் புதர் மண்டிக் கிடக்கும் அந்தக் குளத்தின் பெயர் சங்குலக் குளம்.

இதனை திருத்தும் பணியை பொறுப்பெடுத்திருக்கிறது விஜய் கண்ஸ்ரக்ஸன்ஸ். அதன் உரிமையாளர் ரஞ்சிதமூர்த்தி ஏற்கனவே சில குளங்களை திருத்திய அனுபவம் பெற்றவர்.

அம்மனடி அணைக்கட்டு, புலுட்டுமானோடை, இரைச்சகல் ஆகியவை அவற்றில் சில. உண்மையில் குளத் திருத்தம் அல்லது அணைக்கட்டு நிர்மாணத்தை தான் அடிவாங்கி கற்றதாக அவர் கூறுகிறார்.

தூர்ந்துபோன பெரும்பாலான குளங்கள் காட்டுப் பகுதியில் அமைந்திருக்கும். போகும் பாதை இருக்காது. யானை போன்ற மிருகங்களின் தொல்லை மிக அதிகம். உள்நாட்டுப் போர்காலத்தில் இருந்திருக்கக்கூடிய பாசறைகள் இன்றும் ஆபத்து நிறைந்தவையாக இருக்கும். காட்டு அருவிகளின் நீர் வரத்தின் தன்மையை, தீவிரத்தை அனுமானித்தலும் பெரும் பிரச்சினையாக இருக்கும். ஒரு ஒப்பந்தத்தை பெற்றுக்கொண்டு அங்கு குளத்தை திருத்தப் போனால், களத்தில் நிலைமை முற்றிலும் மாறாக, மோசமாக இருக்கும்.

எந்தக் குளத்தை கட்டும்போது, திருத்தும் போது, அதன் நிலத்தின் தன்மை, நீர்வரத்து, அங்கு ஏற்கனவே வாழும் உயிரினங்கள், காடு என்பவற்றையும் கவனத்தில் கொண்டு திட்டமிட வேண்டும் என்கிறார் பொறியியலாளர் சிவலிங்கம்.

இவையெல்லாம், முன்னைய குள நிர்மாணப்பணிகளில் ஒப்பந்ததாரரான ரஞ்சிதமூர்த்திக்கு ஒரு பாடமாகவே இருந்திருக்கிறது. அவர் கடந்து வந்த பாதை நீண்டது. அனுபவமும் பெரியது.

யானைகள் நீர் அருந்துவது முதல் அவற்றின் குணாதிசயங்களை கற்றிருக்கிறார், குளத்துக்குப் போக வீதி அமைத்திருக்கிறார். நவீன வழிகளில் மாத்திரமல்லாமல், பாரம்பரிய வழிகளையும் கையாண்டு ஓடிவரும் நீரை தேக்கிவைக்க முயற்சித்திருக்கிறார். நீரைத்தேடிவரும் உயிரினங்களின் தேவைக்கு தடையாக இல்லாமல் குளத்தை கட்டி முடிக்க முயன்றிருக்கிறார்.





> தூர்ந்துபோன குளங்கள் புனரமைக்கப்பட்டாலே இலங்கை முழுவதற்கும் மட்டக்களப்பு சோறு போட முடியும்

மட்டக்களப்பை பொறுத்தவரை ஒரு காலத்தில் 25 வீதம் அங்கு காட்டுவளம். ஆனால், இப்போது அது 8 வீதமாக குறைந்துவிட்டதாக கணிப்பீடுகள் கூறுகின்றன. ஆனால், அவற்றை அழிக்காமல் குளக்கட்டுக்களில் காடுகளை வளர்க்க இவர்கள் திட்டமிடுகிறார்கள்.

இப்படியாக மழை வேளையில் வரும் நீர்வரத்தை கட்டுப்படுத்தி, தேக்கி வைக்க, குளங்களை கட்டி வழி செய்தால், அதன்மூலம் விவசாயத்துக்கு, குடிநீருக்கு தண்ணீர் கிடைக்கும், யானைகள் போன்ற காட்டு விலங்குகள் தண்ணீர் இல்லாமல் கிராமங்களை நாடுவதை தவிர்க்கலாம், மழை காலத்தில் நகரப்பகுதிகளை நோக்கி பெருவெள்ளம் வருவதை கட்டுப்படுத்தலாம், அதனால், வீதிகள் சேதமடைவதை தவிர்க்கலாம் என்று குளம் கட்டுவதால் ஏற்படும் பலன்களை பட்டியலிடுகிறார் ரஞ்சிதமூர்த்தி.

இப்போது இவர் கையில் எடுத்திருப்பது நாம் முன்னர் சொன்ன சங்குலக் குளம். இதன் மூலம் அண்டிய சுமார் 1000 ஏக்கர் நிலப்பரப்புக்கு நீர் கிடைக்கும். குறிப்பாக உயர் நிலப் பயிர்ச் செய்கைக்கு அது உதவும். குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும். குளத்தை அண்மித்த கிராமங்களில் நீர் ஊற்றுக்கு உதவும் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

உண்மையில் குளத்தை கட்டி முடிப்பது அவர்களுக்கு ஒரு பிரசவ அவதிதான். ஆனால் அதனை கட்டி முடிக்கும் போது, அதனால் மக்கள் அடையும் பலனைக் காணும் போது தானும் ஒரு “குளக்கோட்டன்” என்று அவர் உணர்கிறாராம்.

# மட்டக்களப்பு விமான நிலையத்தின் கதை

பவித்திரன்
மணிசேகரன்





மட்டக்களப்பில் புதூர், வலையிறவு மற்றும் பெரியதுறை ஆகியவற்றுக்கு மையமாக அமைந்து அண்மைக்காலம் வரை பெரிய விமானத்தளமுமாக இருந்த மட்டக்களப்பு விமானநிலையத்தைப் பற்றி கொஞ்சம் பேசுவோம்.

நம்மில் பலரும் வவுணதீவு நோக்கி மட்டு நகரிலிருந்து செல்லும் போது நம் குழந்தைகளுக்கு சொல்லும் விடயம் “மகனே/மகளே இதுதான் மட்டக்களப்பு விமானப்படை“.

காரணம் நாம் பலரும் இதுவரை காலமும் அறிந்திருந்தது அவ்வாறே. ஆனால், இது அமைக்கப்பட்டதற்கான காரணம் வேறு. ‘‘இலங்கையில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யவும் அம்பாறை, திருகோணமலை, பொலன்நறுவை போன்ற பிரதேசங்களுக்கான சர்வதேச போக்குவரத்தை கட்டியெழுப்பும் நோக்குடன் இது அமைக்கப்படவுள்ளது” என அக்கால Civil Aviation திணைக்களத்தின் இயக்குனர் Daily News பத்திரிகைக்கு கூறியதாக 1958 ஜுன் 11ம் திகதி வெளிவந்த Ceylon Observer பத்திரிகையில் காணக்கூடியதாக உள்ளது.



17ம் திகதி நவம்பர் மாதம் 1958ல் ஆரம்பிக்கப்பட்டு பத்து வருடங்களுக்குப் பின்னர், இரத்மலானை மற்றும் யாழ்ப்பாண விமான நிலையங்களுக்கு இடையே

## மட்டக்களப்பு விமானநிலையத்தில் இருந்து வணிக ரீதியிலான சேவை ஆரம்பம்

இயக்கப்பட்ட Air Ceylon விமானச்சேவை மட்டக்களப்பு விமான நிலையத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டது.



CEYLON OBSERVER

125th YEAR, NO. 159 — WEDNESDAY EVENING JUNE 11, 1958 — PRICE 15 CENTS

BEREC

**AIR STRIP FOR BATTICALOA**

*Bladon inspects the site: Muttucumaru visits Jaffna*

PREMIER WILL TAKE FINAL DECISION AFTER P.W.D. REPORTS IN A DAY OR TWO

PLANS ARE BEING DISCUSSED FOR A NEW AIR-STRIP AT BATTICALOA. AT THIS MORNING'S PRESS CONFERENCE, THE COMPETENT AUTHORITY SAID THAT AIR COMMODORE BLADON, WHO VISITED TROOPS IN THE AREA YESTERDAY, INSPECTED THE SITE FOR THE PROPOSED AIR-STRIP.

ROYAL COLLEGE CAMP MAY BE CLOSED TODAY

290 refugees to be

Air Ceylon நிறுவனம் “29 ஆசனங்கள்” கொண்ட நார்த்(Norde) விமானத்தை (பிரெஞ்சு தயாரிப்பு) பயன்படுத்தி கல்ஓயா (அம்பாறை) வழியாக மட்டக்களப்புக்கு தினசரி விமானங்களை இயக்கியது.

இரத்மலானைக்கும் மட்டக்களப்புக்கும் இடையிலான விமானப் போக்குவரத்திற்கு 75 நிமிடங்கள் மட்டுமே தேவைப்பட்டது. ஏர் சிலோன் நிறுவனமானது அரச ஊழியர்களுக்கான வருடாந்தம் வழங்கப்படும் மூன்று புகையிரத ஆணைச்சீட்டிற்கு பதிலாக உள்ளூர் விமான சேவையில் ஒரு முறை பயன்படுத்துவதற்கான முறைமையை அறிமுகப்படுத்தியிருந்ததுடன், அநேகமானோர் இதன்மூலம் விமான பயணத்தின் அரிய அனுபவத்தை பெறும் வாய்ப்பை அனுபவித்தனர்.

எனினும் 1979 ஆகஸ்ட் 31இல் ஏர் சிலோன் நிறுவனம் நெருக்கடியை சந்தித்ததனால் திட்டமிடப்பட்ட விமானச்சேவைகளின் செயற்பாடு நிறுத்தப்பட்டு, 1983 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை விமானப்படை விமான நிலையத்தின் செயற்பாட்டை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது.

1997 ஆம் ஆண்டளவில் விமானப்படை இதனை விரிவுபடுத்தி தமக்கான விமானப்படைத்தளத்தை அமைப்பதற்கான ஒரு திட்டத்துடன் விமான நிலையத்திற்கு அருகில் இருந்த 300 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடியெழுப்பப்பட்டு அவர்களுக்கான மாற்று நிலம் வழங்கப்பட்டது.

இதன் தற்போதைய அமைவிடத்தை புவியியல் ரீதியாக பார்த்தால் , விமான நிலையம் மட்டக்களப்பு நகரத்திலிருந்து தென்மேற்கு திசையில் 1.7 கிலோமீற்றர் தொலைவில், கடல் மட்டத்திலிருந்து 3 மீட்டர் (10 அடி) உயரத்தில் அமைந்துள்ளது.

மட்டக்களப்பு விமான நிலையம் 528,047சதுர அடி (3,497 அடி X 151 அடி) நிலப்பரப்பை கொண்டது. கட்டுநாயக்கவுக்கும் மட்டக்களப்புக்கும் இடையில் விமானப் பயணம் 206 கி.மீ உம், மட்டக்களப்பு மற்றும் இரத்மலானைக்கு இடையே 220 கி.மீ உம் மட்டுமே.

> எயர் சிலோன் ஆரம்பித்த சேவையை வேறு நிறுவனங்கள் தொடரவுள்ளன



இலங்கையின் விமானச்சேவையின் 100வருட பூர்த்தியை முன்னிட்டு 2012ஆம் ஆண்டு உள்ளூர் சேவையை அபிவிருத்தி செய்யும் முகமாக மட்டு விமான நிலையத்தை புனர்நிர்மாணம் செய்யும் நோக்குடன் 2012 செப்டம்பர் 3ம் திகதி அடிக்கல் நடப்பட்டு, மீள் சீரமைப்பின் பின் 2016 ஜுலை 10ம் திகதி ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்டது. இருந்தும் இவ்வருடமே தனியார் பாவனைக்கான விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்கு இலவசமாக தரையிறங்கவும் தரித்து நிற்கவும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது Cinnamon Air நிறுவனம் மட்டும் தினசரி இருதடவைகள் சேவையை மேற்கொள்கின்றது. மேலும் ஏனைய சில விமான நிறுவனங்களும் தமது சேவையை வழங்க முன்வந்துள்ளதாக அறியக்கிடைத்துள்ளது.

இதன் பாவனை தொடருமெனில் சுற்றுலாப்பயணிகள் தமது பிரயாண நேரத்தை அதிகம் சேமிக்கமுடியும் என்பதுடன் நம்மவர்களுக்கும் இதன் மூலம் அதிக பலன் கிடைக்கலாம். நாமும் வெகு விரைவில் விமானத்தில் உள்ளூரில் பறந்து பார்ப்போமே.



நன்றி SLAF MEDIA





# குவேனி என்பவள் யார்?

– கிரான் விஜய் –

மகாவம்சத்தில் வருகின்ற குவேனி அல்லது குவேன்னா பற்றிய கதை தமிழில் பிரபல்யமானதொன்று. மகாவம்சத்தின் “விஜயனின் பட்டாபிஷேகம்“ எனும் ஏழாம் அத்தியாயத்தில் குவேனி பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

மகாவம்சத்தின் ஆறாம் அத்தியாயத்தின் இறுதி வரியானது, “விஜயன் என்னும் பெயர் பெற்ற வீரனான இளவரசன் இலங்கையில் தம்மபாணி என்றழைக்கப்படும் பகுதியில் கரையிறங்கினான். தாதகர் (புத்தர்) நிர்வாணமடைவதற்காக இரட்டை சாலவிருட்சங்களிடையே அமர்ந்த அதே நாளில் இது நடந்தது.“ என விஜயன் வருகையைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

பாலி மொழியிலிருந்த மகாவம்சத்தை மொழிபெயர்த்த வில்ஹெம் கெய்கர் புத்தரின் நிர்வாண ஆண்டு கி.மு. 544 என்பதே இலங்கை வழக்கு என்கிறார். விஜயன் வந்திறங்கிய இடம் மாதோட்டம் எனக் கருதப்படுகிறது.

## குவேனி அரசியா அல்லது ஒரு கூட்டத்தின் தலைவியா?

மகாவம்சத்தின் ஏழாம் அத்தியாயத்தில் குவேனி மற்றும் இயக்கர்கள் பற்றி கூறப்பட்டுள்ள தகவல்களில் இரண்டு முக்கியமான விடயங்கள் காட்டப்பட்டுள்ளன.

ஒன்று, குவேனி இயக்கர் பரிவாரம் அல்லது குழு ஒன்றின் எஜமானி என்பது.

இரண்டு, அக்குழு கடற்கரையோரமாக வரும் கப்பல்களில் உள்ளவர்களை கொல்பவர்கள் அல்லது கைது செய்பவர்கள் மற்றும் கப்பல்களில் உள்ள உணவுப் பொருட்களைக் கொள்ளையிடுபவர்கள் என்பது.

ஏழாம் அத்தியாயத்தில், விஜயனும் தோழர்களும் இலங்கைத் தீவில் நின்றபோது, “அங்கு பெண் நாய் உருவில் ஒரு யஷிணி தோன்றினாள். அவள் குவேன்னா என்பவளுடைய பரிவாரத்தைச் சேர்ந்தவள்“ என்று கூறப்படுகிறது. விஜயனைச் சேர்ந்த ஒருவன், விஜயன் தடுத்ததையும் கேளாமல் நாயுருவில் தோன்றிய பெண் யஷிணியைத் பின்தொடர்ந்து சென்றபோது,



குவேனியிடம் விஜயன் அடைக்கலம் கோருதல்

“மரத்தடியில் சந்நியாசினி போல் நூல் நூற்றுக் கொண்டு அமர்ந்திருந்த, நாயுருவில் இருந்த யஷிணியின் எஜமானி குவன்னாவைக் காண்கின்றான்.“ என்றும் கூறப்பட்டுள்ளது. இதன்வழியாக குவேனி இயக்கர் பரிவாரம் அல்லது குழு ஒன்றின் எஜமானி எனக் காட்டப்படுவதனை அறியமுடிகிறது.

இதனைவிட, மகாவம்சத்தில் இயக்கர் தலைவனின் மகளின் திருமணம் பற்றிக் கூறப்பட்டுள்ள தகவல்களும் குவேனி இயக்கர் குழுவொன்றின் எஜமானி என்பதனைக் காட்டுகின்றது. விஜயனுக்கு ஒரு பெண் செய்யும் சேவையைச் செய்வதற்காக குவேனி, “பதினாறு வயதுப் பருவ மங்கையின் எழிலுருவை எடுத்துக் கொண்டு சகலாபரண பூஷிதையாக“ ஆகி, விஜயனுடன் இருக்கும் வேளை, அருகில் சத்தங்கள் கேட்க, அதன் பொருளை அவளிடம் விஜயன் வினாவினான். அதற்கு அவள், “இதோ இங்கே சிரிஸவத்து என்னும் பெயருடைய இயக்க நகரம் ஒன்றிருக்கிறது. இலங்கை நகரில் வசிக்கும் இயக்க தலைவனுடைய மகள் இலங்கையிலிருந்து இங்கு அழைத்து வரப்பட்டிருக்கிறாள். அவளுடன் அவளுடைய தாயும் வந்திருக்கிறாள். திருமணத்திற்காக அங்கே பெரிய கொண்டாட்டம் நடைபெறுகிறது. அது ஏழு நாட்கள் நடக்கும். அந்தச் சந்தம்தான் இது. ஏராளமான பேர் அங்கு கூடியிருக்கிறார்கள் என அவள் கூறுகிறாள்.“

வம்சத்தபகசினி எனும் நூல், இயக்கர்களுடைய தலைவன் மகாகலசேனன் எனவும் அவன்; சிறிஸ வத்த என்ற இடத்தில் இருந்தான் எனவும் கொண்டா என்ற இயக்கினியின் மகள் பொலமிதாவை அவன் மணமுடித்திருந்தான் எனவும் கூறுகிறது. இந்த தகவல்கள் குவேனி இயக்க குல இளவரசி அல்ல என்பதனைக் காட்டுகிறது.

ஏழாம் அத்தியாயத்தில்; “அவனைப் பற்றித் தூக்கி வீசியெறிந்தாள் குவேன்னா. அதேபோல எழுநூறு பேரையும் ஒருவர் பின் ஒருவராக அவள் தூக்கி வீசியெறிந்தாள்“ எனவும் கூறப்பட்டுள்ளது. அங்கு வந்த விஜயன் அவளை யஷிணி என ஊகித்து கைது செய்கிறான். அதன்பின்னர், “குவேன்னா, விஜயனுடைய ஆட்களை அந்த இடத்துக்கு கொண்டு வந்தாள். அவர்களுடைய பசியைப் போக்க, தன்னால் விழுங்கப்பட்ட வர்த்தகர்களுடைய கப்பல்களில் இருந்த அரிசியையும் இதர உணவுப் பொருட்களையும் அவள் அவர்களுக்கு காட்டினாள்.“ என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த தகவல் குவேனி குழு கப்பல்களில் வருவோரை கைதுசெய்யும் அல்லது அழிக்கும் குழுவாகவும் கப்பல்களில் உள்ள பொருட்களை கொள்ளையிடும் குழுவாகவும் இருந்தது என்பதனைக் காட்டுகின்றது.



குவேனி மற்றும் அவளது குழு பற்றிய இவ்விபரங்களைவிட குவேனி பற்றிய மேலும் பல தகவல்கள் மகாவம்சத்திலும் வம்சத்தபகசினியிலும் கூறப்பட்டுள்ளன. விஜயன் குவேனியின் உதவியுடன் அங்கு கூடியிருந்த இயக்கர்கள் அனைவரையும் கொல்கின்றான். இயக்க ராஜனுடைய உடைகளைத் தான் அணிந்து கொண்டு, தனது சகாக்களுக்கு அவர்களுடைய இதர ஆடையணிகளை அளித்தான். பின் அந்த இடத்தில் சில தினங்களைக் கழித்த பிறகு அவன் தம்மபாணிக்குச் சென்றான். அங்கு விஜயன் தம்மபாணி நகரத்தை ஏற்படுத்தி யஷிணியுடனும் மந்திரிகளுடனும் வசித்து வந்தான். செம்மண்ணின் புழுதியைத் தொட்டதால் கைகள் செந்நிறமாகக் காட்சி தர அந்த இடத்தையும் அந்தத் தீவையும் தம்மபாணி எனப் பெயரிட்டான் என்பது மகாவம்சத்தின் கதை.

முன்னர் இயக்க தலைவன் எனக்கூறப்பட்ட போதிலும் இங்கு இயக்க ராஜன் எனக்கூறப்படுகிறான். குவேனியும் விஜயனுக்கு ராஜ்யமொன்றைத்தருவதாகவே கூறுகிறாள். அத்துடன் விஜயனும் குவேனியும் தம்மபாணி என்ற நகரத்தை ஏற்படுத்தியதாகவும் கூறப்படுகிறது.

குவேனியின் இருபிள்ளைகளும் (மகனும் மகளும்) ஜீவகத்தா, தீபல்ல என அழைக்கப்பட்டனர் எனவும் வம்சத்தபகசினி கூறுகிறது. பிற்காலத்தில் குவேனி விஜயனால் விரட்டியடிக்கப்பட்டு, தன்னிரு குழந்தைகளை அழைத்துக் கொண்டு லங்காபுரத்துக்கு செல்கிறாள். அங்கு அவள் உளவாளி எனச் சந்தேகிக்கப்பட்டுக் கொல்லப்படுகிறாள். குவேனியின் தாய்மாமன் இரு பிள்ளைகளிடமும் விபரத்தைக் கூறி தப்பியோடச் சொல்கிறான். அவர்கள் இருவரும் சுமண கூடத்தை அடைந்து, உரிய வயதடைந்ததும் திருமணம் செய்து கொள்கின்றனர். அவர்கள் நிறையக் குழந்தைகளைப் பெற்றுக் பெருகிக் கொண்டு, மலையகப் பகுதியில் அரசனுடைய அனுமதியுடன் வசித்து வந்தனர். இவர்களிடமிருந்து தோன்றியவர்கள் தான் புலிந்தர்கள் என்ற தகவலையும் மகாவம்சம் தருகிறது.

எனினும் தீபவம்சம் கூறும் விஜயன் கதையில், குவேனி பற்றியோ இயக்கர்களுடனான அவனது தொடர்பு பற்றியோ எதுவும் கூறவில்லை என்பதனைக் கவனத்தில் கொள்ளவும் வேண்டும்.

## “கிழக்கு மாகாணத்துக்கான உள்ளூராட்சி சபைகளில் தலைவர்களை தெரிவு செய்வதில் இதுவரை பெரிய குழப்பமில்லை” -- மாகாண உள்ளூராட்சி ஆணையர் --

தொடர்ச்சி...

‘‘மேயரை அல்லது தலைவரை தெரிவு செய்யும்போது சபை உறுப்பினர்களிடம் திறந்த வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்வதா? இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்வதா? என்பது தொடர்பில் விருப்பம் கேட்போம் என்றும் அவர்களது விருப்பத்தின்படி உரிய வாக்களிப்பை மேற்கொண்டு நகரபிதாவை அல்லது தவிசாளரைத் தெரிவு செய்வோம். ஒருவரின் பெயர் மாத்திரமே பிரேரிக்கப்பட்டால் பிரச்சினையே இல்லை. அவரை ஏகமனதாகத் தெரிவுசெய்வோம்” என்றும் கூறினார் ஆணையாளர்.

‘‘தலைவரைத் தெரிவதில் சிக்கல் நிலை தொடர்ந்தால் கூட்டம் ஒத்திவைக்கப்படும். சிலவேளை தலைவர் பதவிக்கு ஒன்றுக்கு மேற்பட்டவர்களின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டால் பிரச்சினையில்லை. உரியவாக்கெடுப்பை மீண்டும் மீண்டும் நடாத்தி ஜனநாயகமுறையில் தெரிவை மேற்கொள்வோம். இறுதியாக ஒருவர் வருவார். அவரே தலைவர். அங்கு மிகவும் செல்வாக்கான ஒருவரை அனைவரும் தெரிந்தால் (கட்சி தீர்மானிக்காவிட்டாலும்) அவரே தலைவர்” என்றார் சலீம்.

அவர் மேலும் கூறுகையில்;

சிலவேளை வாக்கெடுப்பில் இருவருக்கு ஒரே சமமான வாக்குகள் கிடைத்தால் திருவுளச்சீட்டின் மூலம் தலைவரைத் தீர்மானிக்கலாம். அந்த வகையான தெரிவே காரைதீவு, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேச சபைகளில் நிகழ்ந்தது.



தெரிவுசெய்யப்பட்ட தலைவருக்கு சிலவேளை அடுத்தடுத்த கூட்டங்களைக் கூட்ட கோரமில்லை என்ற நிலைவந்தால் 3 கூட்டங்கள் வரை அவகாசம் கொடுப்போம்.

# தென்னையின் கலை தரும் கோகுலரமணன்



அலங்காரங்களை உருவாக்குவதும் அதில் லயித்திருப்பதும் மனிதரது அடிப்படை இயல்பு. அலங்காரங்களை உருவாக்குவதில் சிறப்பார்வம் கொண்டவர்கள் அதில் வல்லுனர்கள் ஆகின்றார்கள்.
சூழலில் கண்டு அனுபவித்த காட்சிகள் மற்றும் கோலங்களை அடிப்படையாகக் கொண்டு அலங்காரங்கள் உருப்பெறுகின்றன. இதன் காரணமாக



இடத்துக்கிடம் அலங்காரங்களிலும் அதன் வர்ண வேலைப்பாடுகளிலும் வித்தியாசங்கள் காணப்படுகின்றன. இவை பன்மைப் பண்பாட்டு அம்சத்தின் கூறுகளாகவும் அமைந்து காணப்படுகின்றன.

அலங்காரங்களில் இருந்து அவற்றின் அமைப்பு முறைகள், அதற்குப் பயன்படுத்தப்படும் ஊடகங்களின் தன்மை என்பன பன்மைப் பண்பாட்டுக்கான வித்தியாசங்களுக்குப் பங்களிப்புச் செய்கின்றன.

அலங்காரங்கள் பல வகைகளில் காணப்படுகின்றன. அவற்றில் தென்னை மரப்பாளை, ஓலை, மட்டை, தேங்காய்



என்பவற்றைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் அலங்காரங்கள் இலங்கையில் பிரசித்தம் பெற்றவை.

இலங்கையின் தென்னை வளம் இதற்குக் காரணம் ஆகும். ஆயினும் இலங்கையில் தற்பொழுது தேங்காயின் விலை யானை வலை. இது இன்றைய இலங்கையின் தென்னை வளத்தின் நிலையை வெளிப்படுத்துவதாகவும் இருக்கின்றது.

ஆயின், தென்னை வளத்தைப் பெருக்கும் ஆர்வலராகவும், தென்னை அலங்கார விற்பனராகவும் தன்னை நிலைநிறுத்தி இருக்கும் வேதாரணியம் கோகுலரமணன் எனும் இளம் ஆளுமையின் படைப்புத்திறன் உற்சாகந் தருவதாக இருக்கின்றது.

குன்றிவருமொரு பெருவளத்தின் பயன்பாட்டுத் திறத்தையும் படைப்பாக்கத் திறத்தையும் ஒருங்கே இணைத்து முன்னெடுக்கும் நோக்கு

--
கலாநிதி சி.ஜெயசங்கர்
பணிப்பாளர்
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
--



வே.கோகுலரமணனின் படைப்பாக்கத் திறனுடன் சிந்தனைத் திறனையும் புலப்படுத்துவதாக இருக்கின்றது.

உள்ளூர் அலங்காரங்கள், படிமங்களுடன் புதிதாக்கமான அலங்காரங்களையும் படிமங்களையும் ஒருங்கிணைத்து உருவாக்கும் ஆக்கத்திறன் கொண்டவர் வே.கோகுலரமணன்

# ரோபோக்களால் எமது வேலை பறிக்கப்பட்டால் என்ன செய்வது?



தக்கன பிழைக்கும் என்பது இந்த விடயத்திலும் பொருந்தும் போல்தான் இருக்கின்றது.

இயந்திர மனிதன் அல்லது செயற்கை மூளையின் செயற்பாடு எதிர்காலத்தில் எமது வேலைகளைப் பறித்துக்கொண்டு விடுமா? அப்படியானால் இன்னும் சில வருடங்களில் நாம் வேலைக்கு எங்கே போவது என்பது மேற்கத்தைய நாடுகளில் உள்ளவர்கள் இப்போது கவலைப்படும் விடயம்.

இன்னும் கொஞ்சக் காலத்தில் இந்த கவலை இங்கும் பற்றிக்கொள்ளலாம்.

உதாரணத்துக்கு தொலைபேசி மூலம் வாடிக்கையாளர்களுக்கு பதிலளிக்கும் பணியில் இருப்பவர்களின் வேலையை (Call centre) இன்னும் கொஞ்சம் நாளில் ரோபோக்கள் பிடித்துக்கொண்டுவிடுமாம்.

உண்மையில் மனிதனைவிட எந்தவிதமான சலிப்பும் இல்லாமல் தொலைபேசியில் ரோபோக்கள் வாடிக்கையாளர் கேள்விகளுக்கு இரவும் பகலும் பதிலளிக்கும் வல்லமை உள்ளவையாம்.

தொலைபேசியில் பேசும் ரோபோக்களால் அந்த தொழில் துறையில் இருப்பவர்கள் பெரும் வேலை இழப்பை எதிர்கொள்ளவுள்ளனர். குறிப்பாக தொழில்சார் தகுதி தேவையற்ற, உடல் உழைப்பு மாத்திரம் தேவைப்படும் வேலைகளை இலகுவாக ரோபோக்கள் ஆக்கிரமித்துவிடுமாம்.

ஒரு கோடியே இருபது லட்சம் வாடிக்கையாளர்களை கொண்ட தொலைபேசி நிறுவனம் ஒன்று அவர்களுக்கு பணியாற்ற ஒரு லட்சம் தொலைபேசி சேவையாளர்களை வைத்திருக்கிறது. இவர்கள் எல்லாம் விரைவில் வேலையிழப்பர்.

ரோபோக்களை தயாரிக்கும் நிறுவனம் ஒன்று தான் பத்தாயிரம் பேரின் வேலையை செய்யும் 74 ரோபோ அலகுகளை தயாரிப்பதாக கூறியுள்ளது. நாம் ஒரு ஆலையில் வேலை செய்வதைவிட ரோபோக்கள் வினைத்திறனுடன் பணியாற்றுமாம்.

இப்படியான தகவல்கள் உடல் உழைப்பு தொழிலாளர்களுக்கு கசப்பான செய்திகள். அவர்கள் வேலையிழப்பை சந்திக்க நேரிடும்.

ஆனால், இதற்கு மறு பக்கம் ஒன்றும் உள்ளது. அதாவது ரோபோக்கள் செய்ய முடியாத சில விடயங்களும் இருக்கின்றன. அதாவது, ரோபோக்களை இயங்க செய்வது, வடிவமைப்பது, போன்ற விசயங்களில் மனித சக்தி, அறிவு தேவைப்படுகின்றது.

அதுமாத்திரமன்றி, ரோபோக்களை அறிமுகம் செய்வதில் சில நன்மைகளும் இருக்கிறதாம். சில பணிகள் திரும்பத்திரும்ப ஒரே வேலையையே செய்ய வேண்டியவையாக இருக்கும். அப்படியான சுவாரசியமற்ற வேலைகளை ரோபோக்கள் மீது தள்ளிவிடலாம். அதுமாத்திரமல்ல, மனிதனுக்கு உதவியாக, அவர்களது சக்திவிரையத்தை குறைக்க ரோபோக்கள் பயன்பட முடியும்.

மனிதருக்காக, அவர்கள் தரப்பு அழிவு இல்லாமல் ரோபோக்கள் போரும் செய்ய முடியும். ஆப்கான் போர் பெரும் அமெரிக்க வீரர்களின் அழிவுக்கு காரணமான ஒன்று என்று தயங்கிய அமெரிக்க ஜனாதிபதிகூட இப்போது டிரோன்களை(ஆளில்லா விமானங்கள்) கொண்டு அவற்றை வெற்றிகரமாக நடத்தலாமா என்று யோசிக்கிறார் என்கிறது செய்தி,

ஆகவே தமக்கு போரடிக்கும்



வேலைகளை ரோபோக்கள் மீது தள்ளிவிட்டு, ஆக்கத்திறன் உள்ள வேலையை மனிதர் தம்வசப்படுத்த முடியும். ஆனால் இதற்கு தேவையான அறிவை நாம் மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும். ரோபோக்களின் பிரசன்னத்தில் ஏற்படக்கூடிய நிலைமைகளை கையாளும் வகையில் எமது கல்வி முறைமையும் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

தொழில்நுட்ப வளர்ச்சி, வேலையிழப்புக்கு காரணமாகலாம். ஆனால், அது அப்படித்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. அதிலும் நல்ல பலன்களை பெறமுடியுமா என்று பார்த்தாக வேண்டும். அதனால் ஏற்படும் இழப்பை எதிர்கொள்ள புதிய தகமைகளை வளர்த்துக் கொண்டாக வேண்டும்.

கணினி வந்துவிட்ட பிறகு காகிதத்தில்தான் கடிதம் எழுதுவேன் என்று அடம்பிடித்தால் எப்படி. தபால்காரர்களுக்கு வேலையிழப்புத்தான். ஆனால், ஆக்கபூர்வமாக தொலைத்தொடர்பின் ஏனைய பணிகளில் அவர்களை பயிற்றுவித்து வேலைவழங்கலாமே.



# கண்விழித்து வயல் செய்து சேர்த்த சீதேவி – ஒரு விவசாயியின் கவலை

## இன்று சில மணிநேரத்தில் வரும் பணம் அப்படியே போய்விடுகிறது

-படுவான் பாலகன்-



கண்விழித்து வேலை செய்தால் சீதேவி வீட்டுக்கு வந்து சேர்வாள். இப்பெல்லாம் கடதாசிதான் கையில் வந்துசேருது, அதுவும் போறவழிதெரியல்ல என்கிறார் மூன்று தலைமுறையைக் கண்ட சின்னத்தம்பி. சீதேவி என்றவுடனே பெண்ணப்பற்றி சொல்லப்போறாங்களோ என்று பலர் நினைக்கலாம். நீங்க நினைப்பது போன்று பெண்ணைப் பற்றி சொல்லவில்லை. என்ன விடயத்தினை சொல்லவருகிறேன் என்பதனை வாசித்துப்பாருங்கோ புரியும்.

இற்றையிலிருந்து ஒரு தசாப்தத்திற்கு முன்பு படுவான்கரைப்பிரதேசத்தில் மனிதவலுக்கள்தான் வேலைசெய்தன. இயந்திரங்களைக் காண்பது கடினம்தான். இப்பெல்லாம் இயந்திரங்கள் அதிகரித்துவிட்டன. இயந்திரம் எனும் போது, மோட்டார் சைக்கிளும் இயந்திரம்தான், அது இல்லாமலும் சிலர் இருக்கின்றார்கள், பலர் வைத்திருக்கின்றனர். அதற்காக மோட்டார் சைக்கிள் அதிகரித்திருக்கின்றது என்ற விடயத்தினை சின்னத்தம்பி கூறவில்லை. சின்னத்தம்பி சீதேவி பற்றிதான் சொல்லவாறார்.

படுவான்கரையென்றாலே பலருக்கு ஞாபகம் வருபவை வயல்வெளிகள்தான், இங்கு மேடுகளில் வீடுகளும், மற்றைய இடங்களில் எல்லாம் வேளாண்மையும் பயிரும்தான் காணப்படும். இதனால் இங்குள்ள மக்கள் விவசாயத்தினையே அதிகம் தொழிலாக செய்கின்றனர். இங்கு வேளாண்மையை மனிதர்கள்தான் அறுவடை செய்வார்கள், கட்டுவார்கள், சூடு வைப்பார்கள். உழவு இயந்திரம் வருகைதந்ததன் பிறகு, உழவு இயந்திரத்தினால் சூடுமிதித்து நெல்லை வேறாக்கி மூட்டைகளாக கட்டி வீடு கொண்டு செல்வார்கள். வீட்டிலே அடுக்கி வைப்பார்கள். அழகுக்கிற்காக அடுக்கி வைப்பதில்லை. உணவிற்காகவும், மீண்டும் நெற்செய்கை செய்வதற்கும் வீட்டிலே வைத்துக்கொள்வர். இவ்வாறு பயன்படுத்தும் போது, எடுக்க எடுக்க குறையாத அமுதசுரபி போன்று நெல்லும் இருந்து கொண்டு இருப்பது போன்ற உணர்வு வீட்டில் இருப்பவர்களுக்கு ஏற்படும். அதற்காக, அமுதசுரபிதான் என்று சொல்லவரவில்லை.

நெல் அறுவடை செய்து, வீட்டுக்கு நெல் கொண்டு வருவதென்பது, ஒரே நாளில் நடந்து முடியாது. இதற்கு பல நாட்கள் எடுக்கும். இப்போதெல்லாம், ஒரே நாளில், ஒரே நாள் என்றும் சொல்லவும்



முடியாது. குறித்த நேரத்திற்குள் அறுவடை செய்து நெல்லும் கிடைத்து, நெல்லையும் அவ்விடத்திலே விற்றுவிட்டு அதற்கான பணத்தினை கையிலே எடுத்துவிட்டு வீட்டுக்கு வந்திடுவர். வீட்டுக்கு கொண்டுவந்த பணமும் போறவழி தெரியாமல் சென்றுவிடும். சோற்றுக்கு கையேந்தும் நிலையும், கடன் வாங்கும் நிலையும் தான் இப்பெல்லாம் நடக்கின்றது. அப்பெல்லாம் நெல்லுதான் வீட்டின் சீதேவி, இதனால் சோற்றுக்கு போராடவில்லை, என்கின்றார் சின்னத்தம்பி.

வயல் செய்கையில் மிகுந்த ஈடுபாடும், அதுபற்றிய அறிவும் நிரம்பியவர்தான் சின்னத்தம்பி, அவர் சொல்வதுபோன்று, முன்னெல்லாம் அரிசிக்கடை படுவான்கரையில் இருக்கல்ல. இப்போதுதான் திரும்பும் திசைக்கெல்லாம் அரிசிக்கடை இருக்கின்றது.

சின்னத்தம்பியும், சிதேவிப் பற்றி கூறியதோடு, இன்னொரு விடயத்தினையும் கூறினார். கேட்க கவலையாதான் இருந்தது. அதையும் வாசித்துப் பாருங்கோ,

சின்னத்தம்பி சூடுமிதிப்பது இரவில்தான் நடைபெறும், கண்விழித்திருந்துதான் சூடுமிதிப்பர். நித்திரை வந்தால் வைக்கோல் கந்துகளில் தூ ங்கிக்கொள்வர். உழவு இயந்திரத்தின் வேலை முடிந்தவுடன் எழுந்து வைக்கோல் கந்துகளை வெளியாக்குவர். பலர் நித்திரை கொள்வதில்லை. இருந்தாலும் தொடர்ச்சியாக இரவுகளில் நித்திரை விழித்தால், சிலர் தூங்கிக்கொள்வர். அவ்வாறு வைக்கோல் கந்துகளில் தூங்கினால் தெரியவுமாட்டார்கள். ஒரு நாள், ஓரிடத்தில் சூடுமிதித்துக்கொண்டிருக்கும் போது, ஒருவர் வைக்கோல் கந்தில் தூ ங்கிவிட்டார். உழவு இயந்திர சாரதிக்கு இவர் தூங்கியது தெரியாது. உழவு இயந்திரத்தினை வைக்கல் கந்துகளின் மேல் ஏற்றிய போது, உழவு இயந்திரத்தின் சில்லுக்குள் இவரின் கால்தான் அகப்பட்டது. என்ற பழைய ஞாபகத்தையும் சின்னத்தம்பியால் இன்னும் மறக்க முடியவில்லை.

# பல தேவைகளுடன் ஒரு கிராமம் : சமூக அக்கறையுடன் ஒரு அமைப்பு

பவித்திரன்
மணிசேகரன்

ஓர் கிராமம் பல தேவைகளுடன்; ஓர் அமைப்பு சமூக அக்கறையுடன் சங்கமித்த நிகழ்வாக பங்குடாவெளியில் எமது சமூகம் அமைப்பால் நடைபெற்ற மருத்துவ முகாமை பார்க்கலாம்.

பல தேவைகளில் அவசியமான, மருத்துவ தேவைகளை நிவர்த்தி செய்யும் முகமாக மார்ச் மாதம் 25ஆம் திகதியன்று பங்குடாவெளி றோ. த. க பாடசாலையில் மருத்துவ முகாமொன்று எமது சமூகம் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன் போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை ஊழியர்கள் மற்றும்



வைத்தியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். மேலும் மட்டு போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த மனநல வைத்திய நிபுணர் கடம்பநாதன், பொது வைத்திய நிபுணர் உமாகாந் மற்றும் விஷேடமாக லண்டனிலிருந்து



வருகை தந்த மூன்று வைத்திய நிபுணர்கள் மற்றும் மட்டுநகர் போதனா வைத்தியசாலையில் கடமை புரியும் சில வைத்தியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இவற்றைவிட லண்டனில் இருந்து வருகை தந்திருந்த எமது சமூகம் அமைப்பின் லண்டன் கிளையைச்சேர்ந்த சாம் வேணுகோபால் அங்கு கணிசமான பங்களிப்பை செய்திருந்தார்.

கிழக்கு மாகாண மக்களின் தேவைகளைத் தம்மால் முடிந்த வரைக்கு பூர்த்தி செய்வதே எமது சமூகத்தின் நோக்கம் என்றும், புலம்பெயர் நாடுகளிலும் உள்ளூரிலும் உறுப்பினர்களைக் கொண்டு அது மக்கள் நலனுக்காக செயற்படுகிறது என்றும் அவர் கூறினார்.

இதன் போது பொது வைத்திய நிபுணர் ஒருவர் கூறுகையில் பங்குடாவெளி மற்றும் அதன் அருகே வசிக்கும் மக்களுக்கும் மட்டு போதனா வைத்தியசாலைக்குமான தொடர்பு மிகவும் குறைவானதாகவே காணப்படுகிறது. இங்கு வருகை தந்தபின்பே இவர்களின் மருத்துவத்தேவை எந்தளவு முக்கியமானது மற்றும் இவர்களுக்கான மருத்துவ வசதி எந்தளவு பின்தங்கியுள்ளது என்பவற்றை தம்மால் அறியக்கூடியதாக இருந்தது என்று கூறினார்.

இதன்போது மக்களுக்கு நீரிழிவு நோய்க்கான இரத்த பரிசோதனைகள் உடனுக்குடன் நடத்தப்பட்டன. மேலும் கண் பரிசோசனைகள் மற்றும் பார்வை குறைபாடுடையவர்கள் இனங்கானப்பட்டு அவர்களுக்குரிய உரிய வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. இதனூடாக பயன் பெற்றவர்கள் அதிகம் மேலும் காணி சார்ந்த பிரச்சினைகளுக்கு ஆலோசனைகளும் வழங்கப்பட்டது. இதனை நடாத்த முன்னாள் காணி ஆணையாளர் குருநாதன் அவர்கள் கலந்து கொண்டார்.

அங்கு வருகை தந்த சிறுவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு தங்களது திறமையை வெளிக்காட்டகூடிய வகையிலான களமும் அமைத்துக் கொடுக்கப்பட்டது. மேலும் அவர்களுக்கு பயிற்சிப்பட்டறை போன்ற சிறிய அளவிலான பயிற்சிகள் வழங்கப்பட்டு கலந்துரையாடலும் இடம்பெற்றது.



இந்நிகழ்விற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவரும் மற்றும் இதனை ஏற்பாடு செய்த எமது சமூகம் அமைப்பும் பாராட்டுக்குரியவர்கள். அதேவேளை போரினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தின் தேவைகள் மிக அதிகம் என்பதும் இங்கு கருத்தில் கொள்ளப்பட வேண்டியதே. இதுவரை சுமார் 14 மருத்துவ முகாம்களை நடத்திய இவர்களது அனுபவம் இந்த முகாமை சிறப்பாக்க உதவியுள்ளது. பணிகள் தொடரட்டும். சாதகமானவற்றை என்றும் வரவேற்போம்.

அரங்கம்

வெள்ளி, பங்குனி 30, 2018.
இதழ் – 06





கேவோன் அன்றாடோ
இல 21 கூழாவடி மட்டக்களப்பு.


Shain Helon
3rd Cross Road Batticaloa

# பெண்களின் ஆடைகளுக்கான உத்தரவு வழிகாட்டி

பெண்கள் எவ்வாறு உடை அணிய வேண்டும், எவ்வாறு உடைய அணியக் கூடாது? என்பதை குறிப்பிடும் புத்தகம் ஒன்றை தஜிகிஸ்தான் அரசு வெளியிட்டுள்ளது.
இந்தப் ”பரிந்துரைகளின் புத்தகம்” அந்நாட்டின் கலாசார அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.
இதில், 7 வயது முதல் 70 வயதான வரையான பெண்கள் மற்றும் பொருத்தமான ஆடைகளை அணிந்துள்ள மாடல் அழகிகளின் படங்கள் நிறைந்து காணப்படுகின்றன என்று “த ஆசியா-பிளஸ்“ செய்தி இணையதளம் கூறியுள்ளது.



வேலை நேரத்தில், தேசிய மற்றும் மாநில விடுமுறைகளில், திருமணங்களுக்கு, வார இறுதியிலும் கூட என்ன ஆடைகளை அணிய வேண்டும் என்று பெண்களுக்கு அறிவுறுத்தும் அத்தியாயங்களை இந்தப் புத்தகம் கொண்டுள்ளது.

தஜிகிஸ்தான் நாட்டு பெண்கள் எதனை அணிய கூடாது என்று புத்தகத்தின் கடைசியில் ஓர் அத்தியாயம் விளக்குகிறது.

அதிபர் எமோமிலி ரஹ்மோன் தெரிவித்திருக்கும் கண்டிப்பு ஒருபுறம் இருந்தாலும், இன்னும் புகழ் இருக்கின்ற இஸ்லாமிய ஆடைக்கு



எதிரான தேசிய பரப்புரையின் ஒரு பகுதியாக கறுப்பு ஆடைகள், தலைக் கவசம் மற்றும் கிஜாபுக்கு எதிராக இந்த புத்தகம் அறிவுரை வழங்குகிறது.

ஊடுருவி தெரிகின்ற மெல்லிய மேற்கத்திய உடைகளும், குட்டை பாவாடையும் அனுமதிக்கப்படவில்லை. பொருத்தமான ஆடைகளில் மார்பகத்தின் மேல்புறத்தை காட்டும் வகையிலான மற்றும் பின்பக்கமில்லாத ஆடைகளுக்கு ஊக்கமளிக்கப்படவில்லை.

பொதுவிடங்களில் குதிகால் உயரகாலணி அல்லது எளிதாக கழன்று விடும் செருப்பு (சிலிப்பர்) அணிய கூடாது என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதேபோல இறுக்கமான காற்சட்டைகள் அல்லது செயற்கைத் துணிகள் உடல் நலத்திற்கு கேடானது என்று இந்த இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முந்தைய சோவியத் ஒன்றிய நாடுகளில் ஒன்றான தஜிகிஸ்தானில் முக்கியமாக முஸ்லீம் மக்களே வாழ்ந்தாலும், பாரம்பரிய கலாசாரத்தில் இருக்கும் மதச்சார்பற்ற நாடு என்பதை அரசு உறுதி செய்ய முயன்று வருகிறது.

“நீங்கள் அதை வாங்க முடியும் என்றால் நல்லது“

---

இந்தப் புதிய புத்தகம் பற்றி வெளிவந்துள்ள சமூக ஊடக எதிர்வினைகள் எல்லாம் நேர்மறையாக மட்டும் இருக்கவில்லை.

இந்தக் கருத்து மிகவும் நன்றாக உள்ளது என்று ஒருவர் புகழ்ந்துள்ள நிலையில், தேசிய ஆடைகளுக்கு உயர்ந்த விலை நிர்ணயித்திருப்பதற்கு சமூக ஊடகப் பயன்பாட்டாளர்கள் அதிருப்தி தெரிவித்திருக்கின்றனர். ”கலாசார அமைச்சக அதிகாரிகள் எங்களுக்காக ஆடைகள் வாங்கி தரட்டும்” என்று அவர்கள் கோரியுள்ளனர்.

வட கொரியா போல நாட்டை மாற்றுவதாக



ஒருவர் ஆட்சியாளர்களை குற்றஞ்சாட்டியுள்ளார். ”கலாசார அமைச்சகம் பயனில்லாத பிரச்சினைகளைச் கண்டுபிடிப்பதை விட்டுவிட்டு, பிற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அக்கறை காட்ட வேண்டும்” என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இறுக்கமான ஆடைகள் உடலின் சில பாகங்களை மிகைப்படுத்திக் காட்டுகிறது என்பதற்கு எதிராக, ”உடலின் எந்தப் பகுதியை? மூளையிலுள்ள வீக்கத்தையுமா? என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

நன்றி பிபிசி----









# காத்தான்குடி கடற்கரையில் ஒலித்த பெரும் பறை

## நோய் விழிப்புணர்வுக்கான முயற்சியில் கட்டியம் ஆற்றுகை குழு

--யோகநாதன் ஜகேன்--

பறைச்சத்தத்தின் ஒலி நாதம் காத்தான்குடி கடற்கரையை சிறிது சிறிதாக ஆக்கிரமித்தது. மீன் வாடிக்கு அருகாமையில் சிறுவர்களும், முதியவர்களும் கூடியும், குழுமியும் நின்றனர். அரசல்புரசலாக விவாதிப்பதும் தங்களுக்குள் சிரித்துக் கொள்வதும் என ஒருவகை குதூகலம் கூட்டத்தில் தெரிந்தது. ஆர்வம் மேலோங்க அக்கூட்டத்தில் என்ன நடக்கின்றது என்று அறிந்து கொள்ள அவ்விடத்திற்குச் சென்றேன்.

### கூடி நின்றவர்கள் மனதில் இனம் தெரியாத திகில்

ஒரேமாதிரியான பச்சை, கறுப்புநிற உடை அணிந்த இளைஞர்களும், யுவதிகளும், சிறுவர்களுமாக ஒரு கூட்டம் பறை அடித்து, கடற்கரையில் இருக்கிறவர்களை அழைத்து கூட்டம் கூட்டியது. குழுமி நின்ற சிறுவர்களுக்கு ஒரே கொண்டாட்டம். ஆரவாரத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சி ஒருவகைத் துள்ளல் மனக்கிளர்ச்சியை அவர்களிடத்தில் ஏற்படுத்தியிருக்க வேண்டும். என்ன நடக்கின்றது என்ற ஆர்வம் என்னையும் ஆட்கொண்டது.

மெதுவாக பறை அறைந்து கொண்டிருக்க கூட்டத்திற்குள் சென்று என்ன நடக்கின்றது என்ற விவரமறிய முற்பட்டேன்.

அந்தக்குழு கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த கட்டியம் ஆற்றுகைக்குழு எனவும், அவர்கள் நோய் விழிப்புணர்வு நாடகம் ஒன்றை திறந்த வெளியில் அளிக்கை செய்வதற்காகவும் வந்திருக்கின்றனர் என்பதை அறிந்தேன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் பறை அறைந்து கொண்டிருந்த சிறுவன் பறை அறைவதை நிறுத்தினான். எங்கும் ஒரே அமைதி. ஆற்றுகை குழுவினர் திரளான மக்கள் நடுவில் முதலில் சிறுவர்களைப் போன்று தம்மை உருவகித்துக் கொண்டு பேராசை கொள்ளும் மனித மனத்தினை வெளிக்கொணர்வது போன்று ஒரு விளையாட்டை அளிக்கை செய்தனர்.

தொடர்ந்து நோய் விழிப்புணர்வு நாடகம் தொடங்கலாமா? என்ற வினாவுடன் நாடகம் தொடங்கினர்.

"தல.....தல.....தல......தல.....சீமியா..." என்ற பாடலுடன் ஆரம்பமாகிய நாடகம் குடும்பமொன்று பரம்பரை நோய்களை எவ்வாறு பெற்றுக் கொள்கின்றது எனவும் குறிப்பாக தலசீமியா நோய்க்கான காரணி, அவற்றின் அறிகுறிகள், அவற்றிக்கான வைத்திய முறைகள், அவை உருவாகாமல் தடுக்கும் வழிகள் என நாடகத்தின் ஒவ்வொரு அங்கமும் பார்வையாளர்களை கவரும் விதமாகவும் நகைச்சுவை துணுக்கு காட்சிகளாகவும், அழுகை, ஓலம் என்று நோயின் தீவிரத்தினையும் உணர்த்தியது.

கடந்த கால கணிப்பின் பிரகாரம் தலசீமியா நோய் அதிகம் பரவும் இடமாக காத்தான்குடி இனம் காணப்பட்டது. இது ஒரு பரம்பரை நோய் ஆகும். இரத்தத்தில் காணப்படும் செங்குருதி சிறுதுணிக்கைகளில் உள்ள ஹீமோகுளோபின் எனப்படும் பதார்த்தத்தின் அளவு குறைவடைவதனால் இரத்தத்தின் எச்பி அளவு குறைவடைந்து ஒட்சிசனை காவும்திறன் குறைவடைகின்றது.

இந்நோய் அல்பா தலசீமியா, பீற்றா தலசீமியா என இருவகைப்படும். பீற்றா தலசீமியா நோயே இலங்கையில் அதிகம் இனங்காணப்படும் நோயாகும்.



கண், நாக்கு வெளிறிபோதல், சோர்வுத்தன்மை, களைப்பு, மூச்சு வாங்கல், உணவில் பிரியம் இன்மை, மண்ணீரல்.'.கல்லீரல் வீங்குதல், தலை சீரற்ற விதத்தில் பெருத்துக் காணப்படல் போன்ற அறிகுறிகளுடன் இருக்கும் இந்நோய்க்கான வாழ்நாள் சிகிச்சையாக நான்கு வாரங்களிற்கு ஒருதடவை இரத்தம் மாற்றுவது அவசியமாகும். அத்துடன் குருதியில் இரும்புச்சத்து அதிகரிக்கும்போது இரும்பை சுத்திகரிக்கும் மருந்தான டெஸ்போரோக்கிமைன் ஏற்றுதல் வேண்டும்.

உரிய அளவில் இரத்தம் ஏற்றப்படாதவிடத்து முகத்தின் விகாரத்தன்மையும், கல்லீரல் வீக்கமும் ஏற்படும். இரத்தத்தில் அதிகரிக்கும் இரும்புச்சத்து மூளையின் கபச்சுரப்பி, இதயம், ஈரல், சதையி, தோல், சிறுநீரகம் போன்றவற்றில் படிந்து அவற்றின் தொழிற்பாட்டை இயல்புத்தன்மை அற்றதாக மாற்றிவிடும். பெண்களிற்கு மாதவிடாய் கோளாறுகள், ஏற்படவும் வாய்ப்புண்டு. நீரிழிவு நோய் ஏற்படல் மற்றும் இதயம், சிறுநீரகம் பாதிப்புறுவதால் மரணங்கள் சம்பவிக்கவும் வாய்ப்புக்கள் உண்டு.

பரம்பரையாக இரத்தத்தில் இவ் நோய்க்காரணிகள் உள்ளவர்கள் அது போன்ற நோய்க் காவியான ஒருவரை மணம் செய்வதால் பிறக்கின்ற குழந்தைகளும் இந்நோய்க்கு ஆளாகின்றனர். திருமணத்திற்கு முன்னரான இரத்தப்பரிசோதனை இதற்கான நிரந்தரத் தீர்வாகும். ஆனால் அறுவை சத்திர சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியும். "அதற்கு 68 இலட்சம் செலவாகும் துர்ப்பாக்கிய



நிலை உள்ளது" என்ற பேசுபொருளுடன் கடற்கரையோர நாடகம் முடிவடைந்தது.

கூடி நின்றவர்கள் மனதில் இனம் தெரியாத திகில். நோயின் தீவிரத்தைப் புரிந்து கொண்டவர்களாக பார்வையாளர்கள் காட்சியளித்தனர். இந்நோய் தொடுதல், பழகுதல் போன்ற புறக்காரணிகளால் தொற்றாது என்ற முன்மொழிவு நாடக குழுவினரால் கூறப்பட்டது.

### சமூக இன்ப துன்பங்களை ஆழமாக பார்த்து மக்களை விழிப்படையச் செய்யும் கலைஞர்கள்

கடந்த காலங்களில் கட்டியம் ஆற்றுகை குழு இவ்வாறான திறந்தவெளி நாடகங்கள் ஊடாக மக்களை விழிப்புணர்வு செய்து வருகின்றது. இக்குழுவின் அமைப்பாளர் இளையதம்பி குகநாதன் அவர்கள் கூறுகையில், □நாடகம் சமூகத்துடன் இணைந்து அவர்களிற்கு பயன்பெறும் வகையில் ஆக்கபூர்வமாக அமைய வேண்டும். அந்தவகையில் விழிப்புணர்வு நாடகங்களை அதிகமாக பல்வேறு இடங்களிலும் அளிக்கை செய்துவருகின்றேன். பொதுநிறுவனங்களும் அனுசரணை கொடுக்க முன்வருகின்றன. சமூக இன்ப துன்பங்களை ஆழமாக பார்த்து மக்களை விழிப்படையச் செய்யும் கலைஞர்களாகவே நான் என்னையும் எனது குழுவையும் அடையாளம் காட்ட விரும்புகின்றேன்." என கட்டியம் ஆற்றுகை குழுவை அவர் அடையாளப்படுத்திக் கொண்டார்

ஊயசவையள, நூர்நுனு போன்ற நிறுவனங்கள் மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை என்பன சமீபகாலமாக இவ்வாறான விழிப்புணர்வினை மக்கள் மத்தியில் கொண்டு வருவதற்கு முயற்சி செய்து வருகின்றமை மனங் கொள்ளத்தக்கது.

தொடர்ச்சி...

## மக்கள் உணர்வுகள் மலைக்கச் செய்கின்றன

காணப்படுகின்றது. இந்த நிலையை கட்சிகளும் அவற்றின் உறுப்பினர்களும் புரிந்துகொள்ள வேண்டும். தமது மக்களுக்கான செயற்பாடுகளை விரிவுபடுத்துவதுடன், அவர்கள் மாற்றியமைக்கவும் முயல வேண்டும். அதைவிடுத்து தொடர்ந்தும் மக்களை ஏமாற்றும் பணிகளை அவர்கள் தொடர்ந்தால் அவர்கள் மக்களால் ஏமாற்றப்படுவார்கள்.

ஊடகங்களுக்கும் அவை பொருந்தும். மக்களுக்கு பொருத்தமில்லாத, தமது வணிக நோக்கை மாத்திரம் இலக்காகக் கொண்ட நடவடிக்கைகளை ஊடகங்கள் தவிர்க்க வேண்டும். மக்களின் ரசனையை ஊடகங்களின் படைப்புக்கள் உயர்த்த வேண்டுமே ஒழிய சீரழிக்கக் கூடாது. உண்மையான தகவலை தர முயற்சிக்க வேண்டுமே ஒழிய பொய்ப்பிரச்சாரங்களை கட்டவிழ்த்துவிடக் கூடாது.

இந்த விடயத்தில் நாமும் மிகக் கவனமாக இருக்க விளைகிறோம். மக்களை இன்னும் அதிகமாக புரிந்துகொள்ள நினைக்கிறோம். அவர்களோடு சேர்ந்து அவர்களுக்காக இணைந்து ஓட நாமும் தயாராக இருக்கின்றோம். நல்லிணக்கமே இறுதி நிலவரமாக இருக்கட்டும்.



# சர்வதேச ஓட்டிசம் தினம் சித்திரை 2

## ஓட்டிசம் மாற்றுத்திறனாளிகளை வலுவூட்டுவோம்




சாதாரண மனிதர்களுக்கு அவர்களது உரிமைகள், தீர்மானமெடுத்தல், சுயாதீனமாக வாழுதல், அவர்களது தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் போன்றவற்றிற்கு உரிமை உள்ளதை ஏற்றுக்கொள்வது போல் "ஓட்டிசம்" மாற்றுத்திறனாளிகளுக்கும் அதேவிதமாக உரிமை உள்ளதை ஏற்க, எங்கள் மனப்பாங்குகளில் மாற்றங்களை இவ்வருட "ஓட்டிசம்" விழிப்புணர்வு நாளில், ஏற்படுத்திக் கொள்வோம்.

-- அன்றியோ குயிற்றாஸ். செயலாளர் நாயகம். ஐக்கிய நாடுகள் சபை.--

-- டாக்டர் பா யூடி ரமேஸ் ஜெயக்குமார் --



மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சாசனத்தை உரிய வகையில் அமுல்படுத்துவதில் உள்ள தடைகளை கண்டறிந்து நீக்குவதற்கான பயனுடைய கலந்துரையாடல்கள் 2017, கார்த்திகை மாத ஐக்கிய நாடுகள் பொது அமர்வில் பரிசீலிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தலுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### இதய, சுவாச, சிறுநீரக நோய்களைவிட எதிர்காலத்தில் "ஓட்டிசம்" பெரும் சவாலாக அமையப்போகின்றது

இந்த தீர்மானங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கியமான விடயங்கள், மாற்றுத்திறனாளிகள் தாம் எதிர்கொள்ளும் ளின் பல்வேறு வகையான, அதிர்ச்சியூட்டடும் வகையிலான புறமொதுக்குதல்களில் இருந்து பாதுகாக்கப்பட்டு அவர்களின் சுயாதீனம் மற்றும் அடிப்படை மனித உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வலியுறுத்துகின்றது.

ஐக்கிய நாடுகள் சபை 2018ஆம் ஆண்டிற்கான சர்வதேச "ஓட்டிசம்" விழிப்புணர்வு நாளில் "ஓட்டிசம்" மாற்றுத்திறனாளிகளான பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் வலுவூட்டல்களை அவர்களுக்காக வேலை செய்யும் அமைப்புக்கள் சவால்களை வெற்றிகொண்டு, அவர்களின் உரிமைகளை நிலைநாட்ட வேண்டும் என்று வேண்டுகோள்விடுக்கின்றது.

மாற்றுத்திறனாளிகளான பெண்பிள்ளைகள் ஆரம்பப் பாடசாலைகள் முதல் புறக்கணிக்கப்பட்டு அவர்களின் கல்விகற்கும் உரிமை மறுக்கப்படுகின்றது.

பெண்கள் பொதுவாகவே ஆண்களுடன் ஒப்பிடும்போது வேலைவாய்ப்பொன்றை பெற்றுக்கொள்வதில் பாரபட்சம் காட்டப்படுகின்றார்கள். குறிப்பாக மாற்றுத்திறனாளிகளில் இந்த நிலைமை மிக அதிகமாக உள்ளது. உலகளாவிய ரீதியில் பெண்கள் உடல், உள, பாலியல், பொருளாதார துஸ்பிரயோகங்களுக்கு அதிகம் முகம்கொடுக்கின்றார்கள். மாற்றுத்திறனாளிகளான பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகள் மிக அதிக அளவில் பால்நிலை வன்முறையால் பாதிக்கப்படுகின்றனர். அத்துடன் சமூகநாணம், புறமொதுங்குதல் போன்றவற்றாலும் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். இக்காரணங்களால் மாற்றுவலுவுடைய பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் பாலியல், இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பான சேவைகளை பெற்றுக்கொடுப்பதற்கும், ஒருங்கிணைந்த பாலியற்கல்வியை கற்பதற்கும் பெரும் தடைகள் காணப்படுவதோடு அவற்றை பெற்றுக்கொள்வதற்கும் பாரிய சவால்கள் காணப்படுகின்றன.

ஆகவே விழிப்புணர்வு நாளில் இத்துறை சார்ந்தவர்கள், நலன்விரும்பிகள், தொண்டு அமைப்புகள் இந்த சவால்களை எதிர்கொண்டு மாற்றுத்திறனாளிகள் இவற்றை எவ்விதத் தடையுமின்றி பெற்றுக்கொள்ள ஆவன செய்வதற்கு ஐக்கிய நாடுகள் சபை வேண்டுகோள் விடுக்கின்றது.

மாற்றுத்திறனாளிகளான பெண்கள் தமக்குப் பொருத்தமான வாழ்க்கை துணையொன்றை தேர்ந்தெடுத்து, திருமண வாழ்க்கையுடன் பிள்ளைகளை பெற்றெடுத்து மகிழ்சிகரமான வாழ்க்கை வாழ்வதற்கான நடைமுறைச் சாத்தியங்கள், தடைகள் என்பவற்றை ஆலோசிப்பதுடன் இதில் ஏனையவர்களுடன் உள்ள சமசந்தர்ப்பம், சமவாய்ப்புக்கள் குறித்தும் விவாதிக்க



அழைக்கின்றது. முதன்முதலாக ஐக்கிய நாடுகள் சபை 2007இல் "ஓட்டிசம்" சர்வதேச விழிப்புணர்வு நாளாக ஏப்பிரல் 2ம் திகதியை பிரகடனப்படுத்தியுள்ளது.

"ஓட்டிசம்"
--------------------

பிறக்கினற குழந்தைகளில் "ஓட்டிசம்" பாதிப்பு உலகளவில் அதிகரித்து வருவதை காணக்கூடியதாக உள்ளது. அமெரிக்காவில் பிறக்கின்ற 68 குழந்தைகளில் ஒருவர் மாற்றுத்திறனாளியாவார். இதில் ஆண்பிள்ளைகள் 42இல் ஒருவராகவும், பெண்பிள்ளைகளில் 189இல் ஒருவராகவும் உள்ளனர். இலங்கையில் பிறக்கின்ற 90 பிள்ளைகளில் ஒருவர் இதனுள் அடக்கப்படுகின்றனர். அத்துடன் சிறுவர்களில் காணப்படுகின்ற இதய, சுவாச, சிறுநீரக நோய்களைவிட எதிர்காலத்தில் மிக சவாலாக "ஓட்டிசம்" அமையப்போகின்றது என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கின்றது.

ஆரம்பத்திலேயே பெற்றோர்கள், சுகாதாரதுறை சார்ந்தவர்கள்; ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்கள் போன்றோர் இனங்கண்டு உரிய இடையீடுகளை மிக விரைவாக ஆரம்பிக்கும்போது பிள்ளைகளின் திறன்கள் மிக கூடியளவில் முன்னேற வாய்ப்புள்ளது.

தாயினால் தனது மகவின் வளர்சிப்படிநிலையில் ஏற்படும் தாமதம் அல்லது முன்னேற்றமின்மை என்ற ஆதங்கத்தில் இருந்து இவ் அறிகுறிகளை கண்டறியலாம்.

"ஓட்டிசம்" பிள்ளைகளை இனங்கண்டு நோய் நிர்ணயம் செய்வதற்கு, மருத்துவ உலகில் உள்ள எந்த பரிசோதனைகளும் உதவவில்லை. மாறாக புலன் உறுப்புக்கள் உட்புற அவயவங்களில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிவதற்கு மருத்துவ பரிசோதனைகள் உதவலாம்.

ஓட்டிசத்தை இனங்காண்பதற்கான தகவல்கள் குழந்தை ஒன்று பிறந்த ஆறு மாதம் முதல் இருபத்திநான்கு மாதங்கள் வரையான இரண்டு ஆண்டுகளில் வளர்ச்சிப்படிநிலைகளில் ஏற்படும் தாமதம் அல்லது பின்னடைவுகள் முக்கியமாக கவனத்தில் எடுக்கப்படுகின்றன.

ஆறாவது மாதத்தில் இருக்கவேண்டிய புன்னகை, சந்தோசமான வெளிப்படுத்தல்கள் இல்லாதிருத்தல், கண் தொடர்பு - குறிப்பாக தாயுடன் அற்றிருத்தல், ஒன்பதாவது மாதத்தில் வாயால் எழுப்பும் ஓசைகள், உடல் மொழி அசைவுகள் இல்லாதிருத்தல், பன்னிரண்டாவது மாதத்தில் வாயால் உமிழ்நீரைக் கொண்டு செய்யும் முட்டை விடுதல் இல்லாதிருத்தல், கைகளால் பொருட்களை சுட்டிக்காட்டுதல், தொடுதல், விளையாடுதல் இல்லாதிருத்தல், பிள்ளையின் தாய், தந்தை, சகோதரர்கள் தமது தம்பி தங்கையின் பெயர் சொல்லி கூப்பிடும்போதும் எதுவிதமான சமிக்ஞையையும் வெளிக்காட்டாமை, 16வது மாதம் ஆகியும் எந்த சொற்களையும் சொல்லவோ, உச்சரிக்கவோ முடியாதிருத்தல், இருபத்திநான்காவது மாதம் ஆகியும் ஒன்று, இரண்டு சொற்களையாவது கதைக்காமல் இருத்தல். இந்த இரண்டு வருட காலங்களில் செய்த, சொன்ன விடயங்களையும் செய்யாதிருத்தல்,

இவற்றுடன் எந்த வயதிலும் காணப்படக்கூடிய பின்வரும் விடயங்கள் மிக முக்கியமானவை. கண் தொடர்பு அற்றிருத்தல் கூடுதலாக தனிமைப்பட்டிருத்தல், மற்றவர்களின் உள்ளுணர்வுகளை விளங்கிக்கொள்ள முடியாமை, வாய்மொழிப் பேச்சு, உடல் மொழி வெளிப்பாடுகள் அற்றிருத்தல், ஒரே சொல்லை அல்லது சொற்றொடர்களை மீளமீளச் சொல்லுதல். அத்துடன் நாங்கள் சொல்லும் சொல்லையே மீளச் சொல்லுதல். தனது சூழலில் அல்லது நாளாந்த செயற்பாடுகளில் சிறிய மாற்றம் ஏற்பட்டாலும் அதனால் அதிகமாக கோபப்படுதல் அல்லது அதற்கு ஏற்றவிதமாக தன்னை மாற்றியமைத்துக் கொள்ள முடியாமை, குறிப்பிட்ட சில விடயங்களில் மட்டும் அதிக ஆர்வம் காட்டுதல், ஒரே விதமான செயலயே மீள மீளச் செய்துகொண்டிருத்தல், சமூகச் செயற்பாடுகள், தனது சகபாடிகளுடன் சேர்ந்து விளையாடுதல், தங்களது தேவைகளைக் கேட்டு பெற்றுக் கொள்ளுதல் என்பன அற்றிருத்தல் ஆகியனவும் அடங்கும்.

"ஓட்டிசம்" பாதிப்பு உள்ள பிள்ளைகளில் சாதாரண, மிதமான, தீவிரம் என மூன்று வகையில் இப்படிநிலைகளை வரையறை செய்யலாம்.

இவர்களில் அறிவாற்றல் மூளை விருத்தி போன்றவற்றில் அதீத திறன் உள்ளவர் முதல் தீவிர கற்றல் இடர்பாடுகள் உள்ளவர் வரை உள்ளனர். தொடர்பாடலுக்கான பாதிப்புக்கள் பேச்சு முதல் உடல் மொழி வெளிப்பாடுகள்வரை பாதிக்கப்பட்டிருக்கலாம். புலன் தூண்டல்களிற்கான துலங்கல்களில் தாழ்நிலை முதல் அதி உயர் நிலை வரை வேறுபடலாம்.

இவ்வாறான இரு வேறுபட்ட நிலைமைகளுக்கு இடையில் பிள்ளைகள் காணப்படலாம். இதனாலே 'Autism Spectrum Disorder' என அழைக்கப்படுகிறது. இவ்வாறான பிள்ளைகளை நோய் நிர்ணயம் செய்வதற்கு பன்முக ஆளுமை அணியினரின் உதவி இன்றியமையாதது. இதற்கு சிறுவர் உளநலநிபுணர்கள், வளர்ச்சிநிலை குழந்தை நலநிபுணர்கள், உளவியல் நிபுணர்கள், பேச்சுச் சிகிச்சையாளர், தொழில்வழி சிகிச்சையாளர், இயன்மருத்துவர்களின் உதவிகள் அத்துடன் இவர்களின் வழிகாட்டலுடனான கற்பித்தல் முறைகள் மிகப்பயனுடையவை.

### ஓட்டிசம் பற்றி அறிந்து, பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவுங்கள்

"ஓட்டிசம்" விழிப்புணர்வு நாளில் நாங்கள் எல்லோருமாக இதனால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கும், அவர்களின் பெற்றோர்களுக்கும் அத்துடன் சேவை வழங்குபவர்களான ஆசிரியர்கள், நலன் விரும்பிகள், நிர்வாகிகள் போன்றவர்களுடன் கைகோர்த்து இவற்றிற்கான பல்வேறு உதவிகளை செய்வதோடு "ஓட்டிசம்" குறித்த சமூகநாணம், புறம்ஒதுக்குதல் போன்ற வேண்டத்தகாத செயற்பாடுகளை தவிர்த்து அவர்களையும் புரிந்துணர்வுடன் அன்பு செய்வதற்கு முன்வருவோமாக.

# மட்டக்களப்பு நகரில் மறைந்து போன திரையரங்குகள் 2

கலாபூசணம்
அரங்கம் இரா. தவராசா
ஜே.பி

(சலனச் சித்திரங்களை எங்களுக்கு காட்சிப்படுத்திய அரங்கங்களின் வரலாற்றை ஆராய்கிறார் கலாபூசணம் அரங்கம் இரா.தவராசா. இவரை விட்டால் திரையின் கதை சொல்ல இங்கு இனி ஆளில்லை)

விஜயா திரையரங்கு
------------------------------

விஜயா திரையரங்கில் அதிக நாட்கள் ஓடிய திரைப்படங்களாக எங்கவீட்டுப்பிள்ளை, காதலிக்க நேரமில்லை, சிவந்த மண், வசந்தமாளிகை, தில்லானா மோகனாம்பாள் என்பவைகளை குறிப்பிட்டுச் சொல்லலாம். எங்கவீட்டுப்பிள்ளை விஜயா படமாளிகையில் காண்பிக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளையில்தான் 1965ல் எம். ஜி. ராமச்சந்திரன், பி. சரோஜாதேவி ஆகியோர் மட்டக்களப்பு முற்றவெளி மைதானத்திற்கு வருகை தந்திருந்தார்கள். அந்த மேடையின் இரு மடங்கிலும் விஜயா படமாளிகையின் எங்கவீட்டுப்பிள்ளை விளம்பரப் பதாதைகள் அலங்கரித்தன என்பதை இத்தருணத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

இத்தியேட்டரில் அந்நேரம் ஒப்ரேட்டராக பணியாற்றியவர் துரைராஜ் என்பவராகும்.

05. ராஜேஸ்வரா தியேட்டர்
---------------------------------------

அந்தோணியார் வீதியூம் முனைத்தெருவூம் சந்திக்கும் இடத்தில் இத்தியேட்டர் அமைந்திருந்தது. இப்பட மாளிகை அமைக்கப்பட முன்பு இது ஒரு வயல் காணியாகும். இக்காணியை செப்பமிட்டு பட மாளிகையை அமைத்தார்கள். இரு பங்காளிகளான பாக்கியராஜா என்பவரும் ஈஸ்வரன் என்பவரும் இவர்களின் பெயரில் வரும் பாக்கியராஜாவின் பின் பகுதியான ராஜா என்னும் பெயரும் ஈஸ்வரனை முன்னிலைப்படுத்தும் பெயரையும் இணைத்து இப்பட மாளிகைக்கு "ராஜேஸ்வரா" என பெயர் சூட்டப்பட்டது. இப்பட மாளிகையில் சிவாஜிகணேசன், சாவித்திரி ஆகியோர் நடிக்க மு.கருணாநிதியின் கதை வசனத்தில் மேகலா பிக்சர்ஸ் வழங்கிய "குறவஞ்சி" என்னும் திரைப்படமே 1960ல் திரையிடப்பட்டது.

இத்திரையரங்குத் திறப்பு விழாவில் இலவசக் காட்சிகளாகவே குறவஞ்சி



காட்டப்பட்டது. இப்பட மாளிகையில் ஒப்ரேட்டர்களாக சின்னராசா என்பவரும் மம்மக்காசிம் இப்றாகீம் என்பவரும் பணியாற்றினார்கள்.

இத் திரையரங்கில் நீண்ட நாட்களாக ஓடிய படங்களாக திருடாதே, அடிமைப்பெண், ரீ வள்ளி, எங்கிருந்தோ வந்தாள், ராஜா என்பவைகளை குறிப்பிடலாம்.
இத்திரைப்பட மாளிகை காலப்போக்கில் வருமானக் குறைவால் மாற்றியமைக்கப்பட்டு இப்போது "∴புட் சிற்றி" என்கின்ற வியாபார ஸ்தாபனம் அங்கு செயற்படுகின்றது.

06. மட்டக்களப்புச் சினிமா
-----------------------------------

வீரகத்திப் பிள்ளயார் கோயிலுக்கு முன்னால் அமைந்துள்ள தோமஸ் லேனில் "மட்டக்களப்புச் சினிமா" என்னும் பெயரோடு டேவிட் என்பவர் இக்கொட்டகையை நிறுவினார். எம்.ஜி.ஆர், சரோஜாதேவி, நம்பியார் ஆகியரோடு இன்னும் பலர் நடித்து ரி. ராமாயணசாமி கதை வசனத்தில் பி.வி.என். தயாரிப்பில் வெளியான திரைப்படமான "மாடப்புறா"வே இங்கு காண்பிக்கப்பட்ட முதல் திரைப்படமாகும். இது 18.03.1962ல் வெளியானது.




இக் கொட்டகை சுழல் காற்றினால் அள்ளுண்டு சேதமடைந்ததால் தொடர்ந்து இதை நடத்த நிர்வாகம் கரிசனை செலுத்தவில்லை. இத்திரையரங்கில் கடைசியாகக் காட்டப்பட்ட திரைப்படம் சிவாஜிகணேசன், மாதுரிதேவி ஆகியோரின் நடிப்பில் எஸ்.டி.சுந்தரம் தயாரிப்பில் ரேவதி பிக்சர்ஸாரின் "மனிதனும் மிருகமும்" என்ற திரைப்படமாகும்.
இக் கொட்டகையில் ஒப்ரேட்டராக வேலை பார்த்தவர் மம்காசிம் இப்ராகிம். இவர் பின்பு ராஜேஸ்வரா பட மாளிகையில் வேலைக்கு சேர்ந்து கொண்டார்.

நோட்டீஸ் கரத்தை
----------------------------

மேற்படி திரையரங்குகளோடு இன்னும் சுவையான வரலாறும் சேர்ந்திருக்கின்றது. அதையும் இத்தருணத்தில் அசை போட்டுப் பார்ப்போம்.

திரைப்படங்கள் திரையிடப்படும் தினத்தையும் அதன் விளம்பரத்தையும் ரசிகர்களுக்கு தெரியப்படுத்த அந்தக் காலத்திலிருந்த "வக்கிக் கரத்தை" என்னும் மாட்டு வண்டியில் மேளம் ஒன்றை வைத்து அதில் இரண்டு உறுதியான குச்சிகளினால் ஒருவர் செவிக்கினிய தாளம் தட்ட இன்னொருவர் "நோட்டீஸ்" என அழைக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களை போட்டுக்கொண்டே வருவார். சகல தியேட்டர்களும் இதே வழியைத்தான் கையாண்டன. இந்த நோட்டீஸ்களை சேகரிக்க இவ்வண்டியின் பின்னால் சிறுவர்களின் படையொன்று சென்று கொண்டே இருக்கும். அந்தச் சிறுவர்களில் நானும் ஒருவன்.

இந்த வண்டிக் கரத்தைகளுக்கு உரிமையாளர்களாக ஓ.கே. துரைராஜா, ஓ. கே. செல்வராஜா என்பவர்கள் இருந்தார்கள். நோட்டீஸ் கொடுப்பவர் "பெந்து போய்" என அழைக்கப்பெற்ற வைரமுத்து என்பவராவார். மேளத்தில் தாளம் தட்டுபவர்கள் கலந்தர் மஜிது, செ.நடராசா ஆகியோராவர்.

70களில் விஞ்ஞான மாற்றத்தால் மோட்டார் வாகனத்தில் ஒலிபெருக்கி மூலம் இச் செயற்பாடு மாற்றமடைந்தது.

டேஸ்ட் கடை
-----------------------


அத்திரையரங்குகளில் "டேஸ்ட் கடை" என்னும் அங்காடித்தட்டிகள் உருவாகின. அதில் லொயிட்ஸ் அவெனியு தெருவில் சுல்தான் காக்கா, மீரிஷா என்பவர்கள் இம்பீரியல் தியேட்டரையும், சேட்டா என்பவர் விஜயா படமாளிகையையும் நம்பி தங்கள் வியாபாரத்தை மேற்கொண்டனர்.

இதில் சாதாரணமாக இரண்டரைக்கு இரண்டு அங்குல அளவுடைய மரவள்ளிக் கிழங்குப் பொரியல் ஐந்து சதம், பருப்பு வடை ஐந்து சதம், பொரித்த பருப்பு, சீவல் கிழங்கு, அவித்த கடலை, மாசி வடை, கருவாட்டு பற்றிஸ் என பல நொருக்கு தீனிகள் விற்பனை செய்யப்பட்டன. இதில் கிடைக்கும் வருமானத்தில்தான் அவர்கள் தங்கள் வாழ்க்கையை கொண்டு செலுத்தினர்.

ராஜேஸ்வரா பட மாளிகைக்கருகில் "கொப்பிறட்டித்தனம்" மட்டக்களப்பு சினிமாவுக்கருகில் மீரான் காக்கா என்பவர்களும் அங்காடித் தட்டிகளை அமைத்து வியாபாரம் செய்தார்கள்.

ஒப்பனா
---------------------

இந்த திரையரங்குகளோடு ஒன்றிப்போன சிலர் பற்றியும் இங்கு கூறியாக வேண்டும்.



மேற்சொன்ன திரையரங்குகளுக்கும் முதல் காட்சிக்கு "ஒப்பனா" என்னும் முதியவர் ஒருவர் கலரிக்கான முன் வாங்கில் அமர்ந்திருப்பார். கையில் எப்போதும் ஒரு முழுச்சுருட்டு எரிந்தபடி காட்சி தரும், இவருக்கு "மியாவ்" என்றால் கோபம் வரும். கோபம் அடையும் ஒப்பனா தன் தலையை அருகே இருக்கும் கட்டடங்களில் மோதி, தன்னை வருத்தி கேலி செய்பவர்களுக்கு தண்டனை கொடுப்பது வழக்கம். இதனால் இளைஞர்கள் இவரை கோபமேற்ற "மியாவ்" என்றழைத்தால் அருகில் இருக்கும் ஏனையோர்கள் சண்டைக்குப் போவார்கள், சண்டையிட்டதுமுண்டு.

ஒரு நாள் படமாளிகையில் ஒப்பனா முன் வாங்கில் இருக்க, "குமுதம்" திரைப்படம் ஓடிக்கொண்டிருந்தது. சௌகார் ஜானகி ஒரு பாடல் காட்சியில் பூனைக்குட்டியொன்றை தூக்கியவாறு "மியாவ் மியாவ் பூனைக்குட்டி..." என்ற பாடலைப்பாட ஒப்பனா வெகுண்டெழுந்து, தன் கையிலிருந்த சுருட்டை திரைக்கு எறிந்து பெரிய ரகளையே பண்ணிவிட்டார். இவரைச் சமாதானப்படுத்தி ஏனையோர் வெளியே அனுப்பி வைத்தார்கள். இந்த ஒப்பனா என்பவர் ஒரு இந்தியர். ஒப்பனா என்பது ஆங்கிலத்தில் இருந்து மருவி வந்ததாம். இதன் தமிழ் பொருள் அநாதை.



# இனவாதம் இல்லாமல் ஏறாவூரில் நாம் அமைத்த கிரிக்கட் பிட்ச்

## நாம் இழந்து போனதை நினைத்துப்பார்க்கும் கதை இது

-- சஞ்சயன் செல்லமாணிக்கம் --

குறுகிய ஒரு காலத்தினுள் ஒரு சமூகம் எவ்வாறு சிதைந்துபோகும் என்பதற்கு எமது நாடு ஒரு சிறந்த உதாரணம். பல நூற்றாண்டுகளாக இணைந்து வாழ்ந்த சமூகங்கள் இரண்டு, மூன்று பத்தாண்டுகளுக்குள் விரோதிகளானது எப்படி? ஒருவரை ஒருவர் அழித்து வாழ நினைப்பதன் சூட்சுமம்தான் என்ன? இது சாத்தியமானது எதனால்? எங்கே தோற்றுப்போனோம் நாம்?

மூன்று இன மக்களும் ஒற்றுமையாய் வாழ்ந்த இறுதிச் சந்ததி என்னுடையது என்பதில் எனக்கு பெருமையை விட வேதனையே அதிகம்.

சந்திரே அய்யா, சிங்கள இனத்தவர், எங்கள் கிரிக்கற் அணியின் குரு, சக விளையாட்டாளன், இது தவிர்ந்த நேரங்களில் ஏறாவூர் மார்க்கட்டில் மரக்கறி விற்கும் வியாயாரி. சிறந்த ஆளுமையுள்ளவர்.

1980 களின் ஆரம்பம். எனக்கு பதின்மவயது. நட்பு வட்டத்தில் இஸ்லாமியர்களும், சிங்களவர்ளும், தமிழர்களும் சரிசமமாய் குடியிருந்தனர். இன பேதங்களையும் கடந்து வாழ்ந்திருந்த காலம் அது.

ஏறாவூரில் மூன்றின மக்களும் அவ்வப்போது வெட்டுக்குத்துப்படுவதுண்டு ஆனால், அது எம்மை இம்மியளவும் பாதித்ததில்லை. என்ன மச்சாங் என்று சிங்கள நண்பர்களும், சுகமா இரிக்கியா என்று இஸ்லாமிய தோழர்களும் குசலம் விசாரித்து குதூகலாமாய் வாழ்ந்திருந்த நாட்களவை.

இன்றைய இளையோருக்கு பரீச்சயமில்லாத வாழ்வு அது. மனிதன் மனிதனுடனும், இயற்கையுடனும் வாழ்ந்து கடந்த காலம். நட்பே யாதுமாய் நாம் கடந்து வந்த பாதை. பால்யத்தின் பசுமை அது.

அந்த நாட்களில் தான் ஏறாவூர் யுனைட்டட் ஸ்போர்ட்ஸ் கிளப்பை உருவாக்கினோம். ஏறாவூரில் வாழ்ந்திருந்த சிங்கள நண்பர்களும், கிறிக்கட் விளையாட்டில் ஈடுபாடு இருந்த இஸ்லாமியத் தோழர்களும் தமிழர்களும் இணைந்து ஏறாவூர் சிங்கள மகாவித்தியாலய மைதானத்தை எமக்காக உருவாக்கிக் கொண்டோம்.

எங்கள் விளையாட்டின் தரம் குறைவு என்று சொல்ல முடியாது. பல சிறந்த வீரர்கள் எம்முடன் இருந்தார்கள். முக்கியமாய் ரொனால்ட் என்றும் பறங்கி இனத்து நண்பன். மிகச் சிறப்பாய் விளையாடுவான்.

எங்களின் மைதானம் மிகவும் மோசமான நிலையில் இருந்தது. புல்லும், திட்டு திட்டான மண்ணும் எப்படி பந்து வீசினாலும் விக்கட்டுக்கு மட்டும் போகாமல் வேறு எல்லா திசைகளையும் நோக்கியும் போய்க் கொண்டிருந்தது, பந்து.

இதைக் கண்ட எங்களின் பயிற்சியாளர் சந்திரே அய்யா ( என்னும் சிங்களவர்), ஒரு நாள்
"தம்பி.. இப்படி விளையாட முடியாது"
"ஏதாவது செய்து மைதானத்தை சீர்செய்யவேண்டும்"
என்று ஒரு மைதானப் புரட்சிக்கு அடித்தளமிட்டார்.

கிறிக்கட் பிட்ச் அமைக்க வேண்டுமென்றார். மைதானத்தினுள் இருந்த மணல் மேடுகளை வெட்டிச் சரித்து சமப்படுத்தி, மைதானத்தின் இரண்டு கரையிலும், புட்போல் போஸ்ட் நடவேண்டுமென்றார்.

சாரமுடுத்திய அந்தத் தலைவனுக்கு பின்னால் திரண்டு நின்றது ஒரு விடலைக் கூட்டம்.

அடுத்து வந்த காலங்களில் எப்போதும் இதுவே பேச்சாயிருந்தது.
காட்டுக்குள் விழுந்திருந்த இரண்டு தென்னங்குற்றிகளைக் கட்டி இழுத்து வீதிக்கு கொணர்ந்து, பின்பு, வண்டில் பிடித்து மைதானத்தில் இறக்கிய போது



எதையோ சாதித்த சந்தோசம் அனைத்து முகங்களிலும் தெரிந்தது. உடனேயே கிடங்கு வெட்டி, தென்னங் குற்றிகளை நாட்டி, அவற்றிற்கு மேலாக களவெடுத்து வந்த மூங்கில் ஒன்றைக்கட்டி காற்பந்து விளையாடினோம்.

அன்று மாலை சந்திரே அய்யா இருவருக்கு ஒரு தேனீர் என்ற கணக்கில் எல்லோருக்கும் தேனீர் வாங்கித்தந்தார். தோழமையின் தேனீர் அது.

காற்பந்து விளையாடுவதற்கு போஸ்ட் நட்டாகிவிட்டது.

அடுத்தது கிறிக்கற் பிட்ச்.
இது சற்று சிக்கலான வேலை.
அதிகம் சிந்தித்தோம்.
பிட்ச் என்றால் இறுக்கமாக இருக்க வேண்டும்.
ஆனால், எங்கள் யுனைடட் மைதானம் கடல்மணலைப் போன்ற மணலைக் கொண்டது.

பிள்ளையாரடியில இருக்கும் கிறவற்குழியில் இருந்து ஒரு ட்ராக்டர் நிறைய கிறவல் எடுத்து வந்தால் கிட்டத் தட்ட முழு பிட்ச்சும் போடலாம் என்றார்கள் நண்பர்கள்.

எம்மிடம் பணம் இல்லை.

மீண்டும் சந்திரே அய்யாவின் தலைமையில் கூட்டம் ஆரம்பமானது. ஒவ்வொரு நாளும் விளையாட வருபவர்கள் எல்லோரும் 5 சதம் கொண்டு வந்து தந்தால் தான் விளையாடலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

எதிர்ப்பு இருந்தாலும் முதல் நாளே கிட்டத்தட்ட 1.50 ரூபாய் சேர்ந்ததை கண்டதும் எதிர்ப்பு மறைந்து போயிற்று. சில நாட்களின் பின் ஏறத்தாழ 50 ரூபாயுடன் ஒரு ட்ராக்டர் வண்டி வாடகைக்கு பிடிக்கப்பட்டது.

சந்திரே அய்யா ட்ரக்டர் மட்காட்டில் தளபதி போல உட்கார்ந்திருக்க தொண்டர் படையொன்று மண்வெட்டி, அலவாங்கு, இன்னும் பிக்கான் போன்ற ஆயுதங்களுடன் பின்னால் குலுங்கி குலுங்கிச் சென்றுகொண்டிருந்தது, பிள்ளையாரடி கிறவல் குழிக்கு.

ட்ரக்டர் கிறவல் குழியில் நின்றதும் இயந்திரமாய் இயங்கினோம். சிலர் அலவாங்கால் குத்தி கிறவலை மலையில் இருந்து பிரிக்க, மற்றோர் கூட்டம் அதை சவள் மற்றும் மண்வெட்டியால் ட்ரக்டர் பெட்டிக்குள் வீசியெறிந்து கொண்டிருந்தது. ட்ரக்டர் பெட்டியினுள் நின்றவர்கள் அதை பெட்டி முழுக்க பரப்பிக் கொண்டிருந்தார்கள். சந்திரே அய்யா கட்டளையிட்டுக் கொண்டு வேலையை கவனித்துக் கொண்டிருந்தார். இடைக்கிடை பிக்கானால் கொத்தியும் தந்தார்.

வியர்வை ஆறாய் ஓடியது.. அது பற்றி யாரும் கவலைப்பட்டதாக தெரியவில்லை. வியர்வை கிறவல் புழுதியை தன்னுடன் கலந்து எல்லோர் முகத்திலும், முதுகிலும் ஒரு வித செம்மஞ்சள் நிறத்தில் நட்பின் சரித்திரத்தை வரைந்து கொண்டிருக்க, மறுபக்கத்தில் ட்ரக்டர் பெட்டி நிரம்பிக் கொண்டிருந்து.

கிறவல் பாரத்தில் ட்ரக்டர் பெட்டி ஆடாமல் எம்மைத் தாங்கி வந்து எமது மைதானத்தில் இறக்கியது. ஒரு லோட் கிறவல் எங்களுக்கு ஏதொ ஒரு பெரிய சாதனையை செய்து முடித்துவிட்டோம் என்ற மன நிலையை தந்திருந்தது. அன்று மாலை பல மணி நேரம் கிறவல் லோட்க்கு பக்கத்திலேயே குந்தியிருந்து அடுத்த நாளை திட்டமிட்டுக் கொண்டிருந்தோம்.

நாம் கிறவலை எப்படி சமம்படுத்துவது என்றார் சந்திரே அய்யா. ஒருவருக்கும் அதை எப்படி செய்யலாம் என்று தெரியவில்லை. ஒருவன் மட்டும் எழுந்து நின்று செங்கலடிச்சந்தியில் வீதியை செப்பனிடுகிறார்கள். அங்கு ஒரு சிறிய ரோலர் இருப்பதாயும் அதை எடுத்துவந்தால் வந்தால் கிறவலை சமப்படுத்தலாம் என்றான்

சந்திரே அய்யா மௌனமாயிருந்தார். அன்றிரவு10 மணிபோல் ஜவர் படையணி செங்கலடி சந்தியை நெருங்கிக் கொண்டிருந்தது. பதுளை வீதியின் ஆரம்பத்தில் நாம் தேடிவந்த ரோலர் எமக்காக காத்துக் கொண்டிருந்தது. ஏறத்தாழ 2 மணிநேரம் இழுத்து வந்து ஒரு பற்றைக்குள் அதை ஒளித்து வைத்துவிட்டு வீடு சென்ற போது நேரம் சாமம் இரண்டைக் காட்டிக் கொண்டிருந்தது.

ஞாயிறு காலை நாம் மைதானததுக்கு செல்வதற்கு முன்பே சந்திரே அய்யா மண்வெட்டியுடன் பிட்ச் போடப்படும் இடத்தை கிண்டிக் கொண்டிருந்தார்.

மைதானத்துக்கு நடுவே கிட்டத்தட்ட 25-30 மீற்றர் நீளத்திற்கு 1 மீற்றர் அகலத்துக்கு 20சென்ரி மீற்றர் ஆழத்திற்கு மண்ணைக் கிண்டி மைதானத்தின் பள்ளமான இடங்களில் கொட்டினோம். எமது மைதானத்துக்கு அருகாமையிலேயே ஏறாவூர் புகையிரத நிலையம் இருந்தது. அங்கிருந்த கருங்கற் குவியலில் இருந்து கற்களை எவரையும் கேட்காது எடுத்து துடுப்பாடும் இடத்தின் கீழ் இட்டு கிறவலைக் கொட்டத்தொடங்கினோம்.

நாம் ஒளித்து வைத்திருந்த ரோலரை எடுத்துவந்தோம். உருளை உருண்டு, உருண்டு ஏறாவூர் யுனைட்ட் இன் பிரபல்யமான கிறிக்கட் பிட்ச்சை சமமப்படுத்தித் தந்தது. அன்று நாம் விளையாடவில்லை. பிட்ச்சை பார்த்தபடியே சுற்றி இருந்து கதைத்துக் கொண்டிருந்தோம். அடுத்த நாள் புதிய பிட்ச்சில் கோலாகலமாக மாலையிருட்டு பந்தை மறைக்கும் வரை விளையாடினோம். அன்று முதல் பந்து சொன்ன சொல் கேட்டது.

அடுத்து வந்த வார விடுமுறையின் போது மேடாய் இருந்த நிலமும் சிரமதானம் மூலமாக சமமாக்கப்பட்டது. நெருஞ்சி முள்ளின் தொல்லையை தீர்த்துக்கொள்வதற்காய் வாழைத்தண்டுகளை மைதானம் முழுவதும் உருட்டி உருட்டி முள்ளுகளை அகற்றினோம்.

1983 என நினைக்கிறேன் தமிழ் சிங்கள புத்தாண்டின் போது பெரிதாய் விளையாட்டுக்கு ஒரு விழா எடுத்தோம். ஊர்கூடி இழுத்த தேர் அது.

சைக்கிள் ஓட்டப்போட்டி, மரதன் என ஆரம்பித்து மாலை கையிறு இழுத்தல், கால்பந்து சுற்றுப் போட்டி என ஆடி ஓய்ந்த போது ஊருக்குள் ஏறாவூர் யுனைடட் இன் மதிப்பு பலமாய் அதிகரித்திருந்தது.

தொடர்ச்சி... (பக்கம் - 05 )

# பள்ளிக்குடியிருப்பு

-- பால.சுகுமார்
மேனாள் முதன்மையர்
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக் கழகம்--





கொட்டியாரப் பற்றில் தனித் தமிழ் கிராமமாய் தன் சுய அடையாளங்களுடன் பண்டைப் பண்பாட்டையும் வரலாற்றையும் தன்னகத்தே கொண்ட இயற்கையின் அரவணைப்பில் தாலாட்டும் குளிர் தென்றல் வருட வயல் நிலங்கள் சூழ ஒற்றுமைக்கு பேர் போன கிராமமாய் உயர்ந்த பண்புகள் நிறைந்த மக்கள் வாழும் தமிழ் ஊர்.

மூதூரிலிருந்து இரண்டு வழிகளில் நாம் இந்த அழகிய ஊரை சென்றடையலாம் ஒன்று கட்டைபறிச்சான் வழியாக செல்கிறது மற்றயது மட்டக்களப்பு வீதி வழியாக தோப்பூர் தாண்டிச் செல்வது.

பள்ளக்குடியிருப்பு என எப்படி பெயர் பெற்றிருக்கலாம் என்பதற்கு சில விளக்கங்களை, இங்குள்ள பெரியவர்கள் மூலம் அறிய முடிந்த தகவல்கள் தருகின்றன.

பள்ளக்குடியிருப்பு என்பது பள்ளிக் குடியிருப்பாக மாறியிருக்கலாம் என்று பார்க்கும் போது பிரம்பு வெளி எனும் வயல் பகுதியும் ஆரம்பகால பிரதான குடியிருப்பாக அமைந்திருந்தது.

உண்மையில் பிரம்பு வெளி எனும் வளம் நிறை வயல் நிலம் மகாவலியாற்றின்



கிளை நதியொன்றின் வாய்க்கால் வழி நீர் பாய்ந்து செழிப்பையும் செழுமையயையும் இக் கிராமத்திற்கு வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

பள்ளிச்சி குடியிருப்பு என்பது பள்ளிக்குடியிருப்பு என திரிபு பட்டிருக்கலாம் எனும் இன்னொரு கருத்தும் நிலவுகிறது.

வரலாற்று நகர்வில் மற்றொரு கருத்தும் பள்ளிக்குடியிருப்பின் பழமையைச் சொல்லி நிற்கிறது. ஈழத் துறை எனும் இலங்கைத் துறை முகத்துவாரத்தில் இறங்கிய எல்லாளன் பள்ளிக்குடியிருப்பில் தன் படைகளைத் தங்க வைத்து சென்றதால் படைக் குடியிருப்பு பள்ளிக்குடியிருப்பாக மாறியிருக்கலாம் என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

குளக்கோட்டு மன்னன் கோணேசர் கோயில் அமைக்கும் திருப்பணிகளைச் செய்த பின்னர் சிந்து நாட்டிலிருந்து அழைத்துவரப்பட்ட மக்களில் ஒரு பகுதியினரை குடியேற்றி, இங்குள்ள விவசாய நிலங்களை விளைவித்து கோணேசர் கோயில் திருப்பணியில் பங்கு கொள்ளப் பணித்தான் என கோணேசர் கல்வெட்டு கூறுகின்றமை இங்கு மனம் கொள்ளத்தக்கது.

பள்ளிக்குடியிருப்பு சமூக ஒழுங்கில் குடிமுறை பிரதானப்படுகிறது. ஏழு வகையான குடிகளின் வழி வந்தவர்களின் வம்சா வழியினரே இன்றைய பள்ளிக்குடியிருப்பார் என்பதை அறிய முடிகிறது.

மட்டக்களப்பு மான்மியம் இந்த குடி முறைகள் பற்றி தெளிவாகப் பேசுவது இங்கு கவனம் பெறுகிறது.

இங்குள்ள பழமைவாய்ந்த பிள்ளையார் கோயில் பற்றி பேசும் போது உமன் குடி, படையாண்ட குடி ஆகியவற்றின் முக்கியத்துவம் சொல்லப்படுகிறது. படையாண்ட குடி மட்டக்களப்பில் பிரபலமான குடியாகும். சமூக மானிடவியல் ஆய்வுகள் மூலம் மட்டக்களப்புக்கான தொடர்புகளைக் குடிமுறைகளின் விரிவான விளக்கங்களைப் பெற முடியும். ஒவ்வொரு ஊருக்கும் ஒரு சிறப்பிருக்கும் அந்த வகையில் கொட்டியாரத்தில் வேறு எங்கும் இல்லாத கலாசார மரபாக விளங்கும் கொம்பு விளையாட்டு தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புபட்ட இந்த மரபு மட்டக்களப்பில் பல கிராமங்களில் வழக்கில் உள்ளது. கண்ணகி வழிபாடு இரண்டாயிரம் வருச பழமையானது; அந்த மரபின் நீட்சியாகவே கொம்பு விளையாட்டு பார்க்கப்படுகிறது.

இடப்பெயர்வு யுத்த சூழ்நிலைகளால் தடைப்பட்டிருந்த கொம்பு விளையாட்டு அண்மைய ஆண்டுகளில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. கொம்பு விளையாட்டில் முக்கிய நிகழ்வான கொம்பு வாழ்த்து ஒரு அரங்க நிகழ்வின் பண்பை வெளிப்படுத்துவதும், அண்மைய கிராமங்களின் ஒத்துழைப்பும் இந்த கலாசார மரபின் தொடர்ச்சியை வலியுறுத்தி நிற்கிறது.

காடும் காடு சார்ந்தும் வயலும் வயல் சார்ந்தும் என மருதம், முல்லை என இரு நிலப் பொருளாதார முகம் கொண்டதான வாழ்வியல் முறைகளுக்கு சொந்தக்காரர்களாக காலம் காலமாக சுய சார்பு பொருளாதார முறைமையில் நம்பிக்கை கொண்டவர்களாக இம்மக்கள் வாழ்கின்றனர்.

கிராமத்தின் மேட்டு நில விவசாயத்துக்கு துணையாக இருக்கும் குளங்கள் குறிப்பாக சின்னக் குளம், கீரண்ட குளம் ஆகியவற்றை சூழ உள்ள பழங்கால சின்னங்கள் இக் கிராமத்தின் புராதன வரலாற்று எச்சங்களாக உள்ளன.

2006 வன்முறையில் முழுக் கிராமமே இடம் பெயர்ந்து மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் மக்கள் அகதிகளாக அலைந்தனர். எல்லாவற்றையும் இழந்த இம் மக்கள் மீண்டும் குடியேறி தங்கள் வாழ்வை தகவமைத்துக் கொண்டு எதிர்காலக் கனவுகளுடன் சமூக ஒற்றுமையுடன் வாழ்வை எதிர்கொள்ளும் மக்களாய் உள்ளனர்.

பள்ளிக்குடியிருப்பென்னும்
பழம் பதி

எல்லாளன் என்ற
வல்லாளன் வந்த வழி
படை வீடு கண்டதனால்
பள்ளிக் குடியிருப்பானதுவே

கண்ணகிக்கு கால் நாட்டி
கவி சொல்லிப் பாடுகின்ற
கொம்பு முறி விளையாட்டை
கொண்டாடும் பெருவூர்

பிரம்பு வெளியென்னும்
பெரு நெல்லுக் களஞ்சியத்தை
வரமாகக் கொண்ட
உரம் மிக்க தமிழ் ஊர்

தேனோடு பாலும்
திகட்டாத சென்னெல்லும்
மானோடி விளையாடும்
மகிழ் நிலமாய் தான் விரியும்

குளமும் வயலும்
நிலமுமாய் நீளும்
தமிழாய் வாழும்
தனித்துவ ஊர் இது

## வந்தாறுமூலை கண்ணகி வித்தியாலயத்தின் வருடாந்தசிறுவர் விளையாட்டுவிழா – 2018

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா கல்வி வலயத்தில் அமையப்பெற்ற வந்தாறுமூலைக் கண்ணகி வித்தியாலயத்தின் வருடாந்த சிறுவர் விளையாட்டுவிழா நிகழ்வு 10.03.2018 சனிக்கிழமை பி.ப. 02.00 மணியளவில் பாடசாலை அதிபர் ச.வேதநாயகம் அவர்களின் தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றிருந்தது.

இந் நிகழ்வில் கௌரவ அதிதிகளாக ஏறாவூர்ப்பற்று –02 கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.பொன்.சிவகுரு அவர்களும், கல்குடா கல்வி வலய ஆரம்பக் கல்விக்கான உதவிக்கல்விப் பணிப்பாளர் கே. ஜெயவதனன் அவர்களும், சிறப்பு அதிதிகளாக கல்குடா கல்வி வலய உடற்கல்வி ஆரம்பப் பிரிவுக்கான ஆசிரிய ஆலோசகர் நா. சதார்த்தனன் அவர்களும் ஃஊஆ டுயமெய நிறுவன உத்தியோகஸ்த்தர் எஸ்.சுரேஸ் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

அத்துடன் ஏறாவூர்ப்பற்று– 02 கல்விக்கோட்டத்தின் சகோதர பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், வந்தாறுமூலை - கிராம அபிவிருத்திச் சங்கம், ஸ்ரீ சிவமுத்து மாரியம்மன் சனசமூக நிலையம், சக்தி விளையாட்டுக் கழகம், வந்தாறுமூலை கலாசார மேம்பாட்டுச் சங்கம், பாரதி மக்கள் அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழு பிரதிநிதிகளும், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றார்களும் கலந்து கொண்டிருந்;தனர்.

“செயற்பட்டுமகிழ்வோம்“ எனும் தொனிப் பொருளில் மாணவர்கள்






அனைவருக்கும் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்ததுடன் உடற்பயிற்சிக் கண்காட்சியும் இடம்பெற்றிருந்தது.

மேலும் இந்த விளையாட்டு நிகழ்வை சிறப்பிக்கும் முகமாக பழைய மாணவர்கள், பெற்றார்கள், ஆசிரியர்கள், நடுவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.

அத்துடன் இல்லங்களுக்கு இடையிலான இறுதிப் புள்ளிமதிப்பீட்டின் போது விவேகானந்தா இல்லம் 252 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், விபுலானந்தா இல்லம் 256 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் பெற்றிருந்தன.





# மட்டக்களப்பு நாட்டார் பாடலில் காதலர் ஊடல்

சட்டத்தரணி, பாடும் மீன்,
சு.ஸ்ரீகந்தராசா

(காதலர் ஊடலும் கூடலும் பேசாத இலக்கியம் கிடையாது. மட்டக்களப்பு நாட்டாரியலும் அதில் சோடை போனதில்லை என்கிறார் இந்த எழுத்தாளர். இனி அவர் கூறுவதைப் பார்ப்போம்.)

சொன்னபடி காதலன் வீட்டுக்குத் தன்னைத்தேடி வரவில்லை. அதனால் சோர்ந்துவிட்டாள் காதலி. அவருக்கு என்ன நடந்ததோ? ஏதாவது பிரச்சினையோ என்று அன்றிரவு முழுக்க அவள் தூங்கவில்லை. மறுநாள் அதிகாலையில் எழுந்து, சிலவேளை பூவலடிக்கு வருவான் என்ற நம்பிக்கையில், அங்கே செல்கிறாள். அவனுக்கும் அவளது நினைவுதானே. எனவே எண்ண அலைகளால் தூண்டப்பட்ட அவனும் அங்கே வருகிறான். முன்னாலே செல்லும் அவளைப் பார்த்து பின்னால் நடந்து கொண்டே அவன் பாடுகிறான்.

மான்போல நடை நடந்து
மயில்போலச் சிறகொதுக்கித்
தேன்போலக் குடி கிளம்பி - என்ர,
சின்னவண்டு போறதெங்கே?

அவனது குரலை கேட்டதும் அவள் இதயத்தில் இன்ப வெள்ளம்

**காளை கனைக்குமென்றால் நாகு ஓடிவரமாட்டாதோ?**

பொங்குகிறது. நிலத்தில் அரைக்கண்ணும் அவன் முகத்தில் அரைக்கண்ணுமாக நாணத்தோடு நோக்குகிறாள். உடனேயே அவன் நேற்றுத் தன்னை ஏமாற்றியதற்காக, நெஞ்சிலே பொயக்கோபம் வந்துவிடுகிறது. நின்று நிமிர்ந்து கழுத்தால் ஒரு வெட்டு வெட்டிவிட்டு தொடர்ந்து குனிந்து நடக்கிறாள். அவனுக்கு அவளது கோபம் விளங்கி விட்டது. பாடுகிறான்.

இஞ்சி கல்லப் போன என்ர,
இளமயிலே தாராவே
கண்கள் சிவந்து நீ,
கடுங்கோப மானதென்ன?

அவளுக்குக் கோபம் ஒரு புறம், கவலை மறுபுறம். இருப்போமோ விழுவோமோ என்றபடி கண்களிலே தத்தளிக்கும் கண்ணீர்த்துளிகள். பாடுகிறாள்.

மனசை மனசறியும்
வஞ்சகத்தை நெஞ்சறியும்
நெஞ்சிலுள்ள பூங்காரத்தை
யாரறியப் போறார்களோ?

அதிர்ந்துவிட்டான் அவன்! காதலியின் கோபத்தை தாங்கும் சக்தி உலகில் எந்தக் காதலனுக்குத்தான் உண்டு? அதிலும், படிப்பறிவில்லாத பாமரன், கள்ளங்கபடமில்லாத கிராமத்தவன் - அவனால் தாங்க முடியுமா?

ஓலையை வெட்டி
ஓழுங்கையிலே போட்டதுபோல்
வாடுறன் கண்ணே உன்ர
வண்ணமுகம் காணாமல்

அதனால்தான்,

ஓடிவரும் தண்ணீரில்
உலவிவரும் மீனதுபோல்
நாடிவந்தேன் பெண்ணே உந்தன்
நல்லுறவு வேணுமெண்டு

என்று சொல்லித் தன் இதயத்தை அவன் திறந்து காட்டுகின்றான். இருந்தாலும், ஊடலில் உள்ள இன்பத்தை எளிதில் இழக்க அவளால் முடியவில்லை. வானத்தைப் பார்த்தபடி குத்தலாகப் பாடுகிறாள் -

கதைப்பார் கதையெல்லாம்
கல்லுருகி நெல்விளைய
சிரிப்பார் கொடுப்பால் - உங்கள்,
சொல்லையுமா நம்புறது?

உடனே அவன் நெருங்கி வந்து அவளைச் சமாதானப்படுத்தும் தொனியில் -

அன்று முளைத்து நாளை
அழிந்துவிடும் பூண்டோதான்
என்றும் நிலைத்திருக்கும்-நல்ல,
இன்பம் உண்மை அன்பாகும்

என்று அவளின் மாறாத காதல் மனதை உசுப்பி, ஊடலைத் தகர்க்க முனைகிறான்.

அத்தோடு மட்டும் விடவில்லை. அவளிடம் கேட்கிறான்.

தங்கச் சிலையே மச்சி
தாமரை முகநிலவே
செங்கல் வடிவே நாங்க
சேருவது எப்பகிளி?

அவளது உடல் நிறத்தைச் செங்கல்லின் நிறத்துக்கு ஒப்பிடும் இந்தப் பாடலின் சுவைதான் எத்தகையது! நேற்று வரவில்லை. இன்று மட்டும் வந்து இதென்ன அதிகம் பேச்சு... என்பது போல அவள் திருப்பிப் பாடுகிறாள்.

காலமில்லாக் காலம்
கண்டதில்லை ஒரு நாளும்
இன்றைக்கு வந்ததென்ன
காரியமோ நானறியேன்

மேலும் பாடுகிறாள். வருவேன் என்று சொல்லிவிட்டு அவன் வராமல் இருந்ததை மறைமுகமாகக் குறிப்பிட்டுப் பாடுகிறாள்-

வாயிருந்தால் இந்த
வயது வந்த புளியமரம்
சொல்லாதோ எந்தன்
துரை சொன்ன உறுதிமொழி

**தேன்போலக் குடி கிளம்பி - என்ர, சின்னவண்டு போறதெங்கே?**

அவனுக்கு அவளின் கோபத்தின் காரணம் தெரியாதா என்ன? தான் நேற்று வராமல் விட்ட காரணத்தை இனியும் கூறாது விட்டால் அவள் மனம் வேதனை தாங்காது என்பதால் தன் உள்ளத்தைத் திறந்து காட்டுகிறான்.

ஓடி வருவேன் கண்ணே
ஒழுங்கையில் தங்கி நிற்பேன்
உன்னை நினைப்பேன் பெண்ணே



உங்க வீட்ட வர நாட்டமில்லை

ஏனென்றால்

தெருவால போகவெண்ணா
தேன்போல மணக்கிறது
உறவாட நான் வருவேன் - உன்ர
அண்ணன்மார் காவலாமே?

அதுமட்டுமா?
வேப்ப மரத்தினிலே
வெற்றிலையால் கூடுகட்டி
தங்க வருவேன் - உன்ர,
தம்பிமாரும் காவலாமே

உன் அண்ணன்மாரும், தம்பிமாரும் உனக்குக் காவலாக இருக்கும்போது உன்னைத்தேடி நான் உன் வீட்டுக்கு வந்தால் அதனால் ஏதாவது தகராறு வந்துவிட்டால் பின்னர் உனக்கல்லவா கஷ்டம், நம் உறவுக்கல்லவா நஷ்டம். அதனால் தான் நான் அங்கு வரவில்லை என்று கூறுகிறான். அதற்கு அவளது பதில் இது -

கடப்படியில் வந்து நின்று
காளை கனைக்குமென்றால்
எங்கிருந்த போதும் நாகு
எழுந்து வரமாட்டாதோ

எப்படியிருக்கிறது சிலேடை! காளை மாடு வீதியில், வீட்டுக் கடப்பருகில் வந்து நின்று கத்தினால், வீட்டில் எங்கேயிருந்தாலும் நாகு - அதாவது பெண்மாடு எழுந்து ஓடி வரமாட்டாதா என்கிற இந்தப் பாடலின் உட்பொருள் எவ்வளவு அருமையாக அமைந்திருக்கின்றது. அவளது கோபம் தணிகிறது என்பது அவனுக்குப் புரிகிறது. எனவே இப்படிப் பாடுகிறான் -

அன்புக் களஞ்சியமே
அழகொழுகும் சித்திரமே
கற்புக்கணிகலமே உன்னை,
காண்பதற்கு ஓடிவந்தேன்

எனவே,
மாடப்புறாவே என்ர

மலைநாட்டு நங்கணமே
மாமிக்கொருமகளே - என்னை,
மறந்து விட எண்ணாதே

என்று கெஞ்சுகிறான். இதைக் கேட்டதும் அவளால் தாங்க முடியவில்லை. மறப்பதா? அவனையா? நானா? இந்த வார்த்தையே அவளை வாட்டுகிறது. பட்டன்று பாட்டு வருகின்றது.

உன்னை மறப்பதென்றால்
உயிரோடு ஆகாது
மாண்டு மடிவது தான்
மறப்பதற்கு மாற்றுவழி

எவ்வளவு தெளிவாக, உறுதியாகச் சொல்லி விட்டாள். சொன்னதோடு மட்டும் நிற்கவில்லை, வீடு நோக்கித் திரும்பி நடக்கிறாள். உடனே அவன் இன்னும் கொஞ்ச நேரம் கதைத்திருந்துவிட்டுப் போகலாமே என்று இப்படிக் கேட்கிறான் -

கட்டை விரலழகி - என்ர,
கமுகம்பூ மார்பழகி
ஈச்சம் குருத் தழகி - நீ,
இருந்து போனால் என்ன வரும்?

அவளுக்கும் ஆசைதான். ஆனால், வந்து நெடுநேரம் ஆகிவிட்டது. இனியும் தாமதிக்க முடியாது, எனவே, அவனை எங்கே, எப்போது மீண்டும் சந்திப்பது என்று சொல்லிப் பாடிக் கொண்டே ஓட்டமும் நடையுமாகச் செல்கிறாள்.

சந்தன மரத்தை மச்சான்
சந்திக்க வேணுமென்றால்
பூவலடிக்கு மச்சான்
பொழுதுபட வந்துபோங்க.


விளக்கேற்றி இருசாமம்
வெள்ளி நிலா வேளையிலே
குளத்தோரம் வந்திடுங்கோ
கூடிக் கதைத்திடலாம்

அவள் பாடிக்கொண்டே ஓடுகிறாள். நெஞ்சம் நிறைந்த மகிழ்ச்சியோடு அவள் போவதையே வைத்தகண் வாங்காமல் அவன் பார்த்துக் கொண்டு நிற்கிறான்.
(இன்னும் வரும் காத்திருங்கள்)

# மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

## தமிழ் ஊடகத்துறைக்கு வாரிசைத் தந்து விடைபெற்ற மூத்த பத்திரிகையாளர் "கோபு"


-- முருகபூபதி -
அவுஸ்திரேலியா --








அன்று மட்டக்களப்பில் நண்பர் செங்கதிரோன் கோபாலகிருஷ்ணன், என்னை ஊடகப்பள்ளியில் பணியாற்றும் ஏற்கனவே எனக்கு நன்கு தெரிந்த பத்திரிகையாளர் அருள் சங்கீத்திடம் அழைத்துச் சென்றார். இவர் இலங்கையின் மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம். கோபாலாரத்தினத்தின் பேரனாவார். "இருக்கிறம்" என்ற இதழின் ஆசிரியர் குழுவிலிருந்தவர். 2011 இல் நாம் கொழும்பில் நடத்திய மாநாட்டில்தான் இவர் எனக்கு அறிமுகமானார். அந்த ஆண்டு வெளியான "இருக்கிறம்" இதழ்களின் பிரதிகளை எடுத்துவந்து மாநாட்டின் பேராளர்களுக்கு இலவசமாகவே வழங்கினார்.
அரசியல் சமூக, கலை, இலக்கிய விமர்சன இதழாக வெளியான "இருக்கிறம்" இணைய இதழாகவும் வெளியாகியிருக்கிறது.
கிழக்கு பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் அருள்சங்கீத் அந்த ஊடகப்பள்ளியிலும் விரிவுரையாற்றுகிறார்.
நான் வீரகேசரியில் பணியாற்றிய காலத்தில் இதுபோன்ற ஊடகப்பள்ளிகள் இருக்கவில்லை. இலங்கை மன்றக்கல்லூரிகளில் என்றாவது ஒரு நாள் ஊடகத்துறை சார்ந்த பயிலரங்குகள் மாத்திரமே நடைபெறும்.
தற்காலத்தில் நவீன தொழில்நுட்பம் சார்ந்து ஊடகத்துறையில் பல்வேறு மாற்றங்கள் வந்திருப்பதனால், ஊருக்கு ஊர் ஊடகப்பள்ளிகள் இயங்குகின்றன.
ஒளிப்படத்துறையிலும் டிஜிட்டல் முறை வந்திருப்பதனால், இளம்தலைமுறையினர் இவற்றில் ஆர்வம் காண்பிக்கின்றனர்.
ஒரு காலத்தில் மருத்துவம், பொறியியல், சட்டம், கணக்கியல் முதலான துறைகளில் ஆர்வம் காண்பித்தார்கள். தமது பிள்ளைகள் டொக்டர்களாகவோ, எஞ்சினியர்களாகவோ, சட்டத்தரணிகளாகவோ, கணக்காளராகவோ வரவேண்டும் என்ற கனவுதான் எமது தமிழ் சமூகத்திடம் முன்பு நீடித்திருந்தது.
காலம் மாறியது. தற்போது இலங்கைப் பாடசாலைகளில் ஊடகக் கல்வியும் ஒரு பாடமாகியிருக்கிறது. இலங்கையில் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டார்கள். காணாமலாக்கப்பட்டார்கள்.
அச்சுறுத்தப்பட்டார்கள். அதனால் பலர் நாட்டைவிட்டும் வெளியேறினார்கள்.
எனினும், ஊடகத்துறை உயிரையும் பறிக்கும் எனத்தெரிந்தும் இன்று இலங்கையில் ஊடகப்பள்ளிகள் தோன்றியிருப்பது மிக முக்கியமான மாறுதல்தான். இலங்கையில் ஊருக்கு ஊர் ஊடக அமையங்களும் உருவாகியிருக்கின்றன.
அன்று அருள் சங்கீத் தாம் பணியாற்றும் அந்த ஊடகப்பள்ளியின் வகுப்பறைகளை எமக்கு காண்பித்தார். ஒளிப்படக்கலை, பத்திரிகை பக்க வடிவமைப்பு, தொலைக்காட்சியில் எவ்வாறு பணியாற்றுவது முதலான பலதரப்பட்ட பயிற்சிகளுக்காக மாணவர்கள் இருபாலாரும் வருவது பற்றிச்சொன்னார்.
"தாத்தா எப்படி இருக்கிறார்..? " என்று எங்கள் மூத்த பத்திரிகையாளர் "கோபு" கோபாலரத்தினம் பற்றி விசாரித்தேன். தாத்தா கடும் சுகவீனமுற்றிருப்பதாக பேரன் அருள் சங்கீத் சொன்னார். தற்பொழுது தங்களுடன்தான் இருப்பதாகவும் வீட்டுக்கு வருமாறும் அழைத்தார்.
2013 ஆம் ஆண்டு திருகோணமலையிலிருந்து மட்டக்களப்புக்கு புறப்பட்டபோது தொலைபேசி ஊடாக எனது வரவை கோபுவிடம் சொல்லிவிட்டு பயணத்தை தொடங்கியிருந்தாலும், இடையில் திருகோணமலை - மூதூர் பாதையில் வெள்ளம் பரவியிருந்தமையால் பெரிய சுற்றுச்சுற்றி நடு இரவில் அவரைக் காணச் சென்றிருக்கின்றேன்.
அந்த இரவில் எனக்காக உறங்காமல் விழித்திருந்து காத்திருந்த கோபு அவர்கள், இம்முறை பகல்பொழுதில் நான் சென்றிருந்தபோது, ஆழ்ந்த உறக்கத்தில் மட்டுமல்ல, எழுந்திருந்து நடக்கவும் முடியாமல் முடங்கியிருந்த காட்சி மனதை உலுக்கியது.
முதுமை இயலாமையுடன் நோய்








உபாதையும் அவரை பெரிதும் தாக்கியிருந்தமையால் பேசுவதற்கும் சுவாசிப்பதற்கும் சிரமப்பட்டார்.
அருள்சங்கீத்தின் தயார் (கோபுவின் மகள்) அவரை கைத்தாங்கலாக அழைத்து வந்து, " அப்பா... யார் வந்திருக்கிறார்... தெரிகிறதா...?" எனக்கேட்டாலும், அவரால் என்னை சிரமப்பட்டுத்தான் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது.
அவரை ஆசனத்தில் அமரவைத்துவிட்டு, நானும் கோபாலகிருஷ்ணனும் அருகே நெருக்கமாக அமர்ந்துகொண்டு உரையாடினோம்.
அவருடனான எனது நட்புறவு 1975 இல் ஆரம்பித்தது. மல்லிகை ஜீவாதான் இவரை எனக்கு யாழ்ப்பாணம் ஈழநாடு அலுவலகத்தில் அறிமுகப்படுத்தியவர். இவரும் வீரகேசரியில் 1953 இல் ஒப்புநோக்காளராகவே இணைந்தவர். பின்னாளில் பத்திரிகையாளர்களாகவும் படைப்பிலக்கியவாதிகளாகவும் உருவானவர்களில் பலர் தொடக்கத்தில் அச்சுக்கோப்பாளர்களாகவும் ஒப்புநோக்காளர்களாகவுமே இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தகுந்தது.
தமிழகத்தில் சிலம்புச்செல்வர் மா.பொ.சி, ஜெயகாந்தன், விந்தன் ஆகியோரும் இலங்கையில் கோபாலரத்தினம், ஸி.எஸ். காந்தி, மலைத்தம்பி ஆகியோரும் 1983 இற்குப் பின்னர் நானும் நண்பர் வீரகத்தி தனபாலசிங்கம், பிரணதார்த்திஹரன், சிவராஜா, அற்புதானந்தன் ஆகியோரும் பத்திரிகையாளர்களாக மாறியிருக்கின்றோம்.
இந்தத் தகவல் பின்னணி எமக்கு இருப்பதனால் கோபுவிடத்தில் எனக்கு மரியாதை அதிகம். இவர் பற்றி நான் முன்பொரு தடவை எழுதிய குறிப்புகள் நினைவுக்கு வருகின்றன.

கோபுவும் 1953 இல் வீரகேசரி பத்திரிகையில் ஒரு ஒப்புநோக்காளராகவே பணியில் அமர்ந்தார். பின்னர், ஆசிரியபீடத்தில் இணைந்து ஒரேசமயத்தில் அலுவலக நிருபராகவும் துணைஆசிரியராகவும் பணியாற்றி பத்திரிகையாளனாக உருவானார். அப்பொழுது அவர் பெற்ற மாதச்சம்பளம் 72 ரூபாதான். 1960 இல் வீரகேசரியில் நடந்த வேலை நிறுத்தத்தின்போது அந்த வேலையை இழந்து யாழ்ப்பாணம் சென்று ஈழநாடு பத்திரிகையில் இணைந்தார். கோபு, வீரகேசரி, ஈழநாடு, ஆகியனவற்றில் மாத்திரமின்றி ஈழமுரசு, தினக்கதிர், செய்திக்கதிர், ஈழநாதம், சுடரொளி முதலான பத்திரிகைகளிலும் பணியாற்றியவர்.
1987 இல் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தையடுத்து இந்திய அமைதிப்படை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலைகொண்டது. இந்தியப்படையினரால் சுமார் இரண்டு மாதங்கள் சிறைவைக்கப்பட்டார்.
தனது சிறை அனுபவங்களை ஜூனியர் விகடனில் தொடராக எழுதினார். ஈழமண்ணில் ஒரு இந்தியச்சிறை என்ற தலைப்பில் அவர் எழுதிய குறிப்பிட்ட தொடர் பிரான்ஸில் குகநாதன் வெளியிட்ட பாரிஸ் ஈழநாடு வார இதழிலும் மறுபிரசுரம் செய்யப்பட்டது.
பின்னர் தனி நூலாக வெளியானது. ஏற்கனவே அவர் இதழ்களில் பதிவுசெய்த ஆசிரிய தலையங்கங்களின் தொகுப்பாக "அந்த ஒரு உயிர்தானா உயிர்" என்ற நூலையும், பத்திரிகைப்பணியில் அரை நூற்றாண்டு, முடிவில்லாப்பயணத்தில் முடியாத வரலாறு ஆகிய நூல்களையும் வரவாக்கியுள்ளார்.
போர்க்காலத்தில் இயக்கங்கள் மற்றும் இலங்கை இந்திய படைகளுக்கு மத்தியில் பத்திரிகையாளர்கள் எத்தகைய இன்னல்களை அனுபவித்திருப்பார்கள்? என்பதை கோபலரத்தினத்தின் குறிப்பிட்ட நூல்கள் ஆழமாகப்பதிவு செய்துள்ளன.
மேற்குறித்த பதிவை எழுதும் முன்னர் நான் அவரிடம் 2013 இல் பின்வரும் கேள்வியையும் கேட்டிருந்தேன்.
"இதுவரையில்....இலங்கையில் ஊடகவியலாளர்களின் வாழ்வையும் பணிகளையும் அவர்கள் எதிர்நோக்கிய இன்னல்களையும் சித்திரிக்கும் நாவல் எதுவும் வெளியாகவில்லையே.... உங்களால் எழுதமுடியும்..... எழுதுங்களேன்..."
அப்பொழுது அவரது பதில் பின்வருமாறு: "நான் ஒரு இலக்கியப் பிரதியாளன் அல்ல. அனுபவங்களை பதிவு செய்யும் ஊடகவியலாளன். உங்களைப்போன்ற பத்திரிகையாளர்களாகவே செயற்பட்டு அதேசமயம் இலக்கியப்படைப்பாளிகளாக இயங்குபவர்கள்தான் எழுதவேண்டும்."
நான்கு ஆண்டுகள் கடந்த பின்னர், அவரை இம்முறை பார்த்தபோது ஊடகத்துறை சம்பந்தமாக எதுவுமே கேட்கவில்லை. அவ்வாறு கேட்கும் நிலையில் நானும் இல்லை.
அதற்குப்பதில் சொல்லும் நிலையில்




அவரும் இல்லை. முதுமை தந்திருக்கும் சோர்வும், நோய் உபாதையும் அவரை பெரிதும் பாதித்திருந்தமையால், அவர் அறியாத பல பத்திரிகை, இலக்கிய உலகச்செய்திகளை சொன்னபோது, மௌனமே பாஷையாக என்னை அவர் பார்த்துக்கொண்டிருந்தார்.
அவரது பத்திரிகை உலக நண்பர்கள் பலர் மறைந்துவிட்ட தகவலும் அவருக்குத் தெரியாது. வேறு ஒரு உலகத்தில் அவர் மௌனமாக வாழ்ந்துகொண்டிருந்தார்.
அந்திமகாலத்தில் அந்தக்கோலத்தில் இவரைப் போன்று, ஏற்கனவே தமிழகத்தில் ராஜம் கிருஷ்ணனையும் சிட்னியில் காவலூர் இராஜதுரையையும், பேராசிரியர் பொன். பூலோக சிங்கத்தையும் பார்த்திருக்கின்றேன்.
நாம் கடக்கவிருக்கும் பாதையை எமக்கு முன்னே கடந்து சென்றுகொண்டிருக்கும் மூத்த பத்திரிகைத்துறை ஆளுமையிடமிருந்து விடைபெறும்போது, தனது வாரிசாக பேரன் அருள் சங்கீத்தை ஊடகத்துறைக்கு வழங்கியிருக்கிறார் என்ற திருப்தியும் எஞ்சியிருந்தது. கனத்த மனத்துடன் அங்கிருந்து புறப்பட்டேன்.
எனினும் சில வாரங்களில் அவர் எங்களை விட்டு நிரந்தரமாக மறைந்துவிட்டார். அவர் பற்றிய அஞ்சலிக்குறிப்புகளை எழுதியிருக்கின்றேன்.
ஜெர்மனியிலிருந்து வெளிவரும் "மண்" என்ற சஞ்சிகை (186 ஆவது இதழ்) கோபுவை கனம்பண்ணி அவரது வாழ்வையும் பணிகளையும் சித்திரிக்கும் கட்டுரையை வெளியிட்டிருப்பதுடன், சஞ்சிகையின் முகப்பு அட்டையிலும் அவரது படத்தை பதிவுசெய்து வெளியிட்டு மரியாதை செலுத்தியிருக்கிறது.
இச்சஞ்சிகை கடந்த வருடம் இறுதியில் வெளியாகியிருக்கிறது.
இவற்றை காணாமல் எங்கள் "கோபு" நிரந்தரமாக கண்ணயர்ந்துவிட்டார்.
(பயணங்கள் தொடரும்)



# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 06

-- தமிழ்க்கவி --

பயில்வான் பலராலும் புகழப்பட்டு முன்னணிக்கு வந்ததால இப்ப அவனை மதிச்சு வேலைவெட்டிக்கு கூப்பிடுறவையும் கூடத்தான், ஆனா அவன் ஆர் கூப்பிட்டாலும் மகேசக்காட்ட ஒரு வார்த்தை கேட்டுப்போடுவான்

"மெய்யேக்கா தம்ராயண்ணை கூப்பிடுறார் போகட்டே, போஸ்றமாய்ற்றர் கூப்பிட்டவர் போகட்டுமோ" எண்டு . மகேசக்கா சிரிப்பா

"என்னடா நானென்ன உன்ர வீட்டுக்காரியே என்னக்கேக்கிறாய்" அதுக்கும் ஒரு அசட்டுச்சிரிப்புத்தான்.

மட்டக்களப்பார் மக்களோட உறவாடுறதில வஞ்சகம் இருக்கிறதில்லை அப்பாவித்தனமா எல்லாக்கதையையும் கதைச்சுப்போடுவினம். மனசுக்க ஒண்டையும் வச்சுக் கொள்ள மாட்டினம். திண்டு குடிக்கிறதிலயும் சாதிசனம் ஏழைபாளை எண்ட விவரம் இருக்காது. பயில்வான் என்ன விதிவிலக்கே கூட்டிக்கொண்டு முயல் உடும்பு மரஅணில் ஏதும் பாப்பம் எண்டு வெளிக்கிட்டார். "அண்ணையாணை நானும் வாறன்" எண்டு பிடியாளா நிண்டான். அப்பு கூட்டிக்கொண்டு போனா; பின்னேரம் அஞ்சு மணியிருக்கும் அப்பு மட்டும் களைச்சு விழுந்து வாறார். பயில்வானையும் நாயளையுங் காணேல்ல. அப்பு வந்த வரத்தில கேட்டது,

" பயில்வான் வரயில்லயே"

" என்னப்பா உங்களோடதானே வந்தவன் இஞ்ச வந்து கேக்கிறியள்."

அப்பு சோந்து போய் இருந்தார். "வெறுவாய்க்கில கெடுவான் சின்னாத்துப் பள்ளத்துக்கால இறங்கி மேடேற நாயளக்கூட்டிக்கொண்டு முன்னுக்குப் போட்டானப்பா நானும் கூப்பிட்டுக்கூப்பிட்டு உக்கிலிட்டுத்தான் பாத்தன். ச்சைக். அவனைத் தேடினதில வாணாள் போட்டுது. அடப்பாவி எங்கதான் போனான் இருளப்போகுதே.."என்றவர் திரும்பி என்னைப்பாத்து எடி பிள்ளை

**மட்டக்களப்பார் மக்களோட உறவாடுறதில வஞ்சகம் இருக்கிறதில்லை அப்பாவித்தனமா எல்லாக்கதையையும் கதைச்சுப்போடுவினம்**

கொஞ்சங்கூட கூச்சநாச்சம் இல்லாம, அடிமடிக்க கைய வச்சு நாங்கள் திண்டுகொண்டிருக்கிற கடலையப் பறிச்சுத்தின்னுவான், அம்மா கண்டா துலைஞ்சான் பொம்பிளைப் பிள்ளையளோட என்னடா கைச்சேட்டை எண்டுதான் கிளிப்பா. அதுக்கும் சிரிப்புத்தான். ஆனா பாவம் அப்பு ஒருநாள் வேட்டைநாயள் ரெண்டையும்

ஓடிப்போய் அருணாசலங்கடையில நாலு பெற்றி வாங்கிக்கொண்டா லைற்றுக்குப்போட மெய்யே துரைசிங்கனையும் சேனாதியையும் கூப்பிடப்பா போய்த்திரும்பவும் தேட " அப்பு மளமளண்டு ஆளத்திரட்டிக் கொண்டு அவனை காட்டுக்கை தேட வெளிக்கிடுறார்.

"அட நாயளையுங் காணேல்லயே அது என்னை விட்டு விலகாதே" அப்பு அங்கலாச்சார். அவற்ற கதையப் பாத்தா... அவன் எப்பிடிப்போனாலும் பரவாயில்ல அவற்ற செல்ல நாயள் வந்தாக் காணுமெண்டமாதிரி இருக்கு

கொண்டு கிடக்கிது மற்றது? சோத்தை அள்ளி அதுக்கு சாலப்பிடக்குடுத்தம் பிறகு ஒராள் வீட்டுக்கு ஓடிப்போய் நாயில ஒண்டு வந்த கதைய சொன்னதுதான் தாமதம் எல்லாரும் வருகினம். வந்து நாயைக்கூப்பிட நாய் காட்டுக்குள்ள இறங்கீற்றது அதைத் தொடர்ந்து போனா காட்டுக்கை பயில்வான் பேச்சு

### மட்டக்களப்பான் மரணத்தில் ஊரே அழுத கதை

எங்களுக்கா... பயில்வான் எங்கயும் காட்டு முறுகங்களிட்ட மாட்டியிருப்பானோ எண்ட பயம். இரவு தண்ணியும் எடுத்துக் கொண்டு ஒரு குழுவாப் போச்சினம்; ஆனா சாமம் போல அவை மட்டுந்தான் திரும்பி வருகினம். இதுக்குள்ள செய்தி ஊரெல்லாம் பரவிவிட்டுது.

இந்தக்காலமெண்டா அவரவர் தன்தன் வேலையப் பாத்துக் கொண்டு போயிருவினம்; ஆனா அந்தக்காலத்தில் அப்பிடியில்ல. ஒரு ஊரெண்டா அங்க ஒவ்வொருமனிசரும் உறவுதான். ஆனா எங்கட மட்டக்களப்பு அப்பா நான் முதல் அத்தியாயத்தில சொன்னனே நெத்தியில பொட்டு வைச்சுக் கொண்டு திரியிறவர். அவர் மட்டுந்தான் ஆறுதல் சொன்னார்.

" அவன் வருவான் ஏதோ திகைப்பூண்டை மிதிச்சிட்டான் போல அலைஞ்சிட்டு அவனா விளங்கினா வருவான். நாயளையும் தனக்குதவிக்கு வாலாயம் பண்ணியிருப்பான் பயப்பிடதையுங்க" எண்டு.

மற்ற நாள் விடியப்பறமா குரங்குக் காவலுக்கு சேனைப்புலவுக்கு நானும் தங்கச்சியும் போனம். கட்டுச் சோத்தை பரணில வச்சிட்டு நெருப்பு மூட்டத்தில தணலெடுக்க வேலிக்கரைக்கு போயிற்று வாறம்; எங்கட டைகர். வேட்டைநாயில ஒண்டு பரணுக்கு கீழ வந்து இளைச்சுக்

மூச்சில்லாம கிடக்கிறானாம். மற்றநாய் அவனுக்கு பக்கத்தில நிக்குது.

தூக்கிக் கொண்டு வந்தா... மகேசக்கா அப்புவுக்குத்தான் பேச்சு. என்ன மயிருக்கு அவனக் கொண்டு போனநீ" எண்டு. பாவம் அவன், ஆள் தேற பத்துப்பன்னெண்டு நாளாச்சு, அதுவரைக்கும் அவனை மகேசக்கா கண்ணுக்கதான் வச்சுக் காப்பாத்தினா. இப்பிடியே அந்த வருசம் மழை வெள்ளம் பெருகி வயலெல்லாம் மூடிப்பாயுது. மகேசக்காவின்ர சின்னவள், திடீரெண்டு வந்த வெள்ளத்தில வெட்டிக் கட்டாம வச்சிருந்த கிணத்தில தண்ணியள்ளப் போனாள் இவன் என்ன நினைச்சானோ பொறு பிள்ளை நான் வாறன் எண்டு குடத்தை வாங்கிக் கொண்டு போனவன். ஒருகுடம் தண்ணி கொண்டு வந்து வச்சிட்டு மாடுகளையும் பட்டிக்க விட்டிட்டு வாறனெண்டிட்டு ஓடினவன், கிணத்துக்கரையில போகயிக்க கரை ஊறிக்கிடந்த கிணறு இடிஞ்சு அவனையுங் கொண்டு உள்ளுக்க போட்டுது. விடிய மழை நிண்டபிறகுதான் மண்ணிடிஞ்சு கிணறு தூந்து கிடந்ததை கண்டவை அப்ப உவன் பயில்வான் எங்கயெண்டு தேடினதுதான். மூண்டாந்நாள் கிணத்து தண்ணிக்கால மணம் மேல வந்திட்டுது. அதுக்குப்பிறகுதான் பிணம் மேல வந்துது. மகேசக்கா மட்டுமில்ல ஊரே அழுததை நான் அண்டைக்குத்தான் கண்டன்.

# மட்டக்களப்பில் இருந்து ஒரு தமிழ் முழுநீளத் திரைப்படம்

-- சக்தி --

தமிழில் இலங்கைச் சினிமாத்துறை பெரிதாக வளர்ச்சி பெறவில்லை. காரணம் இந்திய சினிமாக்களின் செல்வாக்கு மற்றும் அதனுடன் போட்டிபோட முடியாதநிலை. ஆதனால் ஒரு சில கலைப்படைப்புகள் மாத்திரம் வெளிவந்து கொண்டிருந்தாலும் அவை சோபிக்கவில்லை, பிரகாசிக்கவில்லை. அதனுடன் போர்ச்சூழலும் நிலைமையை மோசமாக்கிவிட்டிருக்கிறது. அந்த நிலையில் வெறும் ஐந்து திரைப்படங்களே கடந்த முப்பது ஆண்டுகளில் இலங்கையில் தமிழில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





"சத்தியயுகம்" எனும் முழு நீளத் திரைப்படத்தின் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை (24) மாலை மட்டக்களப்பு தேத்தாத்தீவு சிவகலை வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

த. விமலநாதனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் பணிப்பாளர் நாயகம் சி.அமலநாதன், நிதியமைச்சின் மேலதிக பணிப்பாளர் நாயகம் மூ.கோபாலரெத்தினம், கிழக்கு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மனோகரன், கிழக்குப் பல்கலைக் கழக கலை கலாசார முன்னாள் கலாசார பீடாதிபதி க.இராஜேந்திரம், களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் கு.சுகுணன் மற்றும், கலைஞர்கள், அரச அதிகாரிகள், கிராம பொது மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழ் இளைஞர்கள் அவ்வப்போது குறுந்திரைப்படங்களைத் தயாரித்து வெளியிட்டு வருகின்ற இந்நிலையில் தேத்தாத்தீவுக் கிராமத்தின் கலைஞன் மற்றும் ஓர் ஆசிரியரான அ. ஈழவேந்தன் என்பவர் இந்த முழு நீளத் திரைப்படத்தைத் தயாரித்து, இயக்கி, நடித்துள்ளார்.

விவசாயம், விஞ்ஞானம், எதிர் காலத்தில் விவசாயத்தில் சாதிக்க வேண்டிய விடையங்கள், உள்ளிட்ட சிந்தனையைத் தூண்டக் கூடிய வித்தில் இத்திரைப்படத்தை தாயாரித்துள்ளார் அ.ஈழவேந்தன்.

# கண்டதும் - கேட்டதும்




அரங்க ஆய்வுகூடமும் எங்கள் ஆசான் அரங்கக் கலைப்பீடமும் இணைந்து நடத்திய உலக நாடக தின விழா மார்ச் 27 2018 இல்கண்டதும் கேட்டதும்

**அலுப்பும் சோஉவும் தரும் மயிர் பிழக்கும் நாடக விவாதங்களில் மூடிய அறைகளுக்குள் ஈடுபடுவதை விடுத்து செயலில் தமது நாடக எண்ணங்களை வெட்ட வெளியில் வெளிப்படுத்திய இவ்விளம் குருத்துக்களை வாரி அணைத்து ஆசிகள் கூறி மகிழ்ந்தேன்**

தலைமை தாங்கிய எங்கள் ஆசான் அரங்கக் கலைபீட ஸ்தாபகர் அரவிந்த் ரமேஸ்

சிறிய மாணவர்களின் கன்னி முயற்சி இது. இளம் பிஞ்சுகள் மனதில் உலக நாடக தினத்தையும் அதன் உயரிய நோக்கங்களையும் எடுத்துக்கூறும் முயற்சி இது. சிறியோரான எங்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டி எங்களை வழிப்படுத்துங்கள்





பிரதம விருந்தினர் உரை நிகழ்த்திய மட்டக்களப்புக் கல்வித்திணைக்களப் பணிப்பாளர் பாஸ்கரன்

-------------------------------------

நாடகம் மாணவர் ஆளுமைகளை வளர்ப்பதாகையினால் நாடகமும் அரங்கியலும் முக்கியமானதோர் பாடமாகும். எமது வலயத்தில் மாணவர்களுக்கான செயல் முறைப்பயிற்சிகள் மிக ஒழுங்காக வழங்கப்படுகின்றன. நான் அதனை நேரில் சென்று அவதானித்துள்ளேன். அதன் பலாபலங்களையும் கண்டுள்ளேன்

ஜெகநாதன், ஆசிரியர், துறை நீலாவணை மஹா வித்தியாலயம்

நாடகக் கல்வி புரிந்துணர்வையும்,மனித நேயத்தையும் தன்னம்பிக்கையையும் வளர்ப்பது. மனிதரோடு மனிதர் உறவாடும் கலையாதலால் மனிதகுலம் உள்ளவரை அது வாழும். தொழிநுட்பங்களுக்குள் அமிழ்ந்து விடும் மாணவர்களை மீட்டெடுக்கும் பாடம் இந்த நாடக பாடமே

குணசீலன், சேவைகால ஆசிரியர் நாடகமும் அரங்கியலும், கல்முனை கல்வி வலயம்

இலங்கையில் முதன் முதலில் உலகநாடக தின விழாவை 1998 ஆரம்பித்து வைத்தது கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையே. அதன் பின்னரே மற்றவர்கள் கொண்டாடினர். ஒரு வாரகாலம் அது நடைபெறும். உள்ளூர்க் கூத்துக் கலைஞர்களும், மாணவர்களும், வெளி நாடக மன்றங்களும் இணையும் கோலாகலமான பெரு விழா அது. திறமாகத் திட்டமிடப்பட்டு வருடம் தோறும் நடைபெற்று வந்த விழா அது, பலரை உருவாக்கிய விழா அது...இப்போது அது நடைபெறாமை துரதிஸ்டமே.

மௌனகுரு
கடந்த ஆறு ஆண்டுகளில் நாடகமும் அரங்கியலும் ஒரு பாடமாகப் பயிலும் 10,000 மாணவர்களை நாம் சந்தித்துள்ளோம்' இதனை எமக்குக் கல்வித்திணைகளம் ஒழுங்கு செய்து தந்தது, இதன் மூலகர்த்தா அழகியற் கல்விப்பணிப்பாளர் ஜெயசிறிபவன். அவருக்கு மாணவர் உலகு கடமைபட்டுள்ளது. அதில் நாமும் அரங்க ஆய்வுகூட மாணவர்களும் வளவாளர்களாகச் செயற்பட்டோம். ,நமது மாணவர்களின் பலம் பலஹீனங்களை நேரடியாகக் கண்டோம். அவர்களிற் பலர் புறையிலர் கோழிக்குஞ்சுகள் போல உடல் வலுவும் உள வலுவும் அற்றவராக இருந்த அவலம் கண்டோம். பயிற்சிப்பட்டறை மூலம் அவர்களுக்கு உள வலுவும் உடல் வலுவும் ஊட்டினோம். அந்தப்பயிற்சிப்பட்டறையின் கடைசிகொழுந்துகளே இன்று மே மாதம் முழு அளவில் மேடையேறவுள்ள புதியதொரு வீடு நாடகத்தின் சில பகுதிகளை இங்கு ஆற்றுகை செய்கிறார்கள்.

நாடகக்கல்வியால் ஒரு மனிதன் மனிதாக வாழமுடியும். முடியாவிட்டால் அந்த நாடகக் கல்வி நமக்குத் தேவையில்லை.

மேடை நாடகப்பாடல்கள் பாடிய திருமதி சுகிர்தாரீதரன்

அரங்க ஆய்வுகூடத்தில் நான் பயின்று மேடையேற்றிய இராம நாடகம் நொண்டி நாடகம், இராவணேசன் ஆகிய நாடகங்களிலிருந்து மூன்று பாடல்களைப் பாடுகிறேன், அரங்க ஆய்வுகூடம் எனக்களித்த பயிற்சியின் வெளிப்பாடுகளே இந்தப்பாடல்கள்.

புதியதொரு வீடு நாடகக்காட்சிகளுக்கு முன்னர் உரை நிகழ்த்திய மாணவி தக்சாயினி

நாங்கள் நாடகப்பயிற்சி வகுப்பில் பல திறன்களைப் பெற்றுக்கொண்டோம். முக்கியமாக புதியதொருவீடு நாடகம் பழக ஆரம்பித்தபின்னரேயே நாடகத்தின் காத்திரத் தன்மையை அறிந்தேன். மௌனகுரு சேரின் பயிற்சி முறைகள் எங்களுக்குப் புதியனவாக இருந்தன எங்கள் உடலின் பலஹீனங்களை எமக்குணர்த்தின. எனக்குள் ஒரு மாற்றம் ஏற்பட்டதை நான் உணர்ந்தேன்

வரவேற்புப் பாடல் பாடிய மாணவர்கள்

சமூக அழுக்கைத் துடைத்தேயெறிய நாடகத்தைக் கையேந்தினோம்

நாடகதின விழா ஆரம்பத்தில் பறையுடன் மேடைக்கு அணி வகுத்துவந்த மணவர்கள் அரை வட்ட வடிவில் நின்று குத்து விளக்கில் ஒவ்வொருவரும் சுடரேற்றும் போதும் பறை ஒலி செய்தனர்

பறை ஒலியுடன் வரவேற்புப் பாடலைப் பாடினர்

சுகிர்தா பாடியவை:
சிறத்தராமர் வனத்தில் போற சிறப்பைப்பாரையா எனும் வடமோடி இராம நாடகப் பாடலும்

ராஜ ராஜ ராஜர் போற்றும் எனும் வடமோடி தழுவிய நவீன நாடகமான இராவணேசன் வரவுப்பாடலும்

அன்னமே பசுங்கிளியே எனும் தென்மோடி நொண்டி நாடகப் பாடலும் பாடினார்

சுகிர்தாவின் குரலுக்குக் கட்டுப்படாதோர் யாரோ?

பலத்த கைதட்டல்களைப்பெற்றார்



தாம் பழகிக்கொண்டிருக்கின்ற புதியதொரு வீட்டடி முதற் காட்சியில் வரும்

சிறு நண்டு மணல் மீது படம் ஒன்று கீறும் எனும் பாடலுக்கும்

வலை இழுக்கும் பாடலுக்கும்

வெள்ளப்பிலே எழுந்து வேறு தொழில் பார்க்கவில்லை எனும் பாடலுக்கும்

மின்னல் மின்னல் மின்னல்

கன்னம் தெறிக்கும்படி இடி இடி இடி

காற்று மத்தாய்க்கடலை கடைகிறது

பற்றிப் பிடுங்கிப் பளீரென்றுடல் ஒன்றை

எற்றி சுழற்றி எறியும் பெரும் சூறை

எனும் சந்தப்பாடலுக்கும் மாணவர் தம் உடல் மொழிமூலம் உருக்கொடுத்தனர்

ஆற்றுகை முடிய எழுந்த கரவொலில் பார்வையாளர்ல்களை அவ்வாற்றுகை ஈர்த்தமையைக் காட்டியது.

நாடக விழாவுக்கு முன் வரிசையில் வந்திருந்து ஆற்றுகையைப் பார்த்து ரசித்ததுடன் மாணவர்களுக்கு மேடைக்குச் சென்று மாணவர்களை அன்புடன் கைகுலுக்கி ஆசீர்வாதங்களும் வழங்கிச் சென்றனர் மூத்த பெரிய நாடகக்காரகள்.

அவர்கள் விபுலானந்த அழகியற்கற்கைகள் நிறுவக விரிவுரையாளர்களான விமல்ராஜ், மோகனதாசன், தருமலிங்கம், செந்தூரன், பிரதீப், துஜன், சஹிதா ஆகியோர்.

இன்னும் கிழக்குபல்கலைக்கழக முன்னாள் நாடக மாணவர்களான ஹேமா போன்றோரும் பாடசாலையின் சிரேஸ்ட நடன ஆசிரியைகளான நேரு, கயல்விழி போன்றோரும் நாடகம் அரங்கியல் பாடம் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களும் இன்னும் பலரும் காணப்பட்டனர்

தம்பதி சமேதராக வந்து முன் வரிசையில் அமர்ந்திருந்து குத்து விளக்கேற்றி ஆற்றுகைகளை ரசித்து மேடையேறி மாணவர்களை ஆசீர்வதித்து சென்றனர் பீ.பீ.ஸீயில் பணிபுரிந்தவரும் இன்றை அரங்க பத்திரிகை ஆசிரியருமான சீவகன். அவரின் மனைவியார் பரமேஸ்வரி என்னிடம் இம்மாணவர்களின் திறன்களைத் தாம் நடத்தும் வானொலியில் பயன்படுத்தப்போவதாகக் கூறினார், மாணவர்களைச் சந்தித்து ஆசி வழங்கினார்.

ஆற்றுகைகள் முடிய பார்வையளர்கள் அனைவரும் மேடையேறி அப்பிஞ்சுகளைக் கைகொடுத்து பாராட்டி மகிழ்ந்தனர்.

பிள்ளைகளின் பெற்றோர் எம்மிடம் தனியாக வந்து நன்றி தெரிவித்ததுடன் தமது பிள்ளைகளின் திறமைகளைத் தாம் அறியாதிருந்ததாகக் கூறினர்

சபையை நிறைத்திருந்தவர்கள் எழுபது சதவீதம் மாணவர்களே.

அதுவே நல்லது.

இளம் பிள்ளைகளிடம் உலக நாடக தினச் செய்தி சென்றுள்ளது.

செல்ல வேண்டியவர்களிடம் செய்தி சென்றுள்ளது.

அறியாதிருந்த நாடக தினம் பின்னர் பல்கலைக்கழகங்களால் கொண்டாடப்பட்டு, பின்னர் நாடக நிறுவனங்களால் கொண்டாடப்பட்டு, பின்னர் அரசால் கொண்டாடப்பட்டது. அது இன்று மாணவர்களால் கொண்டாடப்படுவது மிக முக்கியமான ஒரு விடயமாக எனக்குத் தோன்றுகின்றது.

அலுப்பும் சோர்வும் தரும் மயிர் பிழக்கும் நாடக விவாதங்களில் மூடிய அறைகளுக்குள் ஈடுபடுவதை விடுத்து செயலில் தமது நாடக எண்ணங்களை வெட்ட வெளியில் வெளிப்படுத்திய இவ்விளம் குருத்துக்களை வாரி அணைத்து ஆசிகள் கூறி மகிழ்ந்தேன்.



# கிழக்கிலங்கையின் கலை இலக்கியச் செல்நெறி (பகுதி 06)

## (அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் ஏற்பாட்டில் மெல்பேர்ண் நகரில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்பில் செங்கதிரோன் த. கோபாலகிருஷ்ணன் ஆற்றிய உரையின் தொடர்ச்சி...)

இதுவரை நாம் பார்த்த விடயங்கள் பெரும்பாலும் தமிழ்மொழியையும் தமிழர்களையும் தமிழர் பிரதேசங்களையும் சார்ந்த கிழக்கிலங்கைக் கலை இலக்கியச் செயற்பாடுகளையே உள்ளடக்கியிருந்தது. ஆனால் கிழக்கிலங்கை என்பது தமிழர், முஸ்லீம், சிங்களவர் மற்றும் பறங்கியர் சமூகத்தையும் மதரீதியாக இந்து, இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்தவம் என்பவற்றையும் உள்ளடக்கியது. எனவே இவை பற்றிய சில குறிப்புக்களையாவது நாம் கூறாவிட்டால் அது குற்றமாகிவிடும்.

முஸ்லீம்களின் பாரம்பரியக் கலைகளான கோலாட்டம், களிகம்பு என்பன இப்போதும் வழக்கிலுள்ளன. "றபானம்" எனும் தோல்வாத்தியக் கருவி இசைத்துப் பாடல்கள் இசைப்பதும் உண்டு. முஸ்லீம்களின் வீட்டு வைபவங்களான "சுன்னத்துக் கல்யாணம்" மற்றும் திருமண நிகழ்வுகளிலும் மீலாத் விழாக்களிலும் இவை ஆற்றப்படுவதுண்டு.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனையிலே "கடற்கரைப்பள்ளி" எனுமிடத்தில் வருடாந்தம் நடைபெறும் விழாக்காலங்களிலும் முஸ்லீம்களின் பாரம்பரியக் கலை நிகழ்வுகளைக் கண்டுகளிக்கலாம். தமிழ் நாட்டில் பிரபல்யம் பெற்ற நாஹூர்ஹனிபா பாணியில் இஸ்லாமிய கீதங்களை இயற்றி இசையமைத்துப் பாடும் மரபு முஸ்லீம் பிரதேசங்களில் வளர்ந்து வருகின்றது.

கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை "கிறிஸ்மஸ்" பண்டிகைக் காலத்தில் வீடு வீடாகச் சென்று நள்ளிரவில் "கரோல்" எனும் கிறிஸ்தவ கீதங்களைக் கூட்டமாகச் சென்று இசைக்கும் வழக்கம் இன்றும் உள்ளது. மேலும் கிறிஸ்தவ அமைப்புகள் யேசுபிரானின் வாழ்க்கைச் சரிதச் சம்பவங்களை விளக்கும் வகையில் நாட்டுக் கூத்துக்களையும் நவீனமயப்படுத்தப் பெற்ற கூத்துருவ நாடகங்களையும் தயாரித்து அரங்கேற்றுதல் உண்டு. கூத்துக்கலையைப் பேணுவதிலும் அதனை நவீனமயப்படுத்துவதிலும் கிறிஸ்தவ அமைப்புக்களின் பங்களிப்புக் கணிசமானது.

சிங்களவர்களைப் பொறுத்தவரை அவர்களது பாரம்பரிய நடன வகைகளில் ஒன்றான "தொயில" நடனம் வெசாக் பண்டிகைக் காலத்தில் அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில், பாணமை போன்ற தமிழர்களும் சிங்களவர்களும் கலந்து வாழும் கிராமங்களில் ஊர்வலங்களிலும் தனி இடங்களிலும் நடைபெறுவது உண்டு.

சுமார் 500 வருடங்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் குடியேறிய போர்த்துக்கீசரின் பரம்பரை வழித் தோன்றல்கள் இன்னும் பறங்கியர் சமூகமாக மட்டக்களப்பில் உள்ளனர். 'Burghers Association' என்ற அமைப்பையும் அவர்கள் கொண்டுள்ளனர். கத்தோலிக்க கிறிஸ்தவர்களாக உள்ள இவர்கள் இன்றும் கூட வீட்டில்; தங்கள் தாய்மொழி போர்த்துக்கீச மொழியையே பேசுகின்றனர்.

புலம்பெயர் நாடுகளில் வீட்டில் வேற்றுமொழி பேசும் புலம்பெயர் தமிழர்கள் மட்டக்களப்பில் வாழும் இப்பறங்கியர் சமூகத்தை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும். இவர்கள் தங்கள் பாரம்பரிய நடனமான "கப்றிஞ்ஞா – பைலா" நடனத்தை இன்றும் கைவிடவில்லை என்பது இச் சமூகத்தின் பிறிதொரு பரிமாணம் ஆகும். கிறிஸ்மஸ் பண்டிகையின் போதும் திருமண வைபவங்களிலும் இந்த நடனத்தை ஆடுகிறார்கள்.

நிறைவாக "கிழக்கிலங்கையின் கலை இலக்கியச் செல்நெறி" பற்றிய மிக முக்கியமான மனப்பதிவொன்றினை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என அவாவுறுகின்றேன்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா ஆயுதப்படையினருக்கும் இடையிலான மோதல்காலத்தில் கிழக்கிலங்கையின் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் கலை இலக்கியச் செயற்பாடுகள் மந்தமாகவே இடம் பெற்றன. வெளிப்பாட்டுச் சுதந்திரம் இல்லாமையும் சுதந்திரமான நடமாட்டம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையும் பிரதான காரணங்கள். அதேவேளை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அவர்களுடைய முழுக்கட்டுப்பாட்டின் கீழ் கலை இலக்கியச் செயற்பாடுகள் பரவலாக இடம்பெற்றன. ஆனால் அவையாவும் ஆயுதக் கலாசாரத்தை ஊக்குவிக்கவும் - பக்கச்சார்புடையனவாகவும் - தனிநபர் வழிபாட்டை நோக்கியும் - ஏகாதிபத்திய சார்புத் தளத்தில் குறுந்தமிழ்த் தேசியவாதத்தை வளர்த்தெடுப்பதற்காகவும் - இளைஞர்களை உணர்ச்சியூட்டி உசுப்பேற்றிப் போருக்குத் தூண்டுவதாகவும் - பின்னாளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தேர்தல் காலங்களில் வாக்குச் சேகரிப்பதற்காகவும் என இருந்தனவே தவிர அவற்றினால் எந்தச் சமூகப் பயன்பாடும் விளையவில்லை. ஆனால்




2009 மே மாதம் மோதல் முடிவுக்கு வந்த பின்னர் இத்தகைய துர்ப்பாக்கியச் சூழல்கள் இரு கட்டுபாட்டுப்பகுதிகளிலும் இல்லாமற் போய்விட்டன.

இப்போது ஜனநாயகச் சூழலும் - ஆயுத மோதல்கள் அற்ற சூழலும் - வெளிப்பாட்டுச் சுதந்திரமும் - சுதந்திரமான நடமாட்டமும் உள்ளதால் சமூக நோக்குடனான கலை இலக்கியச் செயற்பாடுகள் மீண்டும் துளிர் விட்டுள்ளன.

யுத்தத்திற்கு எதிரான – அதிகாரப் போட்டிக்கு எதிரான – சமாதானத்தை நோக்கிய – யுத்த அவலங்களினால் நொந்து போயுள்ள மனித மனங்களை ஆசுவாசப்படுத்தக்கூடிய சமூகப்பயன்பாடுமிக்க கலை இலக்கிய வெளிப்பாடுகளே கிழக்கிலங்கையின் இன்றைய கலை இலக்கியச் செல்நெறி ஆகும். இச்செல்நெறியின் குறியீட்டு அடையாளங்களே அண்மைக்காலத்தில் மேடையேற்றப்பெற்ற பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களின் ஆறாவது தலைமுறை "இராவணேசன்" மற்றும் "காண்டவதகனம்" முதலிய கூத்துருவ நாடகங்களும், தற்போது நூலாக வெளிவந்துள்ள அவரின் "சார்வாகன்" குறுநாவலும், மட்டக்களப்பு Fine Arts Club தயாரித்து அளித்த "தழும்பு" மேடைநாடகமுமாகும். இத்தகைய கலை இலக்கியச் செல்நெறியே சமகாலத் தேவையுமாகும்.

# ஸ்ரீராமகிருஸ்ணரின் 183வது ஜனனதினப் பெருவிழா காரைதீவு விழாக்கோலம்!

–காரைதீவு நிருபர் சகா–



ஸ்ரீஇராமகிருஸ்ண பரமஹம்சரின் 183வது ஜனன தினவிழா (23) வெள்ளிக்கிழமை காலை காரைதீவில் ஊர்வலம், அன்னதானம் என்பவற்றுடன் நடைபெற்றது.

காரைதீவு இந்துசமய விருத்திச்சங்கமும் பொதுமக்களும் இணைந்து தலைவர் எஸ். மணிமாறன் தலைமையில் ஏற்பாடு செய்த இந்த விழாவால் ஊர் விழாக்கோலம் பூண்டு காணப்பட்டது.
நிகழ்விற்கு பிரதம அதிதியாக இராமகிருஸ்ணமிசனின் மட்டு. மாநிலத்தலைவர் ஸ்ரீமத் சுவாமி பிரபு பிரேமானந்தா மஹராஜ் கலந்து சிறப்பித்தார்.

காலையில் சாரதா சிறுமியர் இல்லத்திலிருந்து நன்கு அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீராமகிருஸ்ணர் மற்றும் அன்னை சாரதா சுவாமி விவேகாநந்தர் ஆகியோரின் 3 ரதங்களின் ஊர்வலம் 07 பாடசாலை மாணவர்களின் பங்குபற்றுதலோடு நடைபெற்றது.

# 10 ஆவது ஆண்டில் "தென்றல்" சஞ்சிகை

மட்டக்களப்பிலிருந்து காலாண்டுச் சஞ்சிகையாக வெளிவந்து கொண்டிருக்கும் "தென்றல் சஞ்சிகை" 06.04.2018இல் பத்தாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது.

இவ்வேளையில் கலை இலக்கிய சேவையாற்றும் "தென்றலை" நாமும் வாழ்த்துவோம்.

தென்றல் இதழில் தொடர்புகளுக்கு:- ஆசிரியர், "தென்றல் சஞ்சிகை", 44/1, பழைய கல்முனை வீதி, கல்லடி, மட்டக்களப்பு.

தொலைபேசி:-0776983597










FCC வழங்கும் இவ்வார சிந்தனை!

நாம் இன்று இப்படி இருப்பதற்கு நாமே பொறுப்பு.
இனி எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ, அப்படி நம்மை மாற்றுவதற்கான ஆற்றலும் நம்மிடமே உள்ளது.
– விவேகானந்தர் –

